# தாமரைக்குளம்



கோட்டயம் புஷ்பநாத்

தமிழில் ரா. வேங்கடசாமி

# தாமரைக் குளம்

மூலம் : கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்

ரா. வேங்கடசாமி

வெளியிடுவோர்

**புத்தகப் பூங்கா**

*17, பூரம் பிரகாசம் சாலை,*

*ராயப்பேட்டை, சென்னை - 14.*

போன் : *8240084*

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **தாமரைக்குளம்** |
| ஆசிரியர் | : | **மூலம்: கோட்டயம் புஷ்பநாத்**<br>**தமிழில் ரா. வேங்கடசாமி** |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | ஏப்ரல், 2000 |
| மொழி | : | தமிழ் |
| நூல் அளவு | : | 1×8 கிரவுன் |
| தாள் | : | 10.7 kg. வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | 200 |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| வெளியீடு | : | புத்தகப் பூங்கா<br>17, பூரம் பிரகாசம் சாலை,<br>ராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை : ரூ. 40-00**

அச்சிட்டோர் :

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்
12, கஜபதி தெரு, சென்னை-5

# தாமரைக் குளம்

## 1

''அம்மா ஒரு கடிதம் வந்திருக்கிறது'' என்றாள் கிளாரா. தபால்காரர் கொடுத்த கடிதத்தை வாங்கிக் கொண்டு போய் தாய் சோபியாவிடம் கொடுக்கவே, அதை வாங்கிய தாய். அதை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பார்த்தாள்—

கிளாரா பதினாறு வயது அழகுப் பெட்டகம்—

சிவந்த உதடுகளும், காந்தக் கண்களும், வாளிப்பான உடலும் அவளுக்குச் சொந்தம்—

'தாமரைக் குளம்' என்று அழைக்கப்படும் அந்தப் பெரிய மாளிகை ஒரு காலத்தில் மிகவும் பிரப்லமானது. நாட்டையாண்ட மன்னர்களின் மந்திரப் பிரதானிகள் வாழ்ந்த இடம் இது!

வெளிநாட்டுக்காரர்கள் இங்கே வந்து பலரைக் கிருஸ்துவ மதத்தினராக மாற்றியபோது, ஒரு பிரபல நம்பூதிரி குடும்பமும் அந்த வலையில் வீழ்ந்தது. அந்த நம்பூதிரியின் குடும்பம் மந்திர தந்திரங்களில் நல்ல பழக்கம் கொண்டவர்களாக இருந்

தனர். பல விதமான மாந்திரீக கிரந்தங்கள் அந்த மாளிகையில் இருந்தன. இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ''யூதா'' என்பவர் மிகப்பெரிய மந்திரவாதியாகத் திகழ்ந்தார். பல விதமான துர்மந்திரங்களை பிரயோகப் படுத்தியதால் யூதாவைக் கண்டு மக்கள் பயந்தனர்.

தன் சொந்த பூஜை அறையில் இருந்து கொண்டே வெகு தூரத்தில் உள்ள நபரை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பின், தன் இஷ்டப்படி அந்த மனிதனை ஆட்டும் சக்தி படைத்தவன் தான் இந்த யூதா!

கணவனுடன் படுத்துக் கொண்டு இருக்கும் பெண்ணைத் தன் படுக்கைக்கு, தனது சக்தியால் வரவழைத்து, அவளிடம் இன்பம் அனுபவிக்கும் சக்தியையும் படைத்தவன்—

ஒரு தடவை யூதா அதிபயங்கரமான ஒரு வேலையைச் செய்தார்—அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னன் பெயர் கோத வர்மா—இளம் வயதுக்காரர். அவருக்குப் பல இடங்களில் இருந்து பெண் கொடுக்க பலர் முன் வந்தனர். ஆனால் வடக்குப் பக்கத்தில் இருந்து வந்த ஒரு ராஜகுமாரியை,ராஜாவுக்குப் பார்த்தார்கள்—மன்னனின் திருமணம் என்பதால் ஊரே உற்சவ கோலம் பூண்டது. ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் ராஜகுமாரி வந்தாள்—

ராஜகுமாரி பேரழகியாக இருந்தாள்—வார்த்தை வர்ணிக்க இயலாத அளவுக்கு அவள் அழகியாக இருந்தாள்—தேவதை போலிருந்தாள் எனலாம் மிகவும் சுருக்கமாக!

தங்க ஆபரணங்களும், தங்க ஜரிகையோடு கட்டிய ஆடைகளையும் அவள் அணிந்து இருந்தாள்..

பிரபலமான கோவில் ஒன்றில் அவர்கள் திருமணம் நடந்தது. முறைப்படி, ராணிக்குத் தாலி கட்டினார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க அவர்கள் அரண்மனைக்குள் சென்றார்கள்.

இந்த வைபோகத்தில் கலந்து கொண்ட யூதாவின் மனதை முழுமையாக இராஜகுமாரி ஆக்ரமித்து இருந்தாள்—அவரால் அவளை மறக்கவே முடியவில்லை.

தன்னுடைய சந்தன மரக்கட்டிலில் யூதா போய்ப் படுத்தார். இரவு பரவிக் கொண்டு வந்தது. இந்த நேரத்தில் ராஜாவும் ராணியும் முதலிரவைக் கொண்டாட தங்களது படுக்கை அறைக்குள் போயிருப்பார்கள் என அவரது மனம் நினைத்தது.

அதே சமயம் எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியில் அவர் தனது உருவத்தை ஒரு தடவை பார்த்துக் கொண்டார்.

கழுத்துவரை நீண்ட நரைத்த தலைமுடி—குறுகிய நெற்றி. உள்ளடங்கிய கண்கள்—பெரிய மூக்கு—குகை போன்ற மூக்கு துவாரங்கள்—முகத்தில் இங்குமங்குமாக வளர்ந்திருந்த தாடியும் மீசையும்—எலும்புகள் தெரிந்த குறுகிய மார்பு. மொத்தத்தில் அவரது உடல் அமைப்பு அசிங்கமானது.

தன் விரலால் கண்ணாடியில் ஒரு வட்டம் வரைந்தார்—வட்டம் தெளிவாகிய பின்—தன் வலது கையை அந்த வட்டத்திற்குள் பதித்தார்.

உதடுகள் மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கின—

சில வினாடிகளில் ராஜாவின் படுக்கை அதை அந்த வட்டத்திற்குள் தெளிவாகத் தெரிந்தது—

ராஜாவும், ராணியும் முதலிரவு இன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருந்தனர்.

இதை வக்ரமாகப் பார்த்துக் கொண்டிருந்த யூதாவினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதனால் கொடுமையான ஒரு மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்—

மந்திரங்கள் ராஜாவின் அந்தரங்க அறையை அடைந்த மறுவினாடியே ராஜா மயங்கியது போலச் சாய்ந்தார். படுக்கையில் இருந்து எழுந்த ராணி தனது நிர்வாண உடலை நன்றாகப் போர்த்திக் கொண்டு கட்டிலை விட்டு இறங்கினாள்.

யாரோ தன்னை வழி நடத்துவது போல, அவள் இருளில் நடக்கத் தொடங்கினாள்—

அவளை யாரும் பார்க்கவில்லை.

அவளைச் சுற்றி பனி போன்ற ஒரு போர்வை—

நடந்து வந்தவள் நேராக யூதாவின் வாயிற்படியில் வந்து நின்றாள்—

யூதா அவளைத் தன்படுக்கை அறைக்குள் அழைத்துப் போனார்.

யூதாவைக் கண்டு அவள் பயந்து நடுங்கினாள்.

ஆனால் அவரது மந்திரத்திற்கு முன்னால் அவளால் குரல் எழுப்ப முடியவில்லை.

தன் படுக்கையில் அவளைக் கிடத்தின மந்திரவாதி, அவளை சின்னா பின்னமாக்கத் தொடங்கினார்—தனது இச்சை தீர்ந்தவுடன் ராஜகுமாரியை பழையபடி அரண்மனை படுக்கை அறைக்கு அனுப்பி விட்டார்.

காலையில் எழுந்த ராஜா, ராணியின் மேனியைப் பார்த்து மிகவும் வியப்படைந்தார்— உதடுகளில் காயம். இரத்தம் வந்து காய்ந்து இருந்தது—கண்ணீரால் நனைந்த

கன்னங்கள்— திடுக்கிட்ட ராஜா, அவளை எழுப்பிக் கேட்டபோது, ஒரு கெட்ட கனவு கண்டதைப் போல், அவள் நடந்தவற்றைச் சொன்னாள்—

ராஜாவின் மனதில் தோன்றிய சந்தேகம் மறைய வில்லை. அரண்மனை வைத்தியரையும், அவரது மனைவியையும் வரவழைத்து ராணியைப் பரிசோதிக்கச் சொன்னார். ராஜகுமாரி களங்கப்பட்டு விட்டாள் என்பதை அவர்கள் கண்டு பிடித்து விட்டனர்.

ராஜாவுக்குப்புரிந்தது இது ஒருவனால்தான் முடியும்! யூதாவை உயிரோடு எரித்து விட உத்தரவு கொடுத்தார்.

யூதாவை தேடிக்கொண்டு தாமரைக்குளம் வந்த அதிகாரிகள் அவரைக் காணாமல் திகைத்தார்கள்— ஊரெல்லாம் தேடியும் அவர் கிடைக்க வில்லை.

யூதா தற்கொலைசெய்து கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்

காலம் ஓடியது. 'தாமரைக் குளம்' மாளிகை பாழடைந்து போனது—குடும்பம் நசித்துப் போனது— அதை வாங்கியவர்கள்ஒவ்வொருக்கும்ஏதாவதுஒருதீமை ஏற்பட அவர்கள் மாளிகையை விற்றுக்கொண்டே இருந்தார்கள்.

கடைசியாக தாமரைக்குளத்தை வாங்கியது இராணுவத்தில் கேப்டனாக இருந்த பீட்டர்ஸ் என்பவர்.

அவரது மனைவிதான் சோபியா—

பீட்டர்ஸ், தாமரைக்குளத்திற்குச் சம்பந்தப்பட்ட அவ்வளவு சொத்துக்களையும் வாங்கிவிட்டார்.

அவரும் இறந்து இப்போது நான்கு வருடங்கள் ஆயின.

அவரது சகோதரன் விக்டர் தனது பதினைந்தாவது வயதிலேயே ஊரை விட்டுப் போய் விட்டான்.

இப்போது அவனுக்கு நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயது இருக்கலாம். அவனை சோபியாவும், குழந்தைகளும் பார்த்ததில்லை. என்றாலும், பீட்டர்ஸ் சொன்னதைக் கொண்டு, அவன் நல்லவன் என்றே நினைத்தனர். சகோதரர்கள் இருவருக்கும் பன்னிரெண்டு வயது வித்தியாசம்—

என்றாவது ஒருநாள் விக்டர் திரும்பிவருவான் என்று சோபியா நம்பினாள்.

சோபியாவுக்கு ஐந்து பெண்கள். மூத்தவளுக்கு இருபத்தியோரு வயது. அவளுக்கும் மற்றவர்களுக்கும் ஓரிரு வயது வித்தியாசம்! கிளாராவுக்குப் பத்து வயதாகும் போது, அவளை ஒரு அனாதை விடுதியில் இருந்து சோபியா அழைத்து வந்தாள். கிளாராவின் தாய் ஒரு காலத்தில் இந்த வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள் அவள் இறந்த பின், இரண்டு வயதான கிளாராவை அனாதை விடுதியில் சேர்த்தனர்.

பத்து வயதான போது தன் வீட்டு வேலைக்கே அவளை அழைத்துக் கொண்டு வந்து விட்டாள் சோபியா.

தடித்த உடம்போடும், லேசாக நரைத்த தலையுடனும் இருந்த சோபியா, கண்ணாடியில்லாமல் எதையும் படிக்க முடியாது.

கடிதத்தை கிளாரா கொண்டு வந்து கொடுத்ததும், அதைப்படிக்க கண்ணாடியை எடுத்து வரச்சொன்னாள் எஜமானி கடிதத்தைப் படித்தவுடன் அவள் முகத்தில் மகிழ்ச்சி.

''கிளாரா, இது விக்டரின் கடிதம்...அவன் இங்கு திரும்பி வருகிறானாம் பெண்களைக் கூப்பிடு'' என்றாள் சோபியா—

அவர்கள் யாரும் விக்டரைப் பார்த்ததில்லை. தங்களது தனி அறைகளில் படித்துக் கொண்டு இருந்த ஐவரையும், கிளாரா அழைத்து வந்தாள். அவர்கள் தாயிடம் வந்ததும், தன் கையில் இருந்த அக் கடிதத்தைக் காட்டி.

''உங்கள் சித்தப்பா இங்கே வருகிறாராம் நான் கூட அவரைப் பார்த்ததே இல்லை'' என்றாள் சோபியா.

தாயைச் சுற்றி நின்ற ·பெண்களில், மூத்தவள் சூசி. அவள் தன் தாயின் கையில் இருந்த கடிதத்தை வாங்கினாள்.

''சித்தப்பாவின் கையெழுத்து, நம் தந்தையின் கையெழுத்தைப் போலவே இருக்கிறது'' என்றாள் இரண்டாவது பெண் ஷைனி.

அந்த நேரத்திலிருந்து, அப்பெண்களுக்கு இங்கு வரப் போகும் சித்தப்பாவைப் பற்றியே நினைவு—

மறு நாள் ஞாயிறு—விக்டர் அன்று வந்து விடலாம் என நினைத்த சோபியா கோழி, மீன் என்று புலால் வகை உணவுகளை சமைத்து வைத்தாள்.

பெண்கள் வீட்டை சுத்தப்படுத்தினார்கள். திரை சீலைகள் மாற்றப்பட்டன.

'தாமரைக் குளம்' என்னும் அந்த மிகப் பெரிய மாளிகை ஒரு பெரிய காம்பௌண்டுக்குள் இருந்த இரண்டு மாடிக் கட்டிடம். முப்பத்தாறு அறைகள் உள்ள அம் மாளிகை, அரண்மனையைப் போலவே இருக்கும்—மாளிகையின் நடுப்பாகத்தில் பாதாள அறைகள் பல இருந்தன,

அந்த நிலைவறைகளை இன்னமும் சோபியாவே திறந்து பார்த்ததில்லை—

அன்று மாலை வரை அவர்கள் எதிர்பார்த்த விக்டர் வரவே இல்லை.

மாலைப் பொழுது கழிந்த பிறகு, எல்லோரும் பிரார்த்தனை முடித்த போது, மாளிகையின் முன் ஒரு கார் வந்து நின்றது.

எல்லோர் கவனமும் அப்பக்கமாகத் திரும்பியது—

அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருந்த விக்டர் வந்தாயிற்று—

இரண்டு பெரிய பெட்டிகளை தூக்கிக் கொண்டு உள்ளே வந்த விக்டர், அவர்கள் முன்னால் வந்து நின்றார்.

ஆறாடிக்கும் அதிகமான உயரம்—அதற்கேற்ற உடல் பருமன்—கௌரவமான கண்கள் இறந்து போன அண்ணனின் முகச்சாயல் சந்தேகமே இல்லை. வந்திருப்பது, அவர்களது சித்தப்பாதான்!

அவர் நிறைய சாமான்கள் கொண்டு வந்து இருந்தார். அதை அவர்களிடம் கொடுத்தார்.

''நான் பிரயாணத்தினால் மிகவும் களைப்படைந்து இருக்கிறேன் நன்றாகக் குளித்து விட்டுத் தூங்க வேண்டும் நாளை பேசிக் கொள்ளலாம்'' என்றார் விக்டர்.

பீட்டரின் அதே குரல்!

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும், விரைவிலேயே படுக்கப்போய் விட்டார்கள்.

இரவு மணி பன்னிரெண்டு- லேசான காலடி ஓசை. கிளாரா இந்த சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டாள்.

மாடியிலிருந்து யாரோ இறங்கி வருவது போன்ற சப்தம் அவளுக்குக் கேட்டது.

கதவருகே சென்று நின்று மெதுவாக கவனித்தாள்.

யாரோ கீழே இறங்கிக் கொண்டு இருந்தது தெளிவாகக் கேட்டது.

நல்ல கருமையான இருட்டு- சிறிதும் சலனமே இல்லாத சூழ்நிலை-

கிளாரா மெதுவாகக் கதவைத் திறந்து, சப்தம் வந்த திசையில் பார்த்தாள்-

கையில் ஒரு சிறு லாந்தருடன் ஒரு நபர் படிக்கட்டில் இறங்கிக் கொண்டு இருந்தார்-

முதல் பார்வையிலேயே, அது விக்டர் என்று கிளாராவுக்குத் தெரிந்தது-

எதற்காக இவர் கீழே இறங்கி வருகிறார்? தண்ணீர் குடிக்கவா?

குடிக்கத் தண்ணீர் மேலே அவர் அறையில் வைக்கப் பட்டு இருக்கிறதே-

இந்த சமயத்தில் கிளார பயந்து நடுங்கக் கூடிய ஒரு காட்சியைப் பார்த்தாள்-

மாடிப்படி அருகே இருந்த ஒரு அறையின் திரைச் சீலையின் மீது, மிகப்பெரிய பல்லி ஒன்று இருந்தது. அதன் கண்கள் இரண்டும் வைரத் துண்டுகளாக ஜொலித்தன.

திரைச்சீலையின் நடுவே இருந்த அந்த பல்லி 'டர்' என்கிற சப்தத்துடன் திரைச்சீலையை இரண்டாகக் கிழித்துக் கொண்டு கீழே வந்து காணாமற் போனதும்,

விக்டர் படி இறங்கி கீழே வந்து. சேர்ந்ததும் ஒரே நேரத்தில் நடந்தன.

இதைக் கண்டு பயந்து கூச்சல் போட நினைத்த கிளாரா, தன் கைகளால் வாயை மூடிக் கொண்டாள் கீழே இறங்கிய விக்டர் ஹாலில் திரைச்சீலைக்குப் பின்னால் இருந்த நிலவறைகளை நோக்கிப் போனார். அதன் மூடி ஒரு ஓரமாக இருக்க, விக்டர் அதைத் தூக்கித் திறந்தார்- உள்ளே படிக்கட்டுகள்- அதன் வழியாக விக்டர் உள்ளே இறங்கி போனார்.

கிளாரா இருட்டில் மறைந்தவாறு அவரைக் கவனித் தாள்-

கீழே இருந்த ஒரு இரும்பு கடப்பாறையைக் கொண்டு சற்று எட்ட இருந்த தரையைத் தோண்டத் தொடங்கினார்- ஒரு சவப் பெட்டி வைக்கும் அளவுக்குக் கச்சிதமாக இருந்தது அவர் தோண்டிய அக்குழி-

குழிக்குள் இருந்த ஒரு பெட்டியின் மூடியை அவர் திறந்ததை அவள் கண்டாள்- அது ஒரு சவப் பெட்டி தான்!

விளக்கு வெளிச்சத்தில் கிளாரா, அப்பெட்டியில் ஒரு காட்சியைப் பார்த்தாள்-

உள்ளே இருந்தது விகாரமான ஒரு எலும்புக் கூடு- ஆனால் அதன் தோல் சுருங்கிப் போய் நசுங்கி இருந்தது- எலும்பில் தோல் ஒட்டிக் கொண்டு இருந்தது எனலாம்- துணி ஏதும் இல்லை-

விக்டர் குனிந்து அந்த எலும்புக் கூட்டை உற்று நோக்கியபோது, அதன் வலது கை உயர்ந்து விக்டரைப் பற்றி இழுத்தது-

இதைக் கண்ட கிளாரா பயத்தால் துவண்டாள்!

# 2

அக்காட்சியைப் பார்த்த கிளாரா பயத்தால் உறைந்து போனாள்-

''நோ!'' என்று அவள் தன்னையறியாமல் சப்தம் போட்டு விட்டாள்-

உடனே தன் தவறை உணர்ந்து வாயை கையால் மூடிக் கொண்டாள்-

சவப் பெட்டியில் இருந்த அந்த விகாரமான உருவம் மெதுவாக அசைய ஆரம்பித்தது—

அவனது இரண்டு கைகளும் விக்டரை நன்றாகப் பிடித்து, தன் வசம் இழுத்தன—

அதற்கு அடுத்த காட்சி, அதிபயங்கரமாக இருந்தது—

பிணத்தின் முகத்தில் இருந்த செம்பட்டை முடி ஒவ்வொன்றாக நிமிர்ந்து நின்றது—

வாயின் இரு பக்கங்களிலும். இரண்டு வளைந்த பற்கள் தோன்றின—

அந்தப் பற்கள் விக்டரின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்ததாகத் தெரிந்தது கிளாராவிற்கு! நிமிடங்கள் நகர்ந்தன— விக்டர் பலமாக உலுக்க, எழுந்த ரூபம், மீண்டும் பெட்டியில் சாய்ந்தது. விக்டர், தன்னை சுதாரித்துக் கொண்டு மெதுவாக எழுந்து அப்பெட்டிக் குள் தன் வலது கையை நீட்டினார்.

கையிலிருந்து பிரகாசமான வெளிச்சம் தோன்றி, அது மெதுவாக பெட்டி முழுவதும் பரவியது— இப்போது

அதன் நிறம் நீலமாக மாறியது— அதனால் பெட்டியினுள் இருந்த எலும்புக் கூடும், அதன் உதிரி பாகங்களும் நன்றாக எரிந்து சாம்பலாயின.

இதைப் பார்த்து விட்டு, மெதுவாக கிளாரா நடுங்கிய வாறே தன் அறையின் வாயிலை அடைந்தாள். அதே நேரத்தில் மிகவும் குறைந்த வெளிச்சத்துடன் மேலேறி வந்த விக்டர் திடுமென திரும்பிப் பார்த்தபோது, அவரது கண்களில் கிளாரா தென்பட்டாள்.

இதே சமயம் விளக்கின் திரி பிரகாசமாக எரிந்தது—

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். கிளாராவினால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடிய வில்லை. பயத்தினால் கால்கள் தரையோடு ஒட்டிக் கொண்டன போலத் தோன்றியது—

விக்டர், அவள் அருகே வர அடியெடுத்து வைப்பது போலத் தோன்றியது.

திடீரென தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டவர் போல, தன் அறைக்கு அவர் போய் விட்டார்.

கிளாராவும் தன் அறைக்குள் நுழைந்தாள்—கதவைத் தாளிட்டு கொண்டு தன் படுக்கையில் சுருண்ட அவள் யோசிக்கத் தொடங்கினாள்.

எதனால் தன்னை நோக்கி வந்த, அந்த அவர் பேசாமல் திரும்பிப் போனார்—என யோசித்தாள்—சலனமில்லாத இரவு—

'டிக்' 'டிக்' என்னும் சப்தம் அவளுக்குக் கேட்டது. ஆனால் அது கடிகாரத்தின் சப்தம் அல்ல! அதே சப்தம் தனக்கு மிக அருகில் கேட்டது போல் இருந்தது—

வெளிக்கதவை யாரோ தட்டுவது போன்ற சப்தம்—

இவ்வளவு நேரத்தில் இது யாராக இருக்கும் என அவள் மனம் யோசிக்கத் தொடங்கியது—

சப்தம் தொடர்ச்சியாக வரவே, கிளாரா தன் கட்டிலில் இருந்து எழுந்தாள்—

கதவைத் திறக்கலாமா, வேண்டாமா?

திறக்கா விட்டால், கதவைத் தள்ளித்திறந்து விட்டால். கிளாரா குழப்பத்தைத் தவிர்த்து போய் கதவைத் திறந்தாள்— திறந்தவுடன் சற்று தள்ளி உள்ளே வந்து நின்றுகொண்டாள்.

பயத்தால் அவளது உடல் பயங்கரமாக நடுங்கியது.

வந்திருந்தது விக்டர்—

அவரது கை நுனியில் அதே நீல வெளிச்சம் பிரகாசமாக இருந்தது—

''நீ எதையாவது பார்த்தாயா?'' விக்டர் அவளிடம் கேட்டார்.

''நான்...நான்... நான்... எதையும் பார்க்கவில்லை', என்றாள் தடுமாறியபடி—

''நீ பார்த்திருந்தாலும், பாராவிட்டாலும் சரி... இப்போது நான் யார் என்று உனக்குத் தெரியும்... எதையோ பார்த்ததுபோல் நீ யாரிடமாவது சொன்னால், உன்னை நான் துண்டம் துண்டமாக வெட்டி, விடுவேன்'' என்றார் விக்டர்.

கிளாரா இதைக் கேட்டு மேலும் நடுங்கினாள்— திகிலுற்றாள்

''நீ எனது சக்தியைப் பார்க்க வேண்டுமா?'' என்று கேட்ட விக்டர் தனது இடது கையில் இருந்த சிறு விளக்கினால், வலது கையைச் செலுத்தி, எரிந்து கொண்டிருந்த

திரியை வெளியே இழுத்தார்— திரி பாம்பாக மாறி, அவரது கையைச் சுற்றிக் கொண்டது. அத்துடன் படமெடுத்தும் ஆடியது.

அதைப் பிடித்து விக்டர் மேலே எறிய, தலையும் வாலும் ஒன்று சேர்ந்து வட்டமாகியது...

அந்த வளையம் மெதுவாக இறங்கி வந்து கிளாரா வின் தலைக்கு மேல் நின்றது—

''இதை உன் கழுத்தில் விழவைக்கவும் எனக்குத் தெரியும்... பார்க்கிறாயா?''

''அய்யோ...வேண்டாம்...'' என்று அலறினாள் கிளாரா

விக்டர், கையை நீட்டி அவ்வளையத்தைப் பிடித்து விளக்கினுள் செலுத்த, விளக்கு பழைய படி மங்கலாக எரிய ஆரம்பித்து விட்டது.

''இன்னொரு தடவை சொல்கிறேன்...நீ யாரிடமா வது இதைக் குறித்துப் பேசினால், அதன் பலனை நீ உடனே அனுபவிப்பாய்...''

என்று சொல்லி விட்டு விக்டர் அங்கிருந்து நேராகப் போய், சோபியாவின், மூத்த மகளின் கதவைத் தட்டினான்—

சூசி ஏதோ சிந்தனை செய்தவாறு படுத்துக்கொண்டு இருந்தாளே தவிர தூங்கவில்லை...

குடும்பத்தில் ஆண்கள் யாரும் இல்லாததால், நடக்க வேண்டிய சுபகாரியங்கள் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தன.

சூசிக்கும் திருமண வயது தாண்டி விட்டது— சித் தப்பா வந்து விட்டதால் இனி எல்லாமே ஒழுங்காக

நடக்கும் என அவள் நினைத்தாள் வரும் கணவன் எப்படி இருப்பான் என்கிற கற்பனை அவளைத் தூங்க விடாமல் தடுத்தது—

சூசிக்கு. இந்த மாளிகையை. இவர்களுக்கு விற்ற உதயவர்மாவின் மீது மையல் அவர்கள் கோவிலகத்தில் குடியிருந்தனர்.

உதயன் எம்.ஏ. படித்தவன் ஒரு டுடோரியல் கல்லூரி நடத்திக் கொண்டு இருந்தான்—சூசி, பெயிலான பிறகு, அங்கே படிக்கப்போன போதுதான் இவர்களுக்குள் பழக்கமாகியது சமுதாயப் பிரச்னைகள் வந்தாலும், உதயன் இதையெல்லாம் பொருட்படுத்தாத முற்போக்கு வாதி ஊரில் நடக்கும் எல்லா விசேடங்களிலும். விழாக்களிலும், அவன் பொறுப்பேற்பது உண்டு. முக்கியமானவன்—நல்லவன் என்று கருதப்பட்டவன்—கலப்பு மணத்தை தீவிரமாக ஆதரிக்கும் ஒரு சங்கத்தின் தலைவன் உதயன் இதுவரை நான்கைந்து கலப்புத் திருமணத்தையும் அவன் நடத்தியிருக்கிறான்—

அதனால் தன்னை அவன் நிச்சயம் திருமணம் செய்து கொள்வான் என்று சூசி நம்பிக்கொண்டு இருந்தாள்—

கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு, அவள் விளக்கை ஏற்றினாள்—

தன் அம்மாவாக இருக்கும் என்று நினைத்து அவள் கதவைத் திறந்த போது- அங்கே நின்றிருந்தது அவளுடைய சிற்றப்பா விக்டர்—

''என்ன சித்தப்பா?'' அவள் முதலில் கேட்டாள் விக்டர் உள்ளே வந்து கதவை மூடித்தாளிட்டான்.

''அப்போ...என்ன இது?'' என்று சூசி பதறி பின்னால் போக, விக்டர் எட்டிப் பிடித்தார் அவள் அலற வாயைத் திறந்த போது.

''சப்தம் போட்டால், இப்போதே உன்னைக் கொன்று விடுவேன்!'' என்று சொன்ன விக்டர்.

''இதைப் பார்த்தாயா?'' என்று தொடர்ந்து சொல்லியபடி, தனது வலது கையை அவளுக்கு நேராக நீட்டினார்.

அக்கையில் நீண்ட விரல்களும், கூர்மையான நகங்களும் இருந்தன.

அதைக் கண்ட சூசி, மிகவும் பயந்து போனாள்—விக்டர், அவளை கட்டிலில் சாய்த்து, வேகமான மூர்க்கத்தனத்தோடு அவளது 'நைட்கவுன்' பட்டன்களைப் பிய்த்து எறிந்தார்—

பிசாசுகளின் பலத்தோடு அவர் அவளை தாக்கிய போது, அப்பெண்ணால் ஏதும் செல்ல முடியவில்லை—அவளது கற்பு சிறிது நேரத்தில் பறி போயிற்று.

''கோவிலகத்து இராஜகுமாரனான உதயவர்மாவை நீ நேசிக்கிறாய் அல்லவா?'

''இது எப்படி சித்தப்பாவுக்குத் தெரிந்தது'' என அவள் வியந்தாள்—

மணி இரண்டடித்தது மட்டும் அவளுக்குக் கேட்டது பிறகு நடந்தது எதுவுமே அவளுக்கு ஞாபகமில்லை. காலையில் விழித்த போது அவள் கெடுக்கப்பட்டு இருப்பது தெரிந்தது.

''இனி எதற்காகத் தான் உயிரோடு இருக்க வேண்டும்?'' என்று நினைத்த அவள், கட்டிலில் இருந்து இறங்கி, பீரோவை திறந்து ஒரு சேலையை எடுத்து கட்டிக் கொண்டாள்—பொழுது நன்றாக விடிந்தது.

வழக்கமாக எல்லோரும் காலையில் ஒன்றாக அமர்ந்துதான் டிபன் சாப்பிடுவது வழக்கம். அன்று சூசியை மட்டும் அங்கே காணவில்லை.

தாய் எல்லோரிடமும் "சூசி எங்கே?" என்று கேட்டாள்.

அப்போது கைட்டரும் அங்கே இருந்தார் — கிளாராவினால், அவரை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை,

சோபியா தன் இளையமகள் எமிலியை அழைத்து சூசியைப் பார்த்துவிட்டு வரச் சொல்கிறாள்—சூசியின் அறைக்கு எமிலி போனாள்.

சில வினாடிகளில் அவள் அலறிய சப்தம் கீழே கேட்டது.

"ஓடி வாருங்கள்...ஓடி வாருங்கள்" என்று குரல் கொடுத்தாள் அவள்.

எல்லோரும் அங்கே ஓடினார்கள்.

விக்டர் மட்டும் தன் இடத்தை விட்டு அகலவே இல்லை.

அவன் தலை நிமிர்ந்து பார்த்த போது கிளாரா, அவரையே பார்த்துக் கொண்டு இருப்பது தெரிந்தது.

கிளாரா தானும் மேலே போக வேண்டும் என்கிற எண்ணத்துடன், சில அடிகள் எடுத்து வைத்தாள்.

இதைக் கண்ட விக்டர், அவளது பக்கமாக தனது வலது கையை நீட்ட, அக்கையிலிருந்து ஒரு விரல் மட்டும் வந்து அவள் மீது விழுந்தது.

"ஆ!" என அலறி தனது உடையை சரி செய்து கொண்டாள் கிளாரா.

# 3

அவள் மீது விழுந்தது கை விரல் அல்ல—

அது ஒரு பொன்னிறமான பல்லி—

அவள் தட்டி விட அது மேஜையின் மீது விழுந்தது—

அதன் கண்கள் வைரக்கற்கள் போல பிரகாசித்தன—

ஒரு வினாடிதான்...

திடீரென அப்பல்லி விக்டரின் கையை நோக்கித் தாவியது—

இதைப் பார்த்த கிளாராவிற்கு அதன் அர்த்தம் புரிந்தது—

தனக்குத் தெரிந்ததை வெளியில் சொல்லக் கூடாது என்பதற்காகவே விக்டர் இந்த இந்திரஜாலத்தைக் காட்டியிருக்கிறார் என்று கிளாரா தெரிந்து கொண்டாள்—

''சூசி... சூசி'' என்று அலறிக் கொண்டே சோபியா ஓடி வந்தாள்—

மயங்கி விழப்போன அவளைப் பிடித்து சோபாவில் படுக்க வைத்தனர்—

விக்டர் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரச் சொல்லி, அதில் மந்திர உச்சாடனம் செய்து, சோபியாவின் முகத்தில் அடித்தார்— அவள் விழித்தாள்—

பின், 'சூசி...சூசி' என அலற ஆரம்பித்தாள்—

''அண்ணி சப்தம் போடாதீர்கள்...இன்னும் நமக்கு நான்கு பெண்கள் இருக்கிறார்கள் அல்லவா? வெளியில் தெரிந்தால் அவமானம் இல்லையா?'' என்றார் விக்டர்—

''பெரியவள் தூக்கு போட்டுக் கொண்டு இறந்து விட்டாள் என வெளியில் தெரிந்தால் அவமானம் அல்லவா'' என்று சோபியும் நினைத்தாள்—

இந்த மாதிரியான நேரத்தில் விக்டர் அங்கே இருந்ததை பாக்கியமாகக் கருதினாள்—

வீட்டிற்குள்ளேயே சகல காரியங்களும் நடந்தேற விக்டர் உதவி புரிந்தார்—

சூசியின் மரணம், ஒரு சாதாரண சாவாகவே ஊர்மக்களால் கருதப்பட்டது—அதனால் இறுதி சடங்கு களில் எல்லோரும் பங்கு கொண்டார்கள்—

இதனால் விக்டர் பலரோடு பழகும் வாய்ப்பு கிடைத்ததால், விரைவில் உள்ளூரில் ஒரு முக்கியஸ் தனாகவே கருதப்பட்டார்—

இந்த இறுதி சடங்கிற்கு உதயவர்மாவும் வந்திருந் தான் அதிகமாக நோக்கப்பட்டவர்களில் அவனும் ஒருவன்—

அங்கு வந்தவர்களில் மிகவும் வித்தியாசமாகத் தென் பட்ட உதயனை, விக்டர் கவனித்துக் கொண்டே இருந்தார்— அவர் முகத்தில் குரோதம் பளிச்சென தெரிந்தது—

உதயனும் விக்டரைக் கவனித்தான்—

சூசியின் உடலை வராந்தாவில் கிடத்தியிருந்தார்கள். முற்றத்தில் பெரிய பந்தல்—

அந்தப் பந்தலின் ஓரத்தில் போடப்பட்டிருந்த ஒரு ஸ்டூலில் உதயன் அமர்ந்து இருந்தான்—

விக்டரைப் பார்த்துக் கொண்டிருந்த, உதயனுக்கு, அவரது ஒரு கண் கருநிறமாக இல்லாமல் செம்பட்டை யாக இருந்தது தெரிந்தது—

எல்லாமே முடிந்த அன்று இரவு மாளிகை மிகவும் நிசப்தமாக இருந்தது—

யாரும் சாப்பிடவும் இல்லை—

தூங்கவும் இல்லை—

சோபியா, விக்டர் அருகில் வந்து''சாப்பிட ஏதாவது வேண்டுமா?'' எனக் கேட்டாள்—

அவளைக் கவனித்த விக்டர்

''அண்ணி உட்காருங்கள்!''

அருகில் இருந்த நாற்காலியில் அவள் அமர்ந்தாள்—

''எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது அண்ணி—நான் இங்கு வந்த தினமே இந்த மாதிரி ஒரு துக்கம் நிகழ்ந்ததற்காக நான் மிகவும் வருந்துகிறேன்...'' குரலில் துக்கம் தெரிந்தது—

மகள் இறந்த துக்கம் நிறைய இருந்தாலும், விக்டர் அங்கே இருந்ததால் சிறிது ஆறுதல்—

வீட்டில் இதைப் போன்ற ஒரு தற்கொலைச் சம்பவம் நடந்திருக்கும் போது ஆறுதல் சொல்ல விக்டரும் இங்கிருந்து உதவவில்லையென்றால் அவள் என்னவாகியிருப்பாளோ வென சோபியா நினைத்து தன்னை சமாதானப் படுத்திக் கொண்டாள்—

நாற்காலியில் அமர்ந்தவாறு அருகில் இருந்த படுக்கையின் விரிப்பை மெதுவாக நீவிக் கொடுத்துக் கொண்டு சோபியாவின் கை விரல்களைக் கவனித்த விக்டர் மெதுவாக, சோபியாவை அணு அணுவாக ரசிக்கத் தொடங்கினார்—

கையில் இருந்த சில தங்க வளையலகள் உடல் நிறத்தோடு போட்டி போட்டன—லேசாக நரை இருந்தாலும்

இன்னும் கருமையாக இருந்த தலை முடி, முகத்தில் எங்கும் சுருக்கமே இல்லாத அமைதியான, ஆனால் அழகிய தோற்றம்—உடல்மட்டும் சற்று பருமன் என்றா லும் ஐந்து பெண்களைப் பெற்றபின் சிறிதும் கட்டுத் தளராத இளமையான தோற்றம்—

சோபியாவின் அழகு விக்டரின் கண்களை ஈர்த்தது வியப்பான விஷயமல்ல!

சோபியா விக்டரின் கண்களைப் பார்த்தாள்—

அந்தக் கண்களுக்குப் பிரத்தியேக சக்தி உண்டு—

பார்ப்பவர்கள் தங்கள் பார்வையை மீண்டும் வேறு பக்கம் திருப்பிக்கொள்ள மிகவும் பிரயாசைப் படு வார்கள்.

தன் கைகளை மெதுவாக, அவளது கை அருகே கொண்டு போனார்—

''என்ன விக்டர்?'' என்று கேட்டாள் சோபியா.

''சூசி இங்கே இருந்த ஒரு டுடோரியல் கல்லூரியில் சென்று படித்துக் கொண்டு இருந்தாள் அல்லவா?''

''ஆம்!''

''அங்கே இருக்கும் கோவிலகத்துப் பையனும், சூசியும் நெருங்கிப் பழகி இருக்கிறார்கள்—

நான் இங்கு வருவதற்கு முன்பே இந்தக் கதைகள் எல்லாவற்றையும் நன்கு அறிவேன்— என்றார் விக்டர்.

இந்த இருவரின் நட்பைப் பற்றி சோபியாவும் அறி வாள்—ஆனால் இது வயதுக்கோளாறு என்று அவள் நினைத்து இருந்தாள்—

இப்போது விக்டர் அதைப்பற்றிப் பேசும் போது இதில் ஏதோ இருப்பது போல, அவளுக்குத் தோன் றியது—

இந்த நெருக்கத்தினால் சூசி கர்ப்பிணி ஆகியிருக்க வேண்டும் என்றும், தன் சித்தப்பா இங்கு வந்து விட்டதால் அவளால் அவமானம் தாங்க முடியாமல், தற்கொலை செய்து கொண்டாள் என்றே சோபியாவிற்குத் தோன்றியது—

''பரவாயில்லை. நடந்தது நடந்தவைகளாகவே இருந்து விட்டு போகட்டும். இவ்வளவு நாட்கள் குழந்தைகளுக்காகவே, உங்கள் வாழ்க்கைய கழித்து விட்டீர்கள்... உங்களுக்காக நீங்கள் இன்னமும் வாழவே இல்லை'' என்றார் விக்டர்.

''நீங்கள் சொல்வது சரி!'' என்று சோபியாவும் ஒப்புக் கொண்டாள்—

''அண்ணன் இறந்து விட்டார்—அவரைப்பற்றியே நினைத்து இனி என்னவாகப் போகிறது.

அவர் உயிரோடு இருந்த போது மட்டும் என்ன? நீங்கள் மகிழ்ச்சியோடு குடும்ப வாழ்க்கை நடத்த வில்லை இல்லையா?''

இதைச் சொல்லிக் கொண்டே இருக்கும் போது விக்டரின் கண்களில் சோபியாவின் கழுத்துக்கீழ் உள்ள பகுதியில் மேய்ந்தன—

''ஏன் இதையெல்லாம் சொல்கிறீர்கள்?

எனக்கும் வயதாகி விட்டதல்லவா?'' என்று கேட்டாள் சோபியா

''உங்களுக்கு வயதாகி விட்டதென்று யார் சொன்னார்கள்? ஐந்து குழந்தைகள் பெற்று விட்டால் வயதாகி விட்டதாக அர்த்தமா? இப்போதும், உங்கள் கை விரல்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன தெரியுமா? எனக்கு இவ்வளவு அழகான ஒரு அண்ணி இருப்பதைக் கண்டு நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறேன் தெரியுமா? என் அண்ணியைப் பார்த்துக் கொண்டே

இருந்தால் போதும்...மன வேதனைகள் எல்லாம் தானாக மறைந்து விடும்—''

சொல்லிக் கொண்டே சோபியாவின் விரல்களை விக்டர் மெதுவாகத் தடவிக் கொடுத்தார்.

கோபிகாதன் கையை இழுத்துக் கொள்ள வில்லை. விக்டரின் கைகள் மெதுவாக அவளது கையின்மீது சஞ்சரித்தன.

சோபியாவின் உடலில் மின்சாரம் பாய்வதைப் போன்ற இன்பம்...

''அண்ணி நீங்கள் போய்த் தூங்குங்கள்!'' என்றார் விக்டர். இதைக் கேட்ட பின்னும் அவள் இருக்கையை விட்டு நகராமல் அங்கேயே இருந்தாள்.

மனதால் அண்ணி தன்னிடம் நெருங்கி வந்து விட்டாள் என்று விக்டருக்குப் புரிந்தது-இருந்தாலும் விக்டர் வருத்தப்படவில்லை—

''அண்ணி மிகவும் வருந்த வேண்டாம். நானும் இங்கே தானே இருக்கப் போகிறேன்.'' என்று அவள் கையை அழுத்தியவாறு சொன்னார் விக்டர்—

மனதில் திருப்தி இல்லாமல், சோபியா அங்கிருந்து எழுந்து போனாள்—

தன் படுக்கையில் வந்து படுத்தபோது அவள் தன் மகளை மறந்து விட்டிருந்தாள்.

விக்டரின் முகம், அவள் மனக்கண்ணாடியில் ஆழப் பதிந்து இருந்தது—

வீட்டிற்கு வந்த பிறகும், உதயவர்மா சூசியின் தற்கொலையைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்தான்—அவள் இறந்து விட்டாள் என்பதை அவனால்

நினைத்துப் பார்க்கவே முடியவில்லை — இறப்ப தற்கு முன், அன்று பகலில் கூட இருவரும் பார்த்து பேசி யிருக்கின்றனர்.

அவளுக்கு எந்தவிதமான வியாதியும் இருந்ததாக அவனுக்குத் தெரியவில்லை—

அதனால் அவள் எப்படி இறந்தாள் என்பது அவனது மனதில் எழுந்த கேள்விக்குறி—

அதே சமயத்தில் அவன் மனதில் இன்னொரு உருவமும் தெரிந்தது —

விக்டர்!

அவரது செந்நிறமான கண்கள்...

இதற்கு முன்பு, இதே போல் ஒரு கண்ணை உடைய ஒரு நபரைப்பற்றி உதயன் கேள்விப்பட்டு இருந்தான்—

இரண்டு விழிகளும் வெவ்வேறு நிறமாக இருக்க முடியுமா?

பூனைக்கண் போல குரூரமாக இருந்தது எனலாம்—

ஒரு பிசாசின் குரூரம் அக்கண்களில் ஒளிந்திருந்தது போல!

“என்ன உதயன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?” என்று அவனைக் கண்ட அவனது மாமா சச்சிதானந்த வர்மா கேட்டார்.

அவர் ஒரு ஆராய்ச்சியாளர்—கல்லூரியில் சரித்திரத் துறையின் தலைவராக இருந்தார். இப்போது அவர் ஓய்வு பெற்று இருந்தாலும் நேரத்தை வீணாக்காமல் ஏதாவது ஆராய்ச்சி செய்து கொண்டே இருப்பார்.

பல விதமான புத்தகங்கள் அவரது அலமாரியில் உள்ளன —

''நான் ஒரு விசித்திரமான நபரைக் கண்டேன்!'' என்றான் உதயன்—

''யார்?''

''ஒரே நபருக்கு இரண்டுவிதமான கண்கள் இருக்க முடியுமா? ஒன்று சாதாரணமானது-இன்னொன்று காட்டுப் பூனையின் கண்—''

''அந்த மாறுதலான கண்ணின் பாவையில்மேலிருந்து கீழ் வரை ஒரு கறுத்த கோடு இருக்கிறதா?'' எனக் கேட்டார் மாமா—

உதயன் சிந்தித்துப் பார்த்தான்.

# 4

அந்தக் கண்ணில் மேலிருந்து கீழ்வரை கறுப்பு கோடு இருக்கிறதா என்பதை உதய வர்மா சரியாகக் கவனிக்கவில்லை—

இரண்டே தடவை மட்டுந்தான் அவர் கண்களை உதயவர்மா பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது— மற்றவர் கண்களை விட இந்தக் கண் வித்தியாசப் பட்டதால்தான், அவன் கவனத்தைக் கவர்ந்தது— இன்னொரு காரணம், அந்த நபர் தன்னை பல தடவை உற்றுப்பார்த்துக் கொண்டு இருந்தது—

அப்பார்வையில் வெறுப்புணர்ச்சி ஏன் தெரிய வேண்டும்?

''இப்படிக் கேட்க என்ன காரணம் மாமா?'' உதயன் கேட்டான்—

''நீ விசேஷமாக ஒரு ஆளைப் பற்றிச் சொன்னபோது நான் வேறு ஒரு காரியத்தைப்பற்றி நினைத்தேன்.''

''என்னது?''

''அதை இப்போது சொல்லிப் பயன் இல்லை''

மாமா தன்னிடம் எதையோ மறைக்கிறார் என்றே அவனுக்குத் தோன்றியது—

கன்னணைப்பற்றி விபரமாகக் கேட்டதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்றே அவனுக்குத் தோன்றியது--

''என் வேலையை நான் முடித்ததும் இதுபற்றி உன்னிடம் பேசுகிறேன்'' என்றார் மாமா.

அவனுடைய சந்தேகப் பார்வையைக் கண்டு—சச்சிதானந்தவர்மா கோவிலகத்தில் இருந்து கொண்டு வந்த பழைய நூல்களையும், கிரந்தங்களையும் தனது நூலகத்தில் பத்திரப்படுத்தி இருந்தார்—

ஓலையில் எழுதியது—மான் தோலில் எழுதியது காகிதத்தில் எழுதியது, அச்சடித்தது போன்ற பல வகை யாக இருந்தன அந்த நூல்கள்யாவும் தேவநகரிலிபியில் இருந்தன—

''உதயன் நீ எனக்கு கொஞ்சம் உதவினால் இதை முடித்துவிட்டு, உன் விஷயத்தைக் கவனிக்கலாம்!''—என்றார்—

நூலகத்தில் இருந்த நூல்களின் மீது படிந்திருந்த தூசியைத் தட்டி, வருட வாரியாக அவற்றை அடுக்கி தன் மாமாவிடம் கொடுத்தாஸ்.

அப்படிப்பார்த்துக் கொண்டு இருந்தபோது ஒரே ஒரு ஓலை உதயனை மிகவும்கவர்ந்தது. அது கோதவர்மத் தம்பிரான் எழுதியது—

அவரைப்பற்றி இவனும் கேள்விப்பட்டுஇருக்கிறான்—

''மாமா... இது தாத்தாவின் காலத்து கிரந்தம்'' என்றான்

''அதை மட்டும் தனியாக எடுத்துவை!''

அவர்சொன்னபடியே செய்தாலும், இதர நூல்களைப் பிரிக்கும் போது உதயன் கவனம் மட்டும் அந்த ஓலைச் சுவடியின் மீதே இருந்தது—

இரவு மணி ஒன்பது—

எல்லா வேலைகளும் முடிந்தன—

''முதலில் சாப்பிட்டுவிடுவோம்... பிறகு பேசுவோம்!' என்றார் மாமா

உதயனின் தாயார் கொச்சம்மணி தம்பிராட்டி உணவுப் பரிமாறினாள்—

இப்போதைக்கு இந்தத் தாயார்தான் உதயனுக்கு எல்லாம். வீட்டின் மூத்த பெண் மணியும் அவள்தான்.

கொச்சம்மணியைத் திருமணம் செய்துகொண்டது வடக்கே இருந்து வந்த ஒரு தம்பிரான்—

உதயன் பிறந்து வந்து வருடங்கள் ஆனபின். அவர் வீட்டை விட்டுப் போய் விட்டார்.

இந்திரா,சுபத்திரா என இரு சகோதரிகள் உதயனுக்கு உண்டு.

இவர்கள் மூவரும் தாயின் பராமரிப்பில்தான் வளர்ந்தவர்கள்—

குடும்பத்தின் பழைய பல கதைகளை உதயன் தன் தாயின் மூலம் அறிந்தது உண்டு!

சாப்பாடு முடிந்தது—

பிறகு தாய் மகனிடம் கேட்டாள்—

"உதயா நீ ஏன் இந்தப் பழைய நூல்களை சிரமப் பட்டு அடுக்கி வைத்துக் கொண்டு இருக்கிறாய்?"

ஒரு ஆளைப் பற்றித் தெரிந்து கொள்ள!" உதயன் விபரம் சொன்னான்

"ஆளைப் பார்த்தோமா—விடுவோமா என்று இராமல் இவ்வளவு ஆராய்ச்சி தேவையா?" தாய் கேட்டாள்—

"மாமா எனக்கு மாமா மட்டுமல்ல! ஒரு சிநேகி தனைப் போன்றவர்—அவர் கருத்துப்படிதான் நடக் கிறேன்—"

"நேற்று சவ அடக்கத்திற்குப் போன இடத்தில் அந்த நபரைப் பார்த்தாயா?"

என்று தாய் கேட்கவும், உதயன் தனக்கும் இறந்த வளுக்கு இருந்த உறவைப் பற்றியும் தாயிடம் சொன் னான்—

"இதுவரை நான் இதை வெளியில் சொன்னதே இல்லை ஆனால் அவள் தங்கை ஷைனிக்கு மட்டும் இந்த விபரம் தெரியும்—அவள்தான் தன் சகோதரியின் மரணம் சாதாரண மரணம் அல்ல என்றாள்"

"பிறகு ஏன் இந்த விபரங்களை என்னிடமிருந்து நீ மறைத்து வைத்தாய்?"

"ஷைனி இந்த விபரத்தை யாரிடமும் சொல்லக் கூடாது என்று என்னிடம் உறுதி மொழி வாங்கிக் கொண்டாள்—அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்று வெளியுலகத்திற்குத் தெரிந்தால், மற்ற பெண் களின் வாழ்க்கை பாதிக்குமே என அவர்கள் பயந்தார் கள் [illegible]."

''அவள் தற்கொலை செய்து கொள்ள மாட்டாள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்'' உதயன் தொடர்ந்து பேசிய போது.

''காரணம்?'' என மாமா இடைமறித்தார்.—

''யாரோ ஒரு ஆள் அந்த மாளிகைக்கு வந்த இரவு தான் இம்மரணம் நிகழ்ந்திருக்கிறது.''

''அதில் அவனுக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று தானே நீ நினைக்கிறாய்''

''என் மனது அப்படித்தான் சொல்லுகிறது மாமா... அது மட்டுமல்ல...அன்று இரவு நான் சூசியைப் பார்த் தேன்—அதாவது அவளது ஆத்மாவைப் பார்த்தேன்— இதை ஆவி, பிசாசு என்று கூட நீங்கள் அழைக்கலாம்!''

''நிஜமாகவா? துர் மரணம் நேர்த்தால் இப்படி நடக்க ஏது உண்டு!'' என்ற மாமாவுக்கு இதைப் பற்றி மேலும் அறிய ஆவல் ஏற்பட்டது.

''சூசி என்னிடம் என்ன சொன்னாள் தெரியுமா? மாளிகைக்கு வந்த அந்த நபர் அவளை பலவந்தமாகக் கெடுத்துவிட்டார் என்றும் அந்தக் காரணத்தினால் தான் தான்தற்கொலைசெய்து கொண்டதாகவும் சொன் னாள்.'

''உண்மையாகவா சொல்கிறாய்? இது உன் மனப் பிராந்தியாவும் இருக்கலாம்?'' என்றார் மாமா.

''இது உண்மை என்றால், அந்த நபரைப் பற்றி எச்சரித்து வைக்க வேண்டும் மற்றவர்களை ஜாக்கிரதை யாக இருக்கும்படி''

''அவள் தங்கை சொன்னதும் ஆத்மா சொன்னதும் வைத்துப் பார்த்தால், அது சரிதான் என்றேபடுகிறது''

''கண்ணில் தெரிந்த கோடு பற்றிக் கேட்டீர்களே அக்காரியம் என்ன ஆவது?'' உதயன் தொடர்ந்து தன் மாமாவிடம் பேசினான்—

இதைப்பற்றிக் கேட்டதும் மாமாவுக்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது—

''அந்த மாளிகைக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது. நமது மந்திரிமார்களுடைய தங்குமிடமாக இருந்தது இம்மாளிகை இதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் பலர். கடைசியாக யூதா என்றொரு மந்திரி இங்கே இருந்தான் அவன் ஒரு துர்மந்திரவாதி பிசாசுகளின் தயவால் அவன் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டு இருந்தான்—

பெண்களைப் பார்த்தால் அவர்களை என்ன வேண்டுமானாலும் செய்து விட்டு பிறகு கொன்று விடுவான்—

அவனது ஒரு கண் இதே மாதிரியாக இருந்தது.'' இதைச் சொன்ன மாமா, முன்பு தனியே எடுத்து வைத்த அந்த ஓலைக் கிரந்தத்தை எடுத்து வந்தார்—

கொண்டு வந்தவர் ஒவ்வொரு ஓலையாகப் புரட்டிக் கொண்டு வந்தவர், நடுவில் ஒரு இடத்தில் நிறுத்தினார்.

''இதில் யூதாவைப் பற்றிக் கூறியிருக்கிறது—

அவனைப் பற்றிய எல்லா விபரங்களும் இதில் அடங்கியிருக்கிறது. தன்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களோ, அதையும் அவனால் அறிந்து கொள்ள முடியும்—இதைப் போன்ற பல அபூர்வ சக்திகள் அவனிடம் இருந்தன—

மரணத்தை வெல்லவும் அவனுக்குத் தெரியும்'' என்று மாமா சொல்லி நிறுத்தியதும்

''மிகவும் அற்புதம்...ஆச்சர்யம் இதை நான் அவசியம் படிக்க வேண்டும்'' என்றான் உதயன்—

இந்த சமயத்தில் விக்டரின் படுக்கை அறையில் சோபியா இருந்தாள்—

அவர்கள் இறந்துபோன சூசியைப் பற்றி பேசிக் கொண்டு இருந்தார்கள்

''கோவிலகத்தைச் சேர்ந்த அந்தப் பையனுக்கும் சூசிக்கும் தொடர்பு இருந்தது'' என்றார் விக்டர்—

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்?'' சோபியா கேட்டாள்—

''இதையெல்லாம் தெரிந்து கொண்டுதானே நான் இங்கே வந்தேன்... அதுமட்டுமல்ல... நீங்கள் இந்த மாளிகைக்கு வந்த பிறகு நடந்த பூரா சரித்திரத்தையும் நான் அறிவேன்— ஒன்று சொல்கிறேன்... சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு, அண்ணி ஏணிப்படியிலிருந்து வழுக்கி, விழுந்தபோது கையில் இருந்த குத்து விளக்கின் முனை வலது தொடையைக் கிழித்து விட்டதல்லவா? அந்தத் தழும்பு இப்போதும் இருக்குமே...''

இப்படிக் கேட்டவுடன்,

சோபியா திடீரென தன் நைட்கவுனை உயர்த்திப் பார்த்தாள்— தழும்பு இருந்தது—

''இது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''இனி வேறு தழும்புகளும் இருக்கின்றன...''

இந்தக் கட்டிலில் அமருங்கள்... நான் காண்பிக்கிறேன் என்றார் விக்டர்—

பிறகு மெதுவாக அவளது கையைப் பற்றினார்—

சோபியா படுக்கைக்கு வந்தாள்—

''இங்ாக இருக்கிற வேலைக்காரி மிகவும் கெட்டிக் காரி...இல்லையா?''

''இல்லை... அவள் யாருமில்லாத ஒரு அனாதை... இந்தச் சொத்தில் அவளுக்கும் சிறிய பங்கு இருக்கிற மாதிரி உங்கள் அண்ணன் உயில் எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்''

''அப்படியா?'' அது அவளுக்குத் தெரியுமா?''

விக்டர் கேட்டார்.

''ஓ! தெரியுமே...''

''அப்படியா?'' என்றார் விக்டர்

பலவித எண்ணங்களுடன்—பிறகு அங்கே பேச்சுக்கு இடமே இல்லை!

கடிகாரத்தில் பன்னிரெண்டு அடித்தது! சோபியா திடீரென்று எழுந்தாள்— அருகில், படுக்கையில் விக்டர் இல்லை

# 5

கட்டிலில் இருந்து இறங்கிய சோபியா விக்டர் எங்கே போயிருப்பார் என்று யோசித்தபடி இருந்தாள். கதவருகே போனாள்—

உள்ளே தாழ்ப்பாள் போட்டது போட்டபடி இருந்தது அறைக்குள் பாத்ரும் ஏதும் இல்லை!

நிலைமை இதுவாக இருக்க அவர் எப்படி வெளியே போயிருக்க முடியும்?

அறைக்கு வெளியே வந்தவள்... கீழே இறங்கும் படியருகே வந்தாள்—

அப்போது விக்டர் கீழே இருந்து மேலே வரஇருந்தார்—அவரது கையில் அதே சிறிய சிம்னி விளக்கு

''எங்கே போய் விட்டீர்கள்?'' சோபியா கேட்டாள்—

அம்மணி, விழித்துக் கொண்டீர்களா? நான் கீழே இருந்து ஏதோ சப்தம் வர, என்ன வென்று பார்க்கப் போனேன்''

''கதவு திறந்தது''

''நான் தான் திறந்து கொண்டுவந்தேன்''

''உள்ளே இருந்த தாழ்ப்பாள் திறக்கப்படாமல் இருந்ததே!''

''உங்கள் கண்களுக்கு அப்படித்தோன்றியிருக்கும்''

''அப்படியே இருந்திருக்கலாம்!'' என்ற அவள் அவர் சொன்னதை நம்பத் தொடங்கியிருந்தாள்—

தூக்கக் கலகத்தில் கோளாறு! அவள் அறைக்கு அருகில் வந்த போது ''நீங்கள் உங்கள் அறைக்குள் போய் விடுங்கள் குழந்தைகளுக்குத் தெரிந்தால் நன்றாக இராது''

சோபியா தன் அறைக்குத் திரும்பினாள்—

விக்டர் தன் கையில் ஒருசிறிய இரும்புப் பெட்டியை வைத்திருந்தார்—சோபியா அதைப் பார்த்து விடக் கூடாதே என்று பின்பக்கம் மறைத்து இருந்தார்—

கீழே நிலவறையில் சவப்பெட்டி இருந்த இடத்திலிருந்து அவர் அதைக் கொண்டுவந்து இருந்தார்—

திறந்து பார்த்தார்—

மிகவும் பழைய கிரந்தங்ககளும், ஓலைச்சுவடிகளும் மற்றும் ஒரு அடி நீளமான கண்ணாடியும் அதனுள் இருந்தன—

கிரந்தங்களை மெதுவாகப் பிரித்துப் பார்த்த போது அவை யாவும் அவருக்குத் தெரிந்தவைகளாகவே இருந்தன,

கண்ணாடியை எடுத்து மேஜையின் மீதுவைத்து விட்டு. அதற்குப் பின்னால் விளக்கை வைத்தார்...

கண்ணாடியில் ஒரு ரூபம் தெரிந்தது—அதை அவர் உற்று நோக்கியபோது, அது அவர் உருவம் அல்ல! செம்பட்டைதலைமயிர் உயரமாக இருந்த தலை—மெலிந்த முகம் சப்பையான மூக்கு, முக்கோணம் மாதிரி இருந்த அந்த முகத்தில் சுடராக இருந்த தாடி காய்ந்து, வரண்ட உதடுகள்...ஒரு கண் மட்டும், பூனைக்கண்ணாக இருக்க அதன் நடுவே கறுத்த கோடு!

''யூதா...நீ புனர் ஜென்மம் எடுத்திருக்கிறாய்!'' என்று சொன்ன விக்டர்

''ஹா...ஹா...ஹா...'' என சிரித்தார்—

தன்னுடைய உருவம் விக்டருடையது என்றாலும், அதைக் கண்ணாடியில் பார்த்தால், அது யூதாவினுடையதாக இருக்கும்—

இந்த மாந்ரீகக்கண்ணாடியில் மட்டுந்தான் இப்படியா இல்லை எல்லா கண்ணாடியிலும் தன் உருவம் இதைப் போலத்தான் தெரியுமா?

அப்படித்தெரியும் என்றால், தான் மிகவும்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என விக்டர் அப்போதே தீர்மானித்தார்—

யாராவது பார்த்து விட்டால் வீண் விபரீதத்திற்கு வழி வகுக்கும்.

தன் இரண்டு கண்களுக்குள்ள வித்தியாசம் மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது. என்பதால் பெட்டியில் இருந்து ஒரு கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார்— திடீரென பார்த்தால் தெரியாது—

உதயனைப் பற்றி அவர் நினைத்தார்—

கோவிலகத்தின் கடைசிவாரிசானஅவன், தன்னையே உற்று நோக்கியதை அவர் கவனித்து இருந்தார்—

மறுநாள் காலை எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது மூன்று பெண்கள் மட்டுமே இருந்தனர். சைனியைக் காணோம்—

விக்டர் கேட்டார்

''சைனி எங்கே?''

''அவள் தன் சிநேகிதியைப் பார்க்கப் போயிருக்கிறாள்'' ஒருவள் பதில் சொன்னாள்—

கிளார அடுக்களையில் இருந்து விக்டரையே கவனித்துக் கொண்டு இருந்தாள்—

முதல் இரவில், விக்டர் மறுபடியும் கீழ் பாதாள அறையில் இறங்கிப்போய், ஒரு சிறு பெட்டியுடன் திரும்பி வருவதை கிளாரா பார்த்திருந்தாள்—

இப்போது விக்டரும், கிளாராவைக் கவனித்தார்.

பார்வையில் ஒரு கம்பீரம்!

இவரிடம் பைசாச சக்திகள் நிறைய இருக்கிறது என்பது கிளாராவிற்கு நிறைய இருக்கிறது என்பது கிளாராவிற்கு தெரிந்தது

ஆனால் இதை அவள் யாரிடம் போய்ச் சொல்லு வாள்

மத்தியானம் ஷைனியும், உதயனின் சகோதரி இந்திராவும் மாளிகைக்கு வந்தனர்—

இந்திரா நன்றாக வளர்ந்த, இருபத்திமூன்றே வயதான அழகியபெண்—நல்ல உடற்கட்டும் நிறமும் கொண்ட அப்பெண்ணைப் பார்த்தவர்கள் தடுமாறிப் போவார்கள்

பிறப்பினால்அவள் ஒரு ராஜகுமாரிதானே? அவர் கள் இருவரும் படியேறி வருவதை விக்டர் பார்த்தார்—மாடியிலிருந்து அவர் கீழே இறங்கி வந்தார்.

''இது என் சித்தப்பா விக்டர்...சமீபத்தில்தான் இங்கு வந்தார்.'' என்று ஷைனி அவரை இந்திராவிற்கு அறிமுகம் செய்து வைத்தாள்—

''இந்தப் பெண் யார்?'' இந்திராவின் முகத்தில் இருந்த தன் கண்களைத் திரும்பப் பெறாமல் கேட்டார்—

''கோவிலகத்தைச் சேர்ந்த இந்திரா!'' சைனி சொன்னாள்—

''இவளைப் பார்த்த போது நினைத்தேன்—'' என்றார்—

''சித்தப்பாவிற்கு இந்திரா பழக்கமானவளா?'' ஷைனி வெகுளித்தனமாகக் கேட்டாள்—

''இவர்களைப் பார்த்தாலே ராஜ குடும்பம் என்பது தெரிந்து விடுமே!'' என்றவாறு விக்டர் சிரித்தார்—

''என்ன சித்தப்பா கண்ணாடி போட்டுக் கொண் டீர்கள்''

''இது என்னிடம் முன்பு இருந்தே இருக்கிறது'' என்று சொன்னவர் கண்ணாடி வழியாக இந்திராவைப் பார்த்துக் கொண்டு இருந்தார். அவரது மாந்திரீக சக்தியால் இந்திராவைப் பார்த்தவர் கண்களுக்கு ஆடைகள் இல்லாதவளாக நிர்வாணமாக இருந்த இந்திரா தெரிந்தாள் அழகான அந்த உருவம் அவருக்கு மோகத்தை உண்டாக்கியது.

அவரது பைசாச மன விகாரம் எப்படியாவது தான் அவளை அடைய வேண்டும் என நினைத்தது—

''அக்கா இறந்த நாளன்று இந்திரா இங்கு வர வில்லையே'' ஷைனி தன் தோழியிடம் கேட்டாள்—

''நான் என் சித்தியின் வீட்டிற்குச் சென்று இருந் தேன் வந்த போதுதான் இந்த துர்மரணத்தைப் பறறி கேள்விப் பட்டேன். துயரமான நிலை. சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு இந்திரா திரும்பிப் போனாள்—

இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே போன விக்டர், இரவு பத்துமணிக்குத்தான் மாளிகைக் குத் திரும்பினார்—சோபியா தன் அறைக்கு வந்த போது பெண்கள்சந்தேகப்படுவார்கள்...என்று அவளைத் திருப்பியனுப் விட்டார் விக்டர்—

ஏமாற்றத்துடன் சோபியா தன் அறைக்குத் திரும் பிப் போனாள்—

அவள் போன பிறகு, தன் அறையில் கண்ணா டியை எடுத்து மேஜையின் மீது வைத்துக்கொண்ட விக்டர் மந்திரங்களை சொல்லத் தொடங்கினார் கண்ணாடியில் சிகப்பாக பிரகாசம் தெரிந்தது அது மெதுவாக மாறி ஒரு படுக்கை அறை தெரிய கட்டிலில் இந்திரா படுத்துக் கொண்டு இருந்த காட்சி கண்ணாடியில் தெரிந்தது—

''இந்திரா!'' விக்டர் அழைத்தார்—

படுக்கையில் படுத்து இருந்தவளுக்கு இக்குரல் கேட்டது.

எழுந்தாள்—விளக்கை ஏற்றினாள்—

இரவு பதினோரு மணி!

இந்த நேரத்தில் தன்னை யார் அழைக்கிறார்கள்?

ஷைனியாக இருக்குமோ?

''இந்திரா!'' மீண்டும் அதே குரல்.

அவள் தன் அறைக் கதவைத் திறந்தாள், அழைத்தது ஷைனியாக இருக்கும் என நினைத்து—

இருட்டில் புலப்படாத ஒரு உருவம்—

''அது ஷைனியா?'' என்று அவள் வாயைத் திறந்து கேட்கும் முன், அவளது வாய் ஒரு கையால் மூடப்பட்டது—

பிறகு கையை எடுத்தபின் அவளால் பேச முடியவில்லை—

எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியில் அவள் அந்த உருவத்தைப் பார்த்தாள்—

மகா கோரமான உருவம்—

ஒரு தடவைதான் அவள் பார்த்தாள்.

பயத்தால் மயங்கிவிழ அதே போதுமானதாக இருந்தது—

விகடர், இந்திராவை தனது பைசாச மன விகாரத்திற்கு அடிமையாக்கினார்—

அறையை விட்டு வெளியே வரும்போது, இவளை உயிருடன் விட்டால் தனக்கு ஆபத்து என நினைத்த

விக்டர். அவளது நெஞ்சில் ஓங்கிக் குத்த, உள்ளே புகுந்த கை இதயத்தைப் பிசைந்து நிறுத்தியது...

அவள் பிணமானாள்!

பிறகு வேகமாக விக்டர் தன் பங்களாவிற்குத் திரும்பினான்—

படுக்கை அறைக்கு வந்து அவரது முகத்தைப் பார்த்தார்...

அதே கோரமான முகம்!

இந்த நேரத்தில் தன் கதவருகே யாரோ நிற்பது போல் தெரிந்தது—

உடனே அவர் வெளியே வந்து பார்க்க... கிளாரா படியிறங்கிப் போய்க் கொண்டு இருந்தாள்...

''கிளாரா!''

இந்த தடவை அவளை விட்டு வைக்கக் கூடாது என நினைத்தவிக்டர், வேகமாக அவள் பின்னால் போனார்—

தன் இடுப்பில் இருந்த கறுத்த கயிறு அவர் கையில் பட அதை அவிழ்த்தார்—

அதை கையில் எடுத்து மந்திரம் ஜெபிக்க, கயிறு பாம்பாக மாறியது—

அதை கிளாராவின் அறைக்குள் விட்டார்!

# 6

மூடிக்கிடந்த கதவின் கீழே இருந்த ஒரு அங்குல இடைவெளியில் அந்தக்கருநாகம் கிளாராவின்அறைக்குள் புகுந்தது— படம் எடுத்து நின்று ''உஸ்... உஸ்...'' என்று

அது சப்தம் கொடுத்த போது கிளாரா அதை பார்த்து நடுங்கிப் போய் விட்டாள்—

என்ன செய்வது?

ஓடிப்போக முயச்சித்தால், விக்டர் வெளியில் இருப்பார்! கருநாகத்தைத் தாண்டி கதவின் அருகே போகும் வரை அது சும்மா இருக்குமா? இவள் மனம் பயத்தினால் யோசனையில் இருந்தபோது, பாம்பு மெதுவாக அவள் அருகே வந்தது—

கிளாராவின்பாதத்தைக் குறிவைத்து அதுகொத்தியது ஆனால் அவள் எகிறினாள்—

எகிறியவள் நிலை தடுமாறி பாம்பின் மீதே விழுந்தாள்—

அவளது வலது கால், பாம்பின் வால் பகுதியை நசுக்கியது—

என்ன ஆச்சர்யம்?

அவள் கண் எதிரே பாம்பானது ஒரு கறுப்பு நிறக் கயிறாக மாறி இருந்தது—

ஆண்கள் இடுப்பில் கட்டும் அரைநாண்!

விக்டரைப் பார்த்த மாத்திரத்தில் மனதில் பயம் ஏற்பட்டு, இந்த கறுப்புக்கயிறு அவளுக்குப் பாம்பாகத் தெரிந்ததோ?

காலை எடுத்ததும் அக்கயிறு மீண்டும் பாம்பாக மாறி அவளைக் கொத்த வந்தது ஒரு அதிசயம்—

அதே போல் அவள் திரும்பவும் வால் பகுதியில் காலை வைத்து மிதித்ததும், அது கயிறாக மாறியது—

இந்த நிலை எவ்வளவு நேரம் நீடிக்கும்—

அவளுக்கு திடீரென மனதில் ஒரு யோசனை தோன்றியது—

பயத்தினால். மனதில் உதித்த ஒரு தைரியம்!

காலால் வால் பகுதியை மிதித்துக்கொண்டே தலைப் பகுதியாக இருந்த கயிற்றுப்பகுதியை தன் கையினால் பிடித்தாள்—சந்தேகமில்லை— அது கயிறுதான்!

அக்கயிற்றை அவள் கதவைத் திறந்து வெளியே வீசினாள்—

அது போய் விழுந்தது, விக்டரின் கழுத்தில்!

கதவை மூடித் தாளிட்டாள் கிளாரா!

விக்டர் கயிற்றை எடுத்துப் பார்த்தார்—அது அவரது இடுப்பில் இருந்த கயிறுதான்!

அவருக்கு சந்தேகம் தோன்றியது—

அந்த சிறுமியிடம் மாந்திரீகச் சக்தியும் உண்டா? அவர் சிந்தித்தார்.

"ஆகட்டும்... பார்க்கலாம்!" என்கிற எண்ணம் மனதில் எழ தன் அறைக்குத் திரும்பினார்—

அடுத்தநாள் காலை சுபத்ரா குளத்தில் குளிக்க ரெடியானபோது, சகோதரி இந்திரா வரவில்லை— அதனால் அவள் தன் சகோதரியின் அறைக்குச் சென்றாள்—

கதவைத் தட்டினாள்—

கதவு உட்புறமாக மூடப்பட்டு இருந்தது—

"அக்கா!... அக்கா!" என குரல் கொடுத்தாள்—

ஜன்னல்களும் மூடிக்கிடந்தன—

இன்னொரு வழியாக அவள் உள்ளே சென்றபோது, அவள் கண்ட காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது—

நெஞ்சுப் பகுதியிலிருந்து வெளியான இரத்தம் உறைந்து கிடக்க அவள் பிணமாக இருந்தாள்!

அவள் பலமாகக் கூச்சலிட்டாள்—

சமையலறையில் இருந்த தாயின் காதில் இக்குரல் விழுந்தது—

வேலைக்காரியை அழைத்துப் போய்ப் பார்த்து வரச் சொன்னாள் அத்தாய் நிலைமையை உணராமல்!

வேலைக்காரி பாரு அங்கே போய்ப் பார்த்தபோது பயத்தினால் விறைத்துப் போனாள்—

வாயிலிருந்து சப்தமே வரவில்லை.

அவள் மீண்டும் ஓடிவந்து தாயிடம் அழுதுகொண்டே பேச முடியாமல் தவித்தபடி அறையின் பக்கம் கையைக் காட்டினாள்—

''என்ன நடந்திருக்கிறது அங்கே?'' தாயும் கேட்டாள்

''அதை என்னால் சொல்ல முடியாது...'' என்றாள் வேலைக்காரி

இந்த சமயம் சச்சிதானந்தவர்மாவும், உதயனும் வேலைக்காரர்களுடன் விவசாயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்கள்—

தாய் ஓடிப்போய் மகனை அழைத்தாள்—

உதயனும் ஓடிவந்தான்—

''தெற்கே உள்ள அறையில் என்னவோ நடந்திருக்கிறது... நீ போய்ப் பார்... நானும் வருகிறேன்' என்றாள் தாய்—

இருவருமாக அறைக்குப் போனார்கள்—

சுபத்ரா தரையில் கிடந்ததை முதலில் உதயன் பார்த்தான்—

பிறகுதான் இந்திரா கட்டிலில் கிடந்த கோலம் அவன் கண்களில் பட்டது—

அம்மாவை வெளியே நிறுத்திவிட்டு, உதயன் மட்டும் உள்ளே போனான்—

பிணமாகக் கிடந்த தன் சகோதரியை அவன் பார்த்தான்...

கொடூரமான கொலை!

'ஓ மிகவும் பயங்கரம்!' என்றான்—

இதயம் சிதைந்து விட்டது போல் இரத்தம் பெருகி நன்றாக உறைந்திருந்தது—

சப்தம் போட்டு மாமாவை அழைத்தான்—

அவரும் வந்து பார்த்தார்—

என்ன நடந்தது என்றே அவர்களுக்குத் தெரிய விலலை—

எப்படி நடந்து இருக்க முடியும்?

காரணம் என்ன?

இதை கண்டு பிடிக்காமல் விடக்கூடாது என அவர் தீர்மானித்தார்—

டாக்டரை இங்கே வரவழைத்து பயன் இல்லை—

போலீசுக்குத் தகவல் சொன்னாலோ மிகவும் அவமானம்!

இதற்குப் பின்னால் ஏதோ பைசாசத்தின் கை இருப்பது அவருக்குப் புலப்பட்டது—

''நீ போய் உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரியை அழைத்து வா உதயா!'' என்று மாமா சொல்ல...

உதயன் உடனே கிளம்பினான்—

உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரி வேகவைத்த கோழியைப் பறக்க விடும்முகா மாந்திரீகன்— இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மகேந்திர ஜாலக்காரர்!

தன்னை எதிர்க்கும் நபரை ஆகாயம் வரை உயர்த்தி பின் தலை கீழாக பாதாளத்திற்கு அனுப்பும் பயங்கர மந்திரவாதி பார்த்துக் கொண்டு இருக்கும் போதே உடலை இரு கூறாக பிரிக்கும் கை காரர்! நெருப்பின் மீதே வெறும் காலுடன் நடக்ககூடிய சாமர்த்திய சாலி!

உதயன் உடனே புறப்பட்டான் மாந்திரிகனைப் பார்த்தான். அவருக்கு வயது அறுபத்தி ஐந்து அகலமான நெற்றி இடது பக்கத்தில் கொண்டை போன்ற முடி அடுத்தவனைப் பணிய வைக்கும் பார்வை கொண்ட கண்கள்!

நல்ல திடமான உடம்பு ஆரோக்கியத்தைச் சொன்னது—

நீல நிறமான நரம்புகள் கையிலும் மார்பிலும் பளிச்சென தெரிந்தன!

''யாரது...எனக்குத் தெரியல்லியே!'' அவர் சொன்னார்—

''கோவிலகத்தைச் சேர்ந்த உதயவர்மா நான்... என் மாமா சச்சிதானந்த வர்மா தங்களை அழைத்து வரச் சொன்னார்—விஷயம் முக்கியமானது.''

நம்பூதிரி பின்னால் சற்று தூரம் போய் நிற்க

ஒரு சிறு அறையின் கதவுகள் தானாகத் திறந்து கொண்டன—

அது ஒரு பூஜை அறை—

உள்ளே இருந்தது பகவதியின் தங்க விக்ரகம்!

உக்கிர மூர்த்தி போல் உதயனுக்குத் தோன்றியது.

அவர் பார்த்து விட்டுத் திரும்பியதும்.

கதவுகள் தானாக மூடிக்கொண்டன?

அழைத்தால் திறக்கும் கதவுகளைப் பற்றி உதயன் அரபிக் கதைகளில் தான் படித்து இருக்கிறான்—

ஆனால் இங்கே?

தியானம் செய்தால் கதவுகள் திறந்தன.

''மரணம் நடந்த வீடுதானே? அது சாதாரண மரணமல்ல என்பதால் நான் வருகிறேன்'' என்றார் உள்ளாட்டில்!

மகிழ்ச்சியும், அதிர்ச்சியும் அவனை ஒருங்கே தாக்கின!

அசாதாரண மரணம் என்றால்? திருமேனி, தன் பையில் சிறு சிறு விக்ரங்களை எடுத்துப் போட்டுக் கொண்டு முன்னால் நடந்தார்! தன் வீட்டில் அவர் யாரிடமும் ஏதும் சொல்லவில்லை.

கோவிலகத்திற்கு வந்து சேர்ந்தார்கள்! ஒருமணி நேரத்தில் உதயன் திரும்பி வந்து இருந்தான்—

கதவுக்கு வெளியே இருந்து திருமேனி உள்ளே பார்த்தார்—

கண்களை மூடித் திறந்த பின்—மீண்டும் பார்த் தார்.

''ஒஹோ...அப்படியா?'' என்றது அவரது வாய்...

திருமேனி தன் பையிலிருந்து ஒரு சிறு விக்ரகத்தை எடுத்து, வாயருகே கொண்டு போய் சில மந்திரங்களை உச்சாடனம் செய்த பிறகு, அறையின் தெற்கு பாகத் தைக் குறிவைத்து, அதை எறிந்தார்.

யாரோ ஒரு மாயா ரூபம் நடந்து போவது போல் உதயன் இருந்ததை பார்த்தான்!

அதன் பின் திருமேனியும் அறைக்குள் நுழைந்தார் இறந்து கிடந்த இந்திராவின் சடலத்தைப் பார்த்தவாறு திருமேனி நின்றார்—

அவரது நெற்றியில் நிறைய சுருக்கங்கள்! சற்று நேரம் கழித்து அவர் வெளியே வர அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை அறிய சச்சிதானந்த வர்மாவும் உடன் போனார்—

''மிருத சஞ்சீவினி மந்திரத்தை நன்றாகத் தெரிந்த யாரோ ஒரு நபர் இதன் பின்னால் இருக்கிறார் என்றே தெரிகிறது...ஆனால் இதை நம்பவும் முடியும்...நம்பாமல் இருக்கவும் முடியும்?' என்று நம்பூதிரியே, யோசனையோடு சொன்னார்.

''நாம் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்!'' வர்மா கேட்டார்—

''அந்தப் பெண்ணின் பெயர் இந்திராதானே?'' நம்பூதிரி கேட்டார்.

''ஆமாம்!''

''நான் ஒரு யோசனை சொல்கிறேன்...ஆனால் நான் சொல்வது...மிகவும் இரகசியமாகக் காப்பாற்றப்பட வேண்டும்—இந்திரா இப்படி இறந்தாள் என யாருக்கெல் லாம் தெரியும்?''

' இந்த வீட்டில் உள்ளவர்களுக்கும், வீட்டு வேலைக் காரிக்கு மட்டும் தெரியும்.''

''வேலைக்காரியைக் கூப்பிடுங்கள்!''

வேலைக்காரி பாரு ஓடி வந்தாள்.

அடக்கமாக வாய் பொத்தி நின்றாள்—

அவளது தலைமீது தன் கையை வைத்து...

"இங்கே கண்டதை எல்லாம் நீ மறந்துவிடு" என்றார்—

உத்தரவு போடும் தொனியும் இருந்தது அக்குரலில்!

பாருவுக்கு அங்கே பார்த்ததெல்லாம் உடனே மறந்து போய்விட்டது.

அவள் பார்த்த போது இந்திராவும், சுபத்திராவும் குளித்துவிட்டு வந்தது போல் நின்று கொண்டு இருப்பது தெரிந்தது—

திருமேனி வேலைக்காரியை அனுப்பி விட்டார்.

"நடந்தது என்ன என்பதை நான் சொல்ல வைக்கிறேன்—அதற்கு முன் நீங்கள் யாருக்கும் தெரியாமல் இந்திராவை புதைத்துவிட வேண்டும்!" என்றார்.

மாமனும், உதயனும் திருமேனியை வியப்போடு பார்த்தனர்—

"சொல்வதை செய்யுங்கள்."

"செய்கிறோம்—திருமேனி,"

பங்களாவின் காம்பௌண்டில் ஒரு மூலையில் இந்திராவின் சரீரம்,யாருக்கும் தெரியாமல் புதைக்கப் பட்டது!

எல்லா வேலைகளும் முடிந்தபிறகு, உதயன் மீண்டும் நமபூதிரியைச் சந்திக்கப் போனான்.

"ஆள் யாரென்று எனக்குப் புரிந்து விட்டது...இன்று இரவு அந்த வேலையைப் பார்க்கிறேன்."என்று திருமேனி உத்திரவாதம் கொடுத்தார்!

மத்தியானம் கடந்த பிறகும் கோவிலகத்திலிருந்து இந்திராவின் மரணம் குறித்து யாருமே பேசவில்லை என்பதை அறிந்த விக்டர் வியப்படைந்தார்—

சந்தியா நேரம் வரும்வரை காத்துக் கொண்டு இருந்தார்—

மறறவர்கள் தங்களது இரவு ஆகாரத்தை உட்கொண்ட நேரத்தில், விக்டர் தன் மாந்திரீகக் கண்ணாடியில் பார்த்தார்—

இந்திரா சவக்குழியில் படுத்திருந்தது அவருக்குத் தெரிந்தது—

எல்லோரும் தூங்கிய பிறகு விக்டர் ஒரு மண்வெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டார்—

எங்கும் இருட்டு...காட்டுப் பூனையைப் போல் நடந்தார்.

அவர் நேராகப் போய் நின்றது, இந்திராவைப் புதைத்த இடத்தில்!

# 7

**கோ**விலகத்தின் மதில் சுவர் அருகே சென்ற விக்டர் அங்கே ஒரு நிமிடம் தயங்கி நின்றார். அந்த இருளில் தன்னை யாரும் கண்டு விடக் கூடாது என்பதற்காக உடலில் கறுத்த அங்கியை தலையிலிருந்து கால் வரை அணிந்திருந்தார்.

லேசான நிலவொளி அதில் அவள் புதைத்த இடம் அவர் கண்களுக்குத் தெரிந்தது—

அப்பிணத்தை வெளியில் எடுத்து, அதை அழித்து விடவேண்டும் என்பதுதான் அவரது லட்சியமாக இருந்தது.

பிணம் புதைத்த இடத்தை அடைந்த விக்டர், தனது வலது கையை உயர்த்தி. ஆகாயத்தைப் பார்த்தபடி ஒரு பெரிய வளையம் போட்டார். உடனே பிணத்தைப் புதைத்த இடத்தைச் சுற்றி திரை சீலை போட்டது போல் ஒரு மறைவு ஏற்பட்டு விட்டது. யார் பார்த்தாலும் அவருடைய லட்சியம் வீணாகி விடும்.

ஒரு புது ஜென்மம் எடுத்தது வீணாகப் போய்விடும்! அதனால் எதைச்செய்தாலும் மிகவும் ஜாக்கிரதையாகவே செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்—

மண்ணை வெகுசீக்கிரம் அகற்றி விட்டு, இந்திராவின் பிணத்தை, சுருட்டிவைத்திருந்த பாயோடு வெளியில் எடுத்தார்—பிறகு பிணத்தை தெற்குப் பக்கத்தில் இருந்த சர்ப்பகந்தி மரத்தின் அடியில்கொண்டுபோய் வைத்தார்.

மூடியிருந்த பாயை விலக்கினார்—

நிலா வெளிச்சத்தில் பிணத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது—

திடீரென விக்டர் திடுக்கிட்டு சற்றுபின் வாங்கினார்.

கண்டது பயங்கரமான ஒரு காட்சியாக இருந்தது— மிகவும் வியப்பானதும் கூட! தான் கையால் குத்திய இடத்தில் ஏற்பட்ட துவாரத்தின் வழியாக இதயம் ஒழுங்காக வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டார். அதை எப்படியும் நிறுத்தி விடவேண்டும் என்று அவர் தனது வலது கையை பிணத்தின் அருகே கொண்டு போன போது, பிணத்தின் வலதுகை திடீரென உயர்ந்தது—

கண்கள் மெதுவாகத் திறந்தன...

அவரை எட்டிப் பிடிக்க முயன்ற கையிடம் சிக்காமல் அவர் சற்று பின் வாங்கினார்—

என்ன இது?

விக்டருக்கு ஏதும் புரியவில்லை!

இனி என்ன செய்வது என அவர் யோசித்தார்—

திடீரென அவருக்கு எந்த யோசனையும் தோன்ற வில்லை. யாரோ தனக்கு எதிராக ஏதோ செய்கிறார்கள். இல்லாவிடில் இது போன்ற காரியங்கள் நிச்சயம் நடக் காது—

கிரந்தத்தைப் பார்த்து இதற்கு ஏதாவது வழிகண்டு பிடிக்க வேண்டும்—

இல்லாவிடில் இந்த பிரேதம் அவருக்கு எதிராக மாற சந்தர்ப்பம் உண்டு—அதனால் இந்தப் பிணத்தை அழிக் காமல் விடக்கூடாது. விக்டர், சர்ப்பகந்தி மரத்தின் சிறு வேரைப் பிடுங்கிஎடுத்து, அதன்மீது,காலபாச மந்திரத்தை உச்சாடனம் செய்தார். பிறகு அந்த வேரை பிணத்திற்கு அடியில் போட்டார்.

அந்தவேர் கயிறாக மாறி பிணத்தை நான்கு தடவை சுற்றி கட்டியது. பிணத்தின் கைகள் கட்டிற்குள் அடங்கி விட்டன.

கையால் ஒன்றும் செய்ய முடியா விட்டாலும், வேறு விதத்தில் அப்பிணம் தன்னை ஏதும் செய்து விடக்கூடும் என அவர் நம்பினார்—

எப்படியாவது பிணத்தை அழித்து விடவேண்டும்—அதுதான் தன் லட்சியம் என்று நினைத்தபடியே அவர் திரும்பிப்போனார்—

இந்த உடலை இல்லாமல் செய்ய வேண்டுமென்றால், அதற்கு மந்திரம் பயனில்லை.

நடந்தவர் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்—

சமையலறையில் டின்னில் மண்எண்ணை இருப்பது அவருக்குத் தெரியும்— அதை எடுத்துக்கொண்டு, பழைய படி பிணம்இருந்த மரத்தடிக்கே வந்தார்—மரத்தினடியில் உலர்ந்த சருகுகள், இலைகள் கிடந்ததை அவர் பார்த்திருக்கிறார்—

நிலா வெளிச்சத்தில் அவர் பிணம் இருக்குமிடத்தைப் பார்த்தபோது அவரது நெற்றி சுருங்கியது கண்கள் விரிந்தன—

வலது கண் மூலம் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பார்க்கலாம்—

வியந்தார்—

பிணத்தை அவர் வைத்த இடத்தில் காணோம்! இந்திராவின் பிணம் எங்கே போயிற்று? தனக்கு எதிராக யாரோ மறைந்து விளையாடுகிறார்களோ?

புதையுண்ட இடத்திற்கு வந்தார்—

குழியிலும் பிணம் இல்லை—

ஆனால் அங்கு யாரோ நிற்பது அந்த மங்கலான வெளிச்சத்தில் தெரிந்தது—

என்ன...அது இந்திராவோ?

யூதாவை எதிர்க்க இதுவரை எந்த மாந்திரீகனும் பிறக்கவில்லை—இனி மேலும் முடியாது அவர் படிக்காத, பார்க்காத ஒரு மாந்திரீக கிரந்தமும் இல்லை,

மனதில் இந்த நினைப்புடன் விக்டர் உற்று பார்த்த போது, அவ்வுருவம் சவக்குழியில் இறங்கிவிட்டது.

விக்டர் வேகமாகப் போய் சவக் குழியைப் பார்த்த போது அங்கே இந்திராவின் உடல் கிடந்தது—

பிணம் போலவே அது காட்சி அளித்தது.

விக்டர் மண்எண்ணையை அப்பிரேதத்தின் மீது ஊற்றினார்—

காய்ந்த மரம் செடி கொடிகளை அதனுள் கொண்டு வந்து போட்டு, மீண்டும் கொஞ்சம் எண்ணையை ஊற்றினார்—

பிறகு நெருப்பு வைக்கப்பட்டது. நெருப்பு நன்றாகப் பற்றி எரிந்தது—புகையும் வர ஆரம்பிக்க, விக்டர் மரத்தடியில் வந்து நின்றவாறு ஒரு மறைவை தன் சக்தியைக் கொண்டு உருவாக்கினார்—எரிவதை யாரும் பார்க்காமல் இருக்க.

தன்னை எதிர்த்தவனை தோற்கடித்துவிட்ட மகிழ்ச்சியில் அவர் மாளிகைக்குத் திரும்பினார்—

மறுநாள் காலை உதயன் சவக்குழியின் அருகே வந்த போது மண் வெளியே கொட்டப்பட்டு இருந்தது எட்டிப் பார்த்த போது பிணம் அங்கே இல்லை, சாம்பல் தான் இருந்தது உதயன் உடனே உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரியின் வீட்டிற்கு ஓடினான்—நம்பூதிரி ஏதோ பழைய கிரந்தத்தைப் படித்துக் கொண்டு இருந்தார்—

திண்ணையில் உதயனை அமரச் சொல்லிவிட்டு அவர் உள்ளே போனார்—

அவரது வீடு மிகவும் பழைமையானது நிறைய தூண்கள் கொண்டது. அந்தத் தூண் ஒவ்வொன்றிலும் பெண்களின் உருவங்கள் செதுக்கப்பட்டு இருந்தன—

வெளியே வந்ததும், நம்பூதிரி,

''என்ன விசேஷம்?'' எனக் கேட்டார்.

''இந்திராவின் சடலத்தை யாரோ எரித்திருக்கிறார்கள் சவக்குழியில் வெறும் சாம்பல் மட்டுந்தான் இருக்கிறது—''

''அதை நான் அறிவேன்—ஆனால் இதற்கெல்லாம் பின்னால் உள்ள நபர் சக்தி வாய்ந்தவன் அற்புத சித்திகள் தெரிந்தவன்.

எதற்கும் நான் ஒரு வழி வைத்திருக்கிறேன்...'' என்று சொன்ன அவர் உதயனிடம் ஒரு தாயத்தை எடுத்துக் கொடுத்து.

''இதை நீ வைத்துக்கொள்'' உதயன் வீட்டிற்குத் திரும்பினான், முதல் வேலையாக அந்த வெள்ளி தாயத்தை எடுத்து தன் இடுப்பில் கட்டிக்கொண்டான்.

தன் மாமாவிடம் எல்லா விபரத்தையும் சொன்னான், பிறகு மண்ணைத் தள்ளி விட்டு சவக்குழியை மூடினார்கள்—

அன்று மாலை ஷைனி கோவிலகத்திற்கு வந்தாள் சுபத்திரா தான் அவளை அங்கு வரவேற்றாள்.

வழக்கமாக இந்திரா தான் அவளை வரவேற்பாள்—இன்று அவளைக் காணோம்-

ஷைனி, சந்தேகப்பட்டாள்—

அந்த வீட்டில் ஏதோ துயரம் சூழ்ந்திருப்பது போன்று அவளுக்குத் தோன்றியது.

உதயன் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை.

''இந்திரா எங்கே?'' ஷைனி கடைசியாகக் கேட்டே விட்டாள்—

அதைக் கேட்டவுடன் சுபத்திரா அழுதுவிட்டாள். பிறகு மெதுவாக எல்லா விஷயங்களையும் அவளிடம்

சொல்லிவிட்டு இதை இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என பல தடவைகள் கேட்டுக் கொண்டாள்—

ஆனால் ஷைனி வீட்டிற்குள் வந்தவுடன் முதல் வேலையாக, எல்லா விவரத்தையும் எல்லோரிடமும் சொல்லி விட்டாள்—

இதைக் கேட்ட கிளாராவிற்கு, இதற்குப் பின்னால் விக்டர்தான் இருக்க வேண்டும் என்கிற சந்தேகம் தோன்றியது.

இந்த நேரத்தில், தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்று அவள் நினைத்தாள்—

அப்போது "டிக்...டிக்" என்ற சப்தம் கேட்டது. விளக்கின் சிம்னியில் ஒரு பெரிய பல்லி அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டு இருந்தது.

அதன் கண்கள் சிவந்த நிறத்தில் பளிச்சிட்டன அது ஒரு முகம்தானோ? கிளாரா யோசித்தாள்.

# 8

பல்லிக்கு மனிதன் முகமா? கிளாரா ஆச்சரியத்துடன் மீண்டும் உற்றுப் பார்த்தாள். முகம் மட்டும் நன்றாகத் தெரிந்தது அதன் நிழல் எதிரில் இருந்த சுவற்றில் பெரிதாக விழுந்தது. பார்ப்பதற்கு அந்த நிழல் ஒரு முதலையைப் போல் தோன்றியது என்றாலும். முகம் விக்டரைப் போல் இருந்தது.

கிளாரா திடுக்கிட்டாள்—

அந்த மனிதன் ஒரு பிசாசின் அவதாரம் என்பது அவளுக்குத் தெரியும் என்றாலும் அதை வெளியில் சொல்ல முடியாத நிலை-

ஏனெனில் அதை யாரும் நம்ப 'மாட்டார்கள்-

இவளை ஒரு பைத்தியக்காரி எனக் கூறி வெளியே அனுப்பி விடுவார்கள்-

இன்று அவள் பெரிய பெண்!

வெளியே போனால், அவள் எங்கே போக முடியும்? அதே சமயம், பயங்கரம் நிறைந்த இந்த வீட்டில் அவளால் எப்படி இருக்க முடியும்?

அவள் இப்படி யோசனையில் ஆழ்ந்திருந்த போது அந்தப் பல்லி, அவளைத் தாண்டி பின்னால் குதித்தது-

அவள் பயந்து எழுந்து வெளியே ஓடினாள்-

நடைபாதையில் அவள் பயந்து ஓடியபோது, அவள் பின்னால் யாரோ ஓடி வருவது போல் இருந்தது.

தப்பிக்கவேண்டுமென்றால் அவள்ஷைனியின் அறைக்குள் நுழைய வேண்டும்-

அதனால் அறைக் கதவைத் தட்டினாள்-

''என்ன அவசரம்?'' என்று கேட்டுக் கொண்டே ஷைனி கதவைத் திறந்தாள்

''எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது!'' என்றவாறே அவள் உள்ளே வந்தாள்-

ஷைனி கதவை மூடினாள்-

ஷைனியும், அவள் தங்கை சிசிலியும் அங்கே இருந்தாள்- அந்தத் தங்கைக்கு வயது பதினாலு. அவள் தூங்கிக் கொண்டு இருந்தாள்-

ஷைனி விளக்கின் திரியை பெரிதாக்கினாள்-

கிளாரா, தன் அனுபவத்தை சொல்ல வாயெடுத்த போது, அவளது காதில் மெதுவாக யாரோ "வாயைத் திறந்தால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று கூறியது அவளுக்கு மட்டும் கேட்டது.

அக்குரல் விக்டருடையது என்று அவளுக்குத் தெரிந்தது.

அந்த மனிதர், இப்போது அந்த மாளிகையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

ஏனெனில் அவர் சோபியாவுக்கு எல்லா விதத்திலும் வேண்டியவராகி விட்டார்-

விக்டரும்-சோபியாவுக்கும் ஏற்பட்டுள்ள உறவு குறித்தும் இவளுக்குச் சந்தேகம்!

"என்ன கிளாரா, நீ எதைப் பார்த்து இப்படி பயந்து ஓடி வந்தாய்?" ஷைனி கேட்டாள்-

மீண்டும் அவள் வாயைத் திறந்த போது- காதில் அதே குரல்.

"நீ சூசியைப் பார்த்தா பயந்தாய்?" ஷைனி தொடர்ந்து கேட்டாள்...

"ஆமா!"

"இதற்குத்தான் நான் உன்னை இங்கேயே படுத்துக் கொள் என்றேன்!" ஹைனி சொன்னாள்-

"அம்மா திட்டுவாங்க?" என்றாள் கிளாரா

"பரவாயில்லை... நீ இங்கேயே படுத்துக்கொள்" என்று அவளைத் தன் அருகிலேயே படுக்க வைத்துக் கொண்டாள் ஷைனி- நெருங்கி அணைத்தும் கொண்டாள்-

கிளாராவிற்குத் தூக்கம் வரவில்லை அவள் மனம் பூராவும் பல்லியின் உருவமே இடம் பிடித்து இருந்தது-

மறுநாள் மாலை-உதயன் சோபியாவின் மாளிகைக்கு வந்தான், சோபியாவும், ஷைனியும் ஒரு பக்கமாக அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார்கள்-

''என்ன உதயன் இப்போதெல்லாம் நீ இங்கே வருவதில்லையே! காலேஜ் வேலை அதிகமோ?''

''இல்லை, டுட்டோரியலுக்கு இப்போது விடுமுறை தானே?'' என்று அவன் சொல்ல,

''இந்திராவின் மரணத்தைப்பற்றி அறிந்து நாங்கள் மிகவும் வருத்தப்பட்டோம்'' என்று சோபியா சொல்ல,

''ஷைனியின் சித்தப்பா எங்கே?'' என்று கேட்டான் உதயன்—

''அவர் எப்போதும் படித்துக் கொண்டேதான் இருப்பார்... யாரிடமும் பழகும் சுபாவமே இல்லை...'' சோபியா இதைச் சொல்லும்போது விக்டர் கீழே இறங்கி வந்தார்—

அவர் கீழே வந்ததும் ஷைனி எழுந்து உள்ளே போய் விட்டாள்—

சோபியா இருந்த அதே சோபாவில் அவரும் அமர்ந்து, தனது மூக்குக்கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டார்.

உதயன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''இது கோவிலகத்து உதய வர்மா!'' என்று சோபியா அறிமுகப் படுத்தினாள்.

''மாமாவின் பெயர் சச்சிதானந்த வர்மா தானே?'' விக்டர் கேட்க—

''அவரை உங்களுக்குப் பழக்கமிருக்கிறதா?''

''இல்லை...இங்கு வந்த பிறகு தெரிந்து கொண்டது தான்!''

உதயன், அவர் கண்களைக் கவனிக்க முயற்சித்தான். போட்டுக்.கொண்டிருந்த கண்ணாடியினால் அவனுக்கு ஏதும் தெரியவில்லை—

''கிளாரா டீ கொண்டு வா!'' சோபியா குரல் கொடுத்தாள் -

யார் இந்தக் கிளாரா?

உதயன் மனதில் ஒரு சந்தேகம் -

டீ கொண்டு வந்த கிளாராவை உதயன் பார்த்தான்-

ஒரு அழகான பெண் இவள் 'என்கிற எண்ணமே உதயனுக்குத் தோன்றியது.

''இது யார்...உங்கள் மகளா?'' உதயன் கேட்டான்.

''அல்ல...இங்கே வேலை செய்யும் பெண்...''

இதுநாள் வரை அவன் இவளை எப்படி பார்க்காமல் இருந்தான். யாரையும் உடனே கவர்ந்துவிடும் அழகான அப்பெண் மீது உதயனின் மனம் லயித்தது.

''விக்டர் அங்கிள்...இவ்வளவு நாள் எங்கே இருந்தீர்கள்?'' உதயன் கேட்டான் -

''நான் பல நாடுகள் - ஊர்கள் முதலியவற்றை சுற்றி விட்டு, கடைசியாக இங்கு வர வேண்டும் என்று வந்தேன்'' அவர் பதில் இது...

''நீங்கள் இனி இங்கேயே இருக்கப் போவதால் எல்லோரையும் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டாமா?'' என்று கேட்டான் உதயன்.

விக்டர் தலையை மட்டும்ஆட்டினார்.

''முடிந்தால் நாளை நீங்கள் கோவிலகத்திற்கு வாருங்களேன்'' உதயன் சொல்ல

''நிச்சயம் வருகிறேன்... அது எனக்கு மகிழ்ச்சியான விஷயம்'' என்று விக்டர் பதில் சொன்னார்—

'நான் வருகிறேன்' என்று உதயன் விடை பெற்றுக் கொண்டான் —

உதயன் பங்களாவின் காம்பௌண்டைத் தாண்டும் வரை கிளாரா ஜன்னல் வழியாக அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்—

உதயன் மீது, அவளது உள்ளத்தில் இனந்தெரியாத பரிவு எற்பட்டது.

உதயன் மனதிலும் கிளாரா நிறைந்து இருந்தாள்— சூசியின் மரணமும் அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் வலியாக இருந்தது—

கோவிலகத்திற்கு வந்ததும், விக்டரைப் பார்த்த விபரத்தை விபரமாகவே சொன்னான் உதயன்—

''விக்டர் நாளை இங்கே வருவார்...அவரை இங்கே வரச் சொல்லி இருக்கிறேன்...''

''மிக்க நல்ல விஷயந்தான்... வரட்டும்'' என்றார் மாமா

''இந்தச் செய்தியை திருமேனியிடம் சொல்வது தவறல்லவே'' உதயன் கேட்டான்—

''சொல்லிவிடுவது நல்லது... அவருக்கும் தெரியட்டுமே''

அதனால் உதயன் உள்ளாட்டு மனைக்குப் புறப்பட்டான் அங்கே இவன் போய்ச் சேரும் போது இருட்டும் சமயமாகிவிட்டது.

வீட்டின் வாயிலருகே வந்த போதே ஒரு பெண் விளக்கேற்றுவதை உதயன் கவனித்தான்—

வெண்ணிற ஆடை தரித்திருந்த அப்பெண்ணின் உருவம் நன்றாகத் தெரிய வில்லை...

'மச மச' வென இருந்தது—

அவள் உதயனைப் பார்த்தவுடன் ஒரு பக்கமாகப் போய் எங்கோ மறைந்து விட்டாள்.

முற்றத்திற்குவந்ததும், உள்ளே இருந்துதிருமேனியின் குரல்...

''யாரது உதயவர்மாதானே...அப்படியே உட்கார் நான் வருகிறேன்'' என்றார்—

அப்படியே அவன் அமர்ந்தபோது, விளக்கில்லை. சில வினாடிகளில் ஒரு கதவைத் திறந்து கொண்டு ஒரு பெண் கோல் விளக்குடன் உள்ளே வந்தாள்— அது முன்பே பார்த்த அதே பெண்தான் என்று அவனுக்குத் தோன்றியது-

விளக்கை கீழே வைத்துவிட்டு அவள் திரும்பி நடந்த போது, உதயன் அவளது கால்களைப் பார்த்தான்- அவளது கால்கள் தரையில் படவே இல்லை!

# 9

திருமேனி சாதாரண மனிதர் அல்ல என்பதை உதயன் மீண்டும் உறுதி செய்து கொண்டான்-

தன் வீட்டு வேலைகளை எல்லாம் அவர் யட்சிகளைக் கொண்டே செய்து கொள்கிறார் போலத் தெரிகிறது-

சற்று நேரத்தில் திருமேனி வந்தார்-

''உட்கார்ந்தே அலுத்துப் போய் விட்டாயா?''

சிரித்துக் கொண்டே கேட்டார் அவர்-

''வியப்போடு தான் உட்கார்ந்து இருந்தேன்,'' என்றான் உதயன்.

''என்னது...வியப்புக்குரிய விஷயம்?''

திருமேனி கேட்டார்

''இப்போது இங்கிருந்து ஒரு பெண் உள்ளே போறாளே...அவள்...?''

''அதுவா? எல்லாம் எனக்கு உதவி செய்பவர்கள்...'' சிரித்தும் கொண்டே சொன்னார்-

திருமேனி ஒருபக்கமாக அமர்ந்தார்-

ஒரு மாபெரும் மாந்திரீகனுக்கு வேண்டிய சகல அம்சங்களும் அவரிடம் இருந்தன-

விக்டர் நாளை கோவிலகத்திற்கு வருவதைப் பற்றிக் குறிப்பிட்ட உதயன் திருமேனியும் அங்கு வந்தால்நன்றாக இருக்குமே, என உதயன் சொல்ல...

''இப்படி ஒரு நேரத்திற்காகத்தான் நான் காத்துக் கொண்டு இருந்தேன்...

அவசியம் வருகிறேன்...ஆனால் நான் யாரென்று அவனுக்குத் தெரிய வேண்டாம்''

இந்தச் சம்மதம் கிடைத்தவுடன் உதயன் புறப்பட்டான்—

சற்று தூரம் நடந்தபோது...பின்னாலிருந்து ஒரு பெண் குரல்...

உதயன் திரும்பிப் பார்த்த போது அழகான ஒரு பெண் நின்று கொண்டு இருந்தாள். இடையில் ஒரு முண்டும், மேல் ரவிக்கையும் தவிர அவளது உடலில் வேறு ஆடைகள் இல்லை—

நல்ல நிலா வெளிச்சம்...அவள் நல்ல நிறத்துடன், தலையில் ஏராள முடியுடன் இருந்தாள்—மீனைப் போன்ற கண்களின் அமைப்பு செதுக்கி வைத்த மூக்கும் சிவந்த உதடுகளும் அவள் அழகிற்கு மெருகேற்றின— ஒரு அப்சரஸ் வழி தப்பி வந்து விட்டதைப் போல் தெரிந்தாள்.

''யார் நீங்கள்?''

''எல்லாம் அங்கே போன பிறகு சொல்கிறேன்''

என்று அவன் பின்னாலேயே நடக்க ஆரம்பித்தாள்.

அவள் மீதிலிருந்து தாழம்பூவின் மணம் வீசிக் கொண்டு இருந்தது—

உதயனை அவள் கவர்ந்து விட்டாள்—வரவேண்டாம் என்று சொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. அதனால் அவன் முன்னே நடந்தான்.

அவள் பின் தொடர்ந்தாள்—யாரையும் கவர்ந்து இழுக்கக்கூடிய அழகுள்ள ஒருபெண், வருகிறேன் என்று சொன்னால், வேண்டாம் என்பவன் உண்மையான ஆண் மகனாக இருக்கமாட்டான் என்று உதயன் அப் போது நினைத்தான்.

கோவிலகத்தின் முன் வாயிலை அடைந்த போது, அவள் உதயனை அழைத்தாள்—

''நான் உள்ளே வந்தால் அம்மா ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்—அதனால் நான் இரவு படுக்கும் நேரமாகும் போது வருகிறேன்'' என்றாள்—

உதயன் பதில் பேசாமல் உள்ளே வந்த போது, மாமா, 'திருமேனி வருவதற்கு ஒப்புக்கொண்டாரா' எனக் கேட்டார்.

''கண்டிப்பாக வருகிறேன் என்று சொல்லி இருக்கிறார்'' மாமாவிற்குத் திருப்தி—

அம்மா இரவு ஆகாரம் உண்ண அழைத்தாள் இந்திராவின் சாவின் காரணத்தை அம்மா உள்பட எல்லோரும் மறைத்து வைத்து இருந்தனர் வெளியார் அறியாமல் விஷயம் தெரிந்தால் பயப்பட்டு போவார்கள் என்பதும் ஒரு காரணம்—

சுபத்ரா இன்னமும் தாயை கட்டிக்கொண்டுதான் தூங்குகிறாள்—

மணி பத்து

உதயன் தன் படுக்கை அறைக்கு வந்தான் அப்போது கட்டிலில் படுத்திருந்தவள் அந்த யுவதி அவள் பாதி நிர்வாணமாக இருந்தாள் பார்வையில் ஆகர்ஷிக்கும் சக்தி நிறைந்து இருந்தது—

''எப்படி நீ உள்ளே வந்தாய்?''

''நீங்கள் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது நான் யாருக்கும் தெரியாமல் உள்ளே வந்து விட்டேன்''

''நல்ல வேளை அம்மா பார்க்கவில்லை—அது என் அதிர்ஷ்டம்''

இந்த சமயம் சுவரில் இருந்த கோல் விளக்கில் இருந்த கௌளி இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தது,

அதன் கண்களில் இருந்து தோன்றிய பிரகாசம், அந்த யுவதியின் மீது விழுந்தது.

அந்தப் பிரகாசந்தான் அவளை கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

அவள் அருகில் செல்லும் போது உதயனின் மனதில் கிளாராவின் ரூபம் தோன்றியது.

தன் உள்ளத்தைக் கவர்ந்த அப்பெண்ணை விட்டு விட்டு இன்னொரு பெண் மீது ஆசை வைக்க அவன் மனம் இடம் தரவில்லை—

காலை ஏதோ அமுக்கிப்பிடித்துக் கொண்டது போல் அவன் மேலே நகராமல் அதே இடத்தில் நின்றுவிட்டான்.

''ஏன் நின்று விட்டீர்கள்?''

''ஒன்றுமில்லை''

''என்னை உங்களுக்குப் பிடிக்க வில்லையா?''

உதயன் பதில் பேசவில்லை.

பல்லி இப்போது குரல் கொடுத்தது—

இந்த நேரத்தில் அந்த சப்தம் மிகவும் பயங்கரமாக இருந்தது—

அச்சப்தத்தைக் கேட்டவுடன், படுக்கையில் இருந்த யுவதி, பல்லியைப் பார்த்தாள்.

அதன் கண்கள், அவளுக்கு ஏதோ செய்தியைச் சொல்வது போல் உருண்டு கொண்டே இருந்தன— இதைக் கண்ட அந்த அழகி. கட்டிலில் இருந்து இறங்கி வந்து, உதயனின் தோளில் கை வைத்தாள்.

''வாங்க...'' என்று அழைத்தபடி, உதயனை அவள் மெதுவாக கட்டிலுக்கு அழைத்துச் சென்றாள் உதயன் அவள் தொட்டவுடன் மயங்கிப் போனான்— அவளது இச்சைக்குக் கட்டுப்பட்டு விட்டான் போல் நடந்து கொண்டான்—

இச்சமயம் சுவற்றில் இருந்த பல்லி மெதுவாகக் கீழே இறங்கியது—

விளக்கு நன்றாக எரிந்து கொண்டு இருந்தது—அதை அணைப்பதுதான் பல்லியின் லட்சியம்!

தனது வலதுகாலை உயர்த்தி தீபத்தின் மீது நீட்டிய போது, அங்கே கருமை படர்ந்தது—

உதயன் திடீரென திரும்பிப்பார்த்தான்—

இதைப்புரிந்து கொண்ட பல்லி, விரைவாக விளக்கின் பின் போய் மறைந்தது.

அறைக்குள் திடீரென இருள்கவிழ்ந்து, பின்வெளிச்சம் தோன்றவே, அவனுக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது.

சுற்று முற்றும் பார்த்தபோது அவன் கண்களுக்கு ஏதும் தென்படவில்லை—

இருந்தாலும், அந்த அறைக்குள் ஏதோ அசாதாரண மான ஒன்று இருக்கிறது என்றுஅவன் மனம் அறிந்தது.

ஆனால் அது என்ன வென்று அவனுக்குத் தெரிய வில்லை.

விளக்கின் பிரகாசம் அறைக்குள் நிறைந்து இருந்தது இந்தப் பிரகாசம் தனது லட்சியத்திற்கு எதிரியாக இருக்கிறதென்று நினைத்த பல்லி, மெதுவாக விளக்கின் அருகேவந்துஎண்ணெயை உறிஞ்சிக்குடிக்க ஆரம்பித்தது.

பிறகு திரியையும் சாப்பிடத் தொடங்கியது!

கறுத்த புகை மேலே கிளம்பியது—

இதனால் அறைக்குள் இருட்டு பரவியது பல்லி மெது வாகச் சுவற்றிலிருந்து கீழே இறங்கி வந்து கட்டிலின் தலைப்பகுதியை அடைந்தது பயங்கர அமைதி...

''என்ன விளக்கு அணைந்து விட்டதா?'' கட்டிலில் படுத்திருந்த யுவதி கேட்டாள்

''ஆமாம்! நான் விளக்கை ஏற்றுகிறேன்'' என்ற உதயன், நெருப்பெட்டியைத் தேடினான்.

எப்போதும் இருக்குமிடத்தில் நெருப்பெட்டி இல்லை. அதனால் அவன் மேஜைக்குள் பார்த்தான்—

''எதுக்கு விளக்கு?' அவள் கேட்டாள்— இப்படிக் கேட்டுக்கொண்டே அவள், உதயனை இழுத்துக்கட்டிலில் போட்டுக் கொண்டாள்...

இந்த நேரத்தில் அவளது உருவம் மாறிக் கொண்டு வந்தது—

பயங்கரமான ரூபமுள்ள ஒரு யட்சி அவள்!

கைகளில் இருந்த நகங்கள் நீளமாக, கடைவாயில் பற்கள் தோன்றி வெளியே வந்தன.

அவளது கைகள் மெதுவாக அவனது இடுப்பின் அருகே போக, அந்த அறையிலிருந்து ''ஹோ'' என ஒரு அலறல் கேட்டது!

# 10

உதயனின் இடுப்பில். திருமேனி கொடுத்த தாயத்தின் மீது, யட்சியின் கைப்பட, பாம்பு கடித்து விட்டதைப் போல் அவள் அலறினாள்—

அவளது சக்தியாவும் ஒரு நொடியில் மறைந்தது. தளர்ந்து கட்டிலில் விழுந்த அவளது உடல் சிறிதாகிக் கொண்டே வந்தது—

கைக்கு கிடைத்த நெருப் பெட்டியைக் கொண்டு விளக்கை ஏற்ற நினைத்தபோது, அதில் எண்ணை இல்லை. வெளியே போய் இன்னொரு விளக்கை எடுத்து வந்து ஏற்றினான்.

படுக்கையைப் பார்த்த போது அங்கே ஒரு சிறு குழந்தை கிடந்தது. ஆனால் முகம்? ஒரு வௌவாலின் முகம் போல இருந்தது.

சில நொடிகளில் அதற்குச் சிறகுகள் வளர்ந்தன.

திடீரென அது பறக்கத் தொடங்கி, ஜன்னல் வழியாக வெளியேறிவிட்டது.

ஜன்னல் கதவை அடைத்துவிட்டு உதயன் கட்டிலில் படுத்தான்.

திடீரென ஏதோ ஒன்று குதித்து ஓடியது போல் அவனுக்குத் தோன்ற, திரும்பிப் பார்த்தான் கதவு தானாக திறக்க. புகை மண்டலத்தில் ஒரு உருவம் வெளியேறியது அவன் கண்களுக்குத் தெரிந்தது.

பங்களாவிற்குத் திரும்பிய விக்டர் மாடிப்படி ஏறியபோது கிளாராவின் கதவு மெதுவாக மூடுவதைப் பார்த்தார்.

தன் அறையில் போய் அமர்ந்த விக்டருக்கு உதயனைப்பற்றியோ, உள்ளாட்டில் திருமேனியைப்பற்றியோ சிந்தனை வரவில்லை ஆனால் அவரது மனம் கிளாராவைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருந்தது. அவளிடம் ஏதோ ஒரு சக்தி இருப்பது அவருக்குத் தெரிந்தது...அது என்ன சக்தி என்பதுதான் அவருக்குப் புரிபடாமல் இருந்தது.

அவளை இல்லாமல் செய்வதற்கும் முடியவில்லை.

அவருடைய மகா மாந்திரீக சக்தியை. கிளாரா மிகவும் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளுகிறாள்.

இல்லை அவளுக்குத் தெரியாமலேயே இப்படி ஒரு சக்தி இயங்குகிறதா?

திடீரென அவர் மனதில் ஒரு புதிய ஆசை தோன்றியது-

கிளாராவிடம் ஏதோ ஒரு அற்புத சக்தி இருக்கிறது-

ஆனால் தன்னிடம் உள்ள சக்தியைப்பற்றி அவள் அறியமாட்டாள்-

அதற்கு எப்படியாவது ஒரு எதிர்ப்பு கண்டுபிடிக்க வேண்டும்!

அடுத்த நாள் இரவு. விக்டர் அலமாரியில் மறைத்து வைத்திருந்த சிறிய இரும்புப் பெட்டியை எடுத்துத் திறந்தார் அதில் இருந்த ஓலை கிரந்தத்தை எடுத்து, சிம்னி விளக்கின் பிரகாசத்தில் அதை படிக்க ஆரம்பித் தார் எதிராளிகளை, தோற்கடிக்க பலமார்கங்கள் அதிலே குறிப்பிடப்பட்டுஇருந்தன-

ஆண் ஆனாலும் பெண் என்றாலும் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வழி அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது-

பெண்களாக இருந்தால், உடலுறவு சேர்க்கை மூலம் அடக்க ஒரு வழி இருந்தது-

கன்னியான பெண்ணுக்கு சில அற்புத சித்திகள் உண்டு!

அது சில கந்தவர்களின் சேர்க்கையால் ஏற்படுவது உண்டு-

இது கனவில் ஏற்படும் மாயாஜாலம்?

இதைப் போன்ற கன்னிப் பெண்களின் கற்பை அழித்து விட்டாலோ, அவர்களது சக்தி தானாக மறைந்துவிடும்.

இந்த சமயத்தில் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

இரும்புப் பெட்டியை அலமாரியில் மறைத்து வைத்த பிறகு. அவர் கதவைத் திறந்தார். வந்தது சோபியா?

இடுப்பில் ஒரு வேட்டியுடனும், மேலே ஒரு துண்டைப் போர்த்திய கோலத்தில் உள்ளே வந்த சோபியா கட்டிலில் அமர்ந்தாள்.

அப்போது மணி பதினொன்று!

விக்டர் மனதில் அப்போது ஒரு எண்ணம் திடீரென உதித்தது-

சோபியாவை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினால், கிளாராவைப்பற்றி மேலும் சில விவரங்களைச் சேகரிக்க முடியும்!

சோபியாவை மாந்திரீக சக்திக்கு அடிமைப்படுத்தி விட்டு. அவள் மூலமாகவே கிளாராவை தன் அறைக்குள் கொண்டுவர முடியும்.

அதன் மூலம் அவள் உடலில் உள்ள சக்தியை நாசம் செய்யலாம்!

பெண்களைப்பற்றி எல்லாமே அறிந்த மாந்திரீகன் விக்டர் தன் கைவிரல்களின் ஜாலத்தால் சோபியாவை மயக்கி வீழ்த்தினான்-

இந்த கிளாரா எப்போது பிறந்தாள்? விக்டர் கேட்டார்

அவள் ஒரு கிருஸ்மஸ் இரவில் அல்லவா பிறந்தாள்

''என்ன வயது அவளுக்கு?''

''இந்த வருடம் பதினாறு முடிகிறது''

''சரீர வளர்ச்சி மட்டு மல்ல...அவளது புத்தியும் தேவைக்கதிகமாகவே வளர்ந்து இருக்கிறது''

''இந்த வீட்டில் எந்த ஒரு வித்தியாசமில்லாமல் அவள் வளர்ந்தாள்''

''அது எனக்குத் தெரியுமே''

ஏன் அவளைப்பற்றி இவ்வளவு முக்கியமாகக் கேட்கிறீர்கள். சோபியா கேட்டாள்-

இதற்குத் தகுந்த பதில் சொல்லவேண்டும்-

என்று விக்டர் நினைத்தார். எப்படியாவது அவளை அங்கிருந்து துரத்தி விட வேண்டும் என்பது விக்டரின் முடிவு.

அவள் அங்கே இருந்தால், தன் வேலைகளுக்கெல்லாம் மிகவும் இடைஞ்சலாக இருக்கும்.

இந்த வீட்டில் அவளை இருத்தி, தன் வசமாக்குவதும் முடிகிற காரியம் இல்லை.

இந்த வீட்டில் எல்லோரும் தன்னை சித்தப்பாவாக நினைக்கிறார்கள்

ஆனால் கிளாரா அங்கே ஒரு வேலைக்காரி!

விக்டரின் கண்கள் கிளாரா மீது விழுந்திருக்கிறது என்று சோபியாவுக்குத் தெரிந்தால். அது மிகவும் மோசமாகும்!

அவளை இவ் வீட்டில் இருந்து துரத்திவிட வேண்டும் அப்போதுதான் தன் விருப்பத்திற்கு ஏற்றார்ப்போல் அவளைக் கொண்டு வர முடியும்!

இதற்கு சோபியாவின் உதவி தேவை!

அவள் மனது வைத்தால் தான் அது முடியும்!

என்னுடைய நண்பன் ஒருவன் பெரிய எஸ்டேட் முதலாளி. அவனுக்கு ஒரு வேலைக்காரி தேவை. கிளாரா மாதிரி ஒரு பெண் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

''ஏற்கனவே நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன் இந்த மாளிகையில் அவளுக்கும் ஒரு பங்கு இருக்கிறது என்று!''

''அது எனக்குத் தெரியும்... ஆனால் அவள் ஒரு மைனர்...இந்த சொத்து விபரங்களை அவள் அறிய மாட்டாள். நீங்கள் மட்டும் சம்மதம் கொடுத்தால் போதும்... மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன்...''

விக்டர் இப்படிப் பேசியதன் மூலமாக சோபியாவை நிர்ப்பந்தித்தது போல இருந்தது -

இப்போதுள்ள நிலைமையில் விக்டர் சோபியாவின் ரட்சகன்!

அதனால், அவரது விருப்பு, வெறுப்புகளை லேசாக உதறிவிட முடியாது.

''அவளிடம் இதைப் பற்றிப் பேசிவிட்டு உங்களிடம் முடிவைச் சொல்கிறேன்'' என்றாள் சோபியா -

மறுநாள், சோபியா தன் பெண்களிடம் கிளாராவின் விஷயத்தைப் பற்றிப் பேசினாள் -

ஷைனி கிளாராவை வெளியே அனுப்புவதை எதிர்த்தாள் -

''உங்கள் சித்தப்பா...அவளது ஒரு நல்ல எதிர்காலத்திற்குத்தானே, இதைச் சொல்கிறார்?''

ஷைனி அப்போதும்முடியாதுஎன்று சொல்லிவிட்டதால்,சோபியா,கிளாராவைப்பற்றிப் பேசுவதைநிறுத்திக் கொண்டார்.அன்று மத்தியான உணவிற்குப் பிறகுபேசிக்

கொண்டிருக்கையில், விக்டர் பழையபடி கிளாராவின் விஷயத்தை ஞாபகப் படுத்தினார் -

"நான் ஷைனியிடம் இதைப் பற்றிப் பேசினேன், அவள் கிளாராவை வெளியே அனுப்ப முடியாது என்று சொல்லி விட்டாள்."

"அவள் பேச்சை நீங்கள் கேட்க வேண்டுமா?"

"பெண்களிடம் கேட்காமல் எப்படி நான் ஒரு முடிவு எடுக்க முடியும்?"

"இருந்தாலும் இப்போது நான் சொல்வதைக் கேளுங்கள்... உங்களுக்கு கார்டியனாக நான்தானே வந்திருக்கிறேன்..."

இப்பேச்சு சோபியாவை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது -

"இன்னொரு தடவை அவளிடம் பேசிப் பார்க்கிறேன்" என்று அவள் விக்டரை சமாதானப்படுத்தினாள்.

அன்று மாலை ஷைனி கோவிலகத்திற்குப் போனாள். உதயனிடமும், சுபத்திராவிடமும் அவள் கிளாராவின் விஷயத்தைப் பற்றிச் சொன்னாள் -

"விக்டர் மிகவும் கெட்டிக்காரர். வீட்டில் பல மாற்றங்களை செய்து கொண்டே இருக்கிறாரே ஏன்?"

"அதைப் பற்றி எனக்குத் தெரியாது. விக்டர் சித்தப்பா எது சொன்னாலும் அது அம்மாவிற்கு வேத வாக்கு!"

"ஓகோ... அப்படியா? இந்த கிளாராவிடம் விக்டருக்கு என்ன வெறுப்பு?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை" ஆனால் அவளைப் பார்க்கும் போதெல்லாம், அவரது பார்வையே வேறு மாதிரியாக இருக்கிறது"

உதயன் மனதில் கணக்கு போட ஆரம்பித்தான்— விக்டர், கிளாராவிற்கும் தொந்தரவு கொடுக்க முடிவு எடுத்திருக்கிறார்—

இதை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் பின்னால் பெரிய தொல்லை!

அவளை நாசம் செய்தாலும் செய்து விடுவார்!

அதற்கு முன்பு ஏதாவது செய்துதான் ஆக வேண்டும்! ஆனால் அது எப்படி முடியும்?

இரவு சோபியா, விக்டரின் அறைக்கு வந்தாள்! ஆனால் இப்போது விக்டரின் லட்சியமெல்லாம் ஷைனி மீது லயித்திருந்தது—

அன்று இரவு எப்படியும் ஷைனியை தன்படுக்கைக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்று முடிவு செய்து இருந்தார்!

கட்டிலில் கிடந்த சோபியாவின் நெற்றியில் தனது சுட்டுவிரலை வைத்து 'நித்ராமந்திரத்தை உச்சரித்தார்—

சோபியா ஆழ்ந்த நித்திரையில் விழுந்தாள்.

விக்டர் மெதுவாக எழுந்து ஷைனி படுத்திருந்த அறைக்கருகே போனார். தட்டினார். ஆனால் கதவைத் திறந்தது கிளாரா!

# 11

**கி**ளாராவை அங்கே பார்த்ததும் அவரது நெடிய உருவம் கூனிக்குறுகியது.

இவள் எங்கே?

தான் ஏன் ஷைனியின் அறைக்கு இந்த நேரத்தில் வந்தேன்என்பதற்கான காரணத்தை அவளிடம்சொல்லா விட்டால் அசிங்கமாகிவிடும் என்பதை அவர் அறிவார்.

அதனால்

''இங்கே என்ன சப்தம்?''

''ஒன்றுமே இல்லையே!''

''ஷைனி எங்கே?''

''தூங்குகிறாள்!''

''நீ ஏன் இங்கு வந்தாய்?''

''நான் இங்கே தான் படுக்கிறேன்''

''நீ ஏன் உன் அறையில் படுக்கக் கூடாது?'' கிளாரா இதற்கு பதில் சொல்ல வில்லை.

''நீ என்னுடன் வா! உன்னிடம் நான் கொஞ்சம் பேசவேண்டும்''

''என்னிடம் பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' கிளாரா புரியாமல் கேட்டாள்...

''அதெல்லாம் அங்கு வந்த பிறகு சொல்கிறேன்!'

''எனக்கு உங்கள் மீது நம்பிக்கை இல்லை...நீங்கள் இங்கு வந்ததிலிருந்து நிறைய குழப்பம்!''

''உனக்கு எல்லாம் தெரியும் இல்லையா?''

''தெரியும்...ஏதாவது ஒருநாள் நான் எல்லாவற்றை யும் வெளியில் சொல்வேன்'' இதைக் கேட்ட விக்டர் மேற்கொண்டு பேச முடியாமல் தன் அறைக்கே வந்து சேர்ந்து விட்டார்—

அவளை எப்படியாவது அபாயத்திற் குள்ளாக்க வேண்டும்,

ஆனால் அதற்கு முன், அவளுக்குள் இருக்கும் 'சக்தி' அவளுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்!

அவளது பின்னால் சென்று தான் கண்டுபிடிக்க வேண்டும்.

அவள் பிரத்தியேகமாக பூஜை செய்யும் கடவுள் ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்தார் அப்படியும் ஏதும் இல்லை என்று இரண்டே தினங்களில் தெரிந்து விட்டது.

அடுத்தபடியாக அவளை எப்படியாவது பலாத்காரம் செய்து கெடுத்துவிடவேண்டும் என்று விக்டர் முடிவு செய்தார்—

கிருஸ்துமஸ் நெருங்கி கொண்டு வந்தது. சூசியின் மரணத்தினால் சோபியாவின் வீட்டில் கிருஸ்துமஸ் கொண்டாட்டம் இல்லை ஆனால் கோவிலில் பிரார்த்தனை இருக்குமே அதற்கு எல்லோரும் போவதென்று முடிவாயிற்று விக்டர் நிர்பந்தப்படுத்திய தால் எல்லோரும் இரவு பிரார்த்தனைக்குப் போவதென முடிவாயிற்று.எல்லோரும் போய் விட்டால்வீட்டையார் பார்த்துக் கொள்வது என்கிற பிரச்னை எழுந்தபோது.

''நான் வீட்டில் இருக்கிறேன்!'' என்று கிளாரா சம்மதம் சொன்னாள்.

பாண்ட் கோட்டு அணிந்த பின் கண்களில் கண்ணா டியையும் போட்டுக்கொண்ட விக்டர் அசலில் அவரது அண்ணனைப் போலவே இருந்தார்.

எல்லோரும் கேட் அருகே வந்த போது விக்டர் திரும்பிப் பார்த்தார்.

கிளாரா வாயிற் கதவை மூடிக்கொண்டு இருந்தாள்.

ஆலயம் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து தான் போக வேண்டும்.

அந்த 'சர்ச்' மிகவும் பெரியது; பல வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது.

கூட்டம் நிறைய இருந்தது.

இந்தப் பணக்காரக் குடும்பம் உள்ளே நுழைந்ததும் எல்லோர் கவனமும் அவர்கள் பக்கம் திலம்பியது.

விக்டரின் உடையும், தோரணையும் எல்லோரையும் அசத்தியது.

மணி பன்னிரெண்டு ஆலயத்தில் சடங்குகள் ஆரம்பமானவுடன் எல்லோரும் சர்ச்சினுள் புகுந்தார்கள்,

ஆனால் விக்டர் மட்டும் வெளியே இருந்த ஒரு மரத்தடியில் தங்கி விட்டார்,

திடீரெனத் திரும்பி மிகவும் வேகமாக நடக்க ஆரம்பித்தார். பார்ப்பவர்களுக்கு பறப்பதைப் போலவே தெரியும்-

இரண்டு மூன்று நிமிடங்களில், ஒரு கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து மாளிகைக்கு வந்து சேர்ந்தார்-

மாடியில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது-

விக்டர் கதவைத் தட்டினார்-

கிளாரா கதவைத் திறந்தாள்-

அங்கே விக்டர் நிற்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்-

''அண்ணி, உன்னையும் ஆலயத்திற்கு வரச் சொன்னார்கள்''

கிளாராவின் மனது சற்றே சமாதானமடைந்தது-

அவளுக்கும் சர்ச்சுக்குப் போக ஆசைதான்! ஆனால் வீட்டில் யாரும் இல்லையே என்பதால் இங்கே இருக்க ஒப்புக் கொண்டாள்-

உள்ளே வந்த விக்டர் சோபாவில் அமர்ந்து கொண்டே,

''நீ போய் ஆடை மாற்றிக் கொண்டுவா!'' என்றார்-

கிளாரா தன் அறைக்குப் போய், கதவைத் தாளிட்டுக் கொண்டு, தன் பெட்டியில் இருந்து புதிய துணிகளைத் தேடி எடுத்துக் கொண்டு திரும்பிய போது, அங்கே இடுப்பில் ஒரு லுங்கியுடன் விக்டர் நின்று கொண்டு இருந்தார்-

தன்னைக் கெடுக்கத்தான் வந்திருக்கிறார் என்பதை கிளாரா புரிந்து கொண்டாள்-

''இந்த அறைக்குள் இருந்து வெளியே போகிறீர்களா?'' என்று அவள் பயந்து கொண்டே கேட்டாள்-

''நாம் இருவர் மட்டுந்தானே இங்கே இருக்கிறோம்- நம்மை யாரும் பார்த்து விடமாட்டார்கள்'' என்று சொல்லியபடியே அவர் அவளை நெருங்கினார்-

சுற்று முற்றும் பார்த்த கிளாரா, சுவற்றின் மூலையில் சாய்த்து வைக்கப்பட்டு இருந்த சிறிய இரும்பு கடப்பாறையை கையில் எடுத்துக் கொண்டாள்-

விக்டர் மீது சந்தேகம் வந்த நாளிலிருந்தே அவள் இந்த ஆயுதத்தை இங்கே வைத்து இருக்கிறாள்-

''என்ன கிளாரா இது? உனக்கு வேண்டாத வேலை'' என்று சிரித்துக் கொண்டே விக்டர் சொல்ல,

''நீங்கள் என்னைத் தொடக் கூடாது?'' என்று ஆயுதத்தை ஓங்கிக் கொண்டே சொன்னாள்-

''சந்தர்ப்பத்தை வீணாக்காதே...'' என்று சொல்லிக் கொண்டே அவர் மேலும் நெருங்கி வந்தார்.

கடப்பாரையை திடீரென உயர்த்தி அவள் விக்டரை ஓங்கி அடித்தாள்—

இதை எதிர்பார்த்த அவர் தனது வலது கையை உயர்த்தி அதைத் தடுத்தார்— அவரது கைப்பட்டதும். அந்த கடப்பாரை வளைந்தே போய்விட்டது.

கிளாரா வியப்போடு பயந்து நின்றாள்— பயத்தால் உடல் விறைத்தது நடுங்கவும் ஆரம்பித்தது—

அவள் கையில் இருந்த அந்த இரும்பு கடப்பாரையை விக்டர் வாங்கி, ரப்பரை வளைப்பது போல் வளைத்து', தூக்கி ஒருமூலையில் எறிந்தார்—பிறகு அவளைப் பிடிக்க கை நீட்டினார்—

அவள் பின்னால் நகர்ந்தாள்—

ஆனால் விக்டர்எட்டி அவளதுபாவாடையை பிடித்து இழுத்து கிழித்தார்.

அவளது செளந்தர்யமான கால்களைக் கண்டவுடன் அவருக்கு மோகம் தலைக்கேறியது. கண்கள் பிசாசுகளின் கண்களைப் போல் சிவந்து ஜொலித்தன!

விக்டர் அவள் மீது பயங்கரமாகப் பாய்ந்தார். ஆனால் கிளாரா அந்த பிடியிலிருந்து தப்பி கட்டிலின் மறுபுறம் சென்று ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். கட்டிலை சற்றே நகர்த்தியபின், அவர் போர்வையைப் பிடித்து இழுத்தார்,

கிளாரா இதற்குப்பின்னால் 'ஓ!' வெனக் கதறி அழ ஆரம்பித்தாள்—

''நீ அழுதுவதால எந்தப்பயனும் நடக்கப் போவதில்லை...இன்றைக்கு நான் உன்னை அனுபவிக்காமல் போகமாட்டேன்'' என்றார் விக்டர்.

விக்டர் பேசிக் கொண்டே அவளைப் பிடித்தார்.

ஆனால்...

திடீரென நெருப்பைத் தொட்டது போல் அவர் பின் வாங்கினார்—

தன் மனப்பிராந்தியோ இது என அவர் ஒரு கணம் நினைத்தார்.

பின் வாங்கியதும் அவளை உற்றுப் பார்த்தார். தன் மந்திர சக்தியால். அவளை நினைவிழக்கச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தார்.

எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை எடுத்து தன் வாயினருகே கொண்டுபோய் மந்திரம் ஜெபித்தார். பிறகு பலமாக ஊதவே ஒரு ஜுவாலை புறப்பட்டுப் போய், அவளை வட்டமிட்டு நின்றது.

சில வினாடிகள் கழித்து அவர் மீண்டும் மந்திரம் சொல்ல ஜுவாலை பழையபடி விளக்கிற்கே திரும்பியது.

அவர் மீண்டும் அவளை எட்டிப் பிடித்தார்!

# 12

அடுத்த நிமிஷம் மின்சாரத்தைத் தொட்டது போல 'ஓ' வென அலறிய விக்டர், திரும்பிவேகமாக ஓடி அவரது அறைக்கு வந்து சேர்ந்தார்—

இதுவரை அவருக்கு இப்படிபட்ட தோல்வியே ஏற்பட்டதே இல்லை.

அதுவும் ஒரு பெண் விஷயத்தில்...

கிளாராவிடம் உள்ள அந்த அற்புதமான சக்தி எதுவென்று அவருக்கு புரியவே இல்லை!

தன் அறைக்கு வந்தவுடன், விளக்கை ஏற்றினார்— தனது கையைப் பார்த்தார்—

ஏற்பட்ட தாக்குதலினால் தனது கை வெந்து தோல் உரிந்து போயிருக்கும் என்று அவர் நினைத்தான்—

நல்ல வேளையாக அப்படி ஏதும் நடக்க வில்லை—

இந்த இரகசியம் என்ன வென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்!

கிளாராவிற்கு தன்னிடம் உள்ள சக்தியைப் பற்றியே எதும் தெரியாது!

அவள் விக்டரைக் கண்டு பயந்து கொண்டு இருக்கிறாள்!

இதன் காரணமாகத்தான், அவள் இதுவரை விக்டரைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை!

தன் நிலைக்கண்ணாடிமுன் அவள் தன்னைப் பார்த்துக் கொண்டபோது அதில் தெரிந்த உருவம் யூதாவினுடையது!

அந்த உருவம் மெதுவாக மறைந்தபின், அதே கண்ணாடியில் கருங்கல்லில் ஆன ஒரு குகை தென்பட்டது.

அதனுள் பயங்கரமானதும் பிசாசு கோலத்திலும் இருந்த ஒரு விக்ரகம்!

அதன் முன்னால் குவியலாக எலும்புக் கூடுகள்!

ஆம்! அது யூதா பலிகொடுத்த மனிதர்களின் எலும்புகள்—மண்டை ஓடுகள்!

அதனால்தான் யூதாவிற்கு இவ்வளவு மாந்திரீக சக்தி கிடைத்தது!

பல வருடங்களாக மறைந்து கிடந்த அந்த ஸ்தலம், இப்போது அவருடைய நினைவுக்கு வந்தது!

அந்தக் கிராமத்தின் கிழக்குப் பக்கத்தில் இருந்த மலையின் சரிவில் பாறைகளுக்கு நடுவே, யாருக்கும் தெரியாத வகையில் இந்தக் குகை இருந்தது!

அங்கே போக வேண்டும்!

ஆனால் இப்போது யாரை பலிகொடுப்பது?

விக்டர் யோசித்தார்—

இப்போது உள்ள நிலையில், பலிக்குத் தகுந்த ஆள் யாரும் இல்லை என்றே அவருக்குத் தோன்றியது.

இப்போது போதாத குறைக்கு தனக்கு பரம எதிரியாக உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரியும் தோன்றியிருக்கிறார்!

அதனால் பழக்கப்பட்ட யாரையுமே அக்குகைக்கு கொண்டு போக முடியாது!

சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் ஒரு நபரை பலிக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும்!

திடீரென அந்த மாளிகையில் இருக்கும் இன்னொரு வேலைக்காரியைப் பற்றி அவருக்கு ஞாபகம் வந்தது. வேலையை முடித்துவிட்டு, தன் வீட்டிற்குப் போகும் வழியில் அவளை மடக்க வேண்டும்!

அவள் தான் தன் பலிக்கு ஏற்ற நபர் என்று அவன் தீர்மானித்துக் கொண்ட பிறகு படுக்கையில் விழுந்தார் விக்டர்—

அப்போது அவருக்கு கிளாராவின் ஞாபகம் வந்தது! தான் அவளை பலாத்தகாரம் செய்த விஷயத்தை அவள் சோபியாவிடம் சொல்லியிருக்குமா?

அப்படி நடந்திருந்தால் அதனால் புதிய சங்கடங்கள்! தான் யூதா என்பதை கோவிலகத்தில் உள்ள வர்மாவோ, இல்லை உள்ளாட்டில் நம்பூதிரியோ அறிந்தால், அதுவும் ஆபத்தான நிலைக்கு அடிகோலும்!

விக்டர் படுக்கையில் இருந்து எழுந்து கிளாராவின் அறைக்குப் போய், கதவைத்தட்டினார்.

உள்ளே இருந்து எந்த விதமான சப்தமும் இல்லை.

விக்டர் மனதில் உடனே ஒரு யோசனை தோன்ற, அருகில் சுவற்றில் இருந்த ஒரு சிறு பல்லியை எடுத்து தன் வாயருகே வைத்து சில மந்திரங்கள் சொல்லி, அதை கதவின் கீழே விட்டார்.

உள்ளே போன பல்லி, கதவின் தாளைத் திறந்தது. கதவைத்திறந்து அவர் உள்ளே பார்த்தபோது அவள் கட்டிலில் அமர்ந்து, முழங்காலில் தலையை வைத்து குனிந்து அமர்ந்திருந்தாள்—

''கிளாரா! இந்த சம்பவத்தை யாரிடமாவது சொன்னால், உன்னை வெட்டி கழுகுகளுக்கு இறையாக்கி விடுவேன்'' என்றார்.

தலை நிமிர்ந்த அவள் மெதுவாக 'சம்மதம்' என்பதாக தலையை ஆட்டினாள்—

''இதோ பார்!'' என்று அவளை அழைத்து தன் கையை நீட்ட, கை விரல்கள் ஒவ்வொன்றும் நீண்டு பாம்புகளாக மாறி, அந்தரத்தில் படமெடுத்து ஆடின!

கிளாரா பயந்து அலறினாள்!

''ஞாபகத்தில் இருக்கட்டும்'' என்று தன் கை விரல்களை பழையபடி ஆக்கிக் கொண்டு, விக்டர் மறுபடியும் சர்ச்சுக்குப் போனார்!

அவர் மாளிகைக்கு வந்து திரும்பியது யாருக்குமே தெரியாது!

மறுபடியும் எல்லோரும் வீட்டிற்கு திரும்பியபோது யாவரும் மௌனமாக நடந்து வந்தனர், அவர்கள் மனதில் சோகம் நிறைந்திருந்தது. ஏனெனில் சென்ற வருடம், இந்த நேரத்தில் அவர்களுடன் சூசியும் இருந்தாள்!

மறுநாள் மதியம் உணவு வேளை முடிந்தது. அன்று கிருஸ்மஸ் என்றாலும் விசேடமான சாப்பாடு ஏதும் இருக்கவில்லை.

சாப்பிடும் சமயத்திலும், மற்ற சமயத்திலும் விக்டர் கிளாராவைப் பார்த்துக்கொண்டே இருந்தார்-அவரது பார்வை படும்போதெல்லாம் கிளாரா தலையைக்குனிந்து கொள்வாள்!

அவள் பயப்படுகிறாள் என்பது இவருக்குத் தெரிந்தது. அதனால் இவளைப்பற்றி இனி கவலை இல்லை!

உணவு வேலைக்குப் பிறகு வேலைக்காரியை அழைத்த சோபியா,

''துணிகளைத் துவைத்துப் போட்டு விட்டுப் போ!' என்றாள்-சகஜமாக!

எல்லா வேலைகளையும் அவள் முடித்த போது மாலை மணி ஆறாகிவிட்டது, இருள் பரவ ஆரம்பித்தது,

அவள் வாயிற் கேட்டைத் திறந்துகொண்டு வெளியே நடந்தாள்!

அதே சமயம், விக்டரும் யாரும் அறியா வண்ணம் மாளிகையை விட்டு வெளியேறி வேலைக்காரியைத் தொடர்ந்தார்.

அவள் அருகில் வந்ததும், தன் தலைமுடி ஒன்றைப் பிடுங்கி எடுத்து, அதன் மீது சில மந்திரங்களை உச்சாடனம் செய்து, வேலைக்காரியின் மீது போட்டார்!

அது அவள் தலை மீது விழுந்தது...

வழக்கமாக வீட்டிற்குப் போகும் வழியில் போகாமல் அவள் நேராகப் போய்க்கொண்டு இருந்தாள்... மனித நடமாட்டமே இல்லாத, ஒரு காட்டுப் பகுதிக்கு அவள் வந்து சேர்ந்தாள் - நிற்காமல் நடந்துக் கொண்டே இருந்தவளை,

''சாரதா!'' என விக்டர் அழைத்தார்!

அவள் நின்றாள்.

''நீ வீட்டிற்கு வந்து சேர்ந்தது உனக்குத் தெரியாதா?' என அவளிடம் கேட்டார்-

அவளுக்கும் தன் வீட்டின் முற்றத்தில் நிற்பது போலவே ஒரு உணர்வு-

குகையின் கதவருகே வந்து,

''நானும் உன் வீட்டிற்குத்தான் வருகிறேன்'' என்றவர் குகையின் கதவைத் தள்ளிவிட்டு உள்ளே போக, சாரதாவும் அவர் பின்னால் போனாள்-

தன் கையில் இருந்து ஒரு மெழுகுவர்த்தியையும், நெருப்பட்டியையும் விக்டர் எடுத்தார். சாரதா அந்த வெளிச்சத்தில் அங்கே இருந்த கோர உருவச் சிலையைக் கண்டு பயந்தாள்!

தலை கொம்பும். இரு பக்கமும் இறக்கைகள், ஒரு பெரிய வால்-(அந்த வால் அம்பின் முனை போலிருந்தது)

முகம் மண்டைஓட்டைப் போலவும் இருந்தது- வலது கையில் ஒரு சூலம்! இதுதான் அந்த உருவச் சிலையின் அமைப்பு!

இதைப் பார்த்த சாரதா மிகவும் பயந்து அங்கிருந்து ஓட முயற்சித்தாள்-

விக்டர், எட்டி அவளைப் பிடித்தார் - அவள் மயங்கி கீழே விழுந்தாள்-வெறும் ரவிக்கை மட்டும் அணிந்திருந்த அவளைப் பார்த்த போது விக்டர் மனதில் விகார எண்ணம் தலை தூக்கியது-இந்தப் பெண்ணை ருசிக்க வேண்டும்! அவளை அந்த கோரச் சிலைக்கு முன்னால் கீழே கிடத்தி தனது காம இச்சையைப் பூர்த்தி செய்து கொண்ட பின்னர், தளர்ந்து கிடந்த அவளது மார்பின் மீது. சூலத்தை எடுத்து ஓங்கிக் குத்தினார்-

ரத்தம் அவர் முகத்திலும் தெரித்தது! அதே நேரத்தில் அக்கோரச் சிலையின் கழுத்தில் ஏதோ மின்னிக் கொண்டு இருந்தது-விக்டர் அருகில் போய் பார்த்த போது, அது சிறிய ஸ்வர்ண நாகம்! விக்டர் அதைத் தன் கையில் எடுத்தார்-

அது ஒரு மாலையாகியது!

அதை அவர் தன் கழுத்தில் போட்டுக் கொண்டார்.

குகையினுள் இருந்து அவர் வெளியே வந்த போது, தனக்கு அற்புதமான சக்தி புதிதாகக் கிடைத்திருப்பது போல், அவருக்குத் தோன்றியது! தனது சக்தியை உடனே பரிட்சை செய்து பார்க்க வேண்டும் என், அவருக்குத் தோன்றியது!

# 13

வலது பக்கமாக ஆற்றின் நீர் ஓடும் சப்தம்கேட்டது. அந்தக் கிராமத்தை இரண்டாக்கிக் கொண்டு ஓடும் ஆறு

அது - அந்த ஆற்றின் நடுவே இங்கொன்றும் அங்கொன்று மாக குழிகள் உண்டு -

மிகவும் பத்திரமாக நடந்தால், சில பக்கங்களில் ஆற்றை எளிதாகக் கடக்கலாம்!

விக்டர் இப்போது ஆற்றின் கரைக்கு வந்தார் - மழைக் காலம் - அதனால் ஆற்றில் செடி கொடிகளும் வேரோடு மரங்களும் அடித்துக் கொண்டு வந்தன. ஆற்றில் சுழி நிறையவே இருந்தன...

விக்டர் தனது பரிட்சையை ஆரம்பித்தார் - காட்டு சேப்பங் கிழங்கின் பெரிய இலை ஒன்றை எடுத்து அவர் ஆற்றில் போட்டார்.

விக்டர் தனது வலது காலை இலையின் மீது வைத்தார் - இலை அவரைத் தாங்கிக் கொண்டது. அதனால் தைரியமாக தனது இன்னொரு காலையும் எடுத்து அதே இலையின் மீது வைத்தார் -

இலை நீருக்குள் போகவில்லை!

ஆக இப்போது அவருக்கு யூதாவின் சக்தியைவிட அதிக சக்தி வந்திருப்பதாக அர்த்தம் செய்துகொண்டார்.

அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்னும் எண்ணத்துடன் தனது வலது கையை முன்னோக்கி நீட்டிக் காண்பிக்க இலை நகர்ந்தது -

ஆச்சர்யம்!

ஒரு சிறு தோணியைப் போல், இலை பிரயாணம் செய்தது, அவரைத் தாங்கிக் கொண்டு -

சில நிமிடங்களில் இலை, அக்கரையில் சேர்ந்தது. இறங்கிக் கொண்டார் -

இலை மட்டும் அங்கேயே இருந்தது -

தன்னுடைய புதிய சக்தியில் பெருமிதம் அடைந்த அவர் திரும்பிப் பார்த்தார் -

அங்கே ஒரு சிறிய பனைமரம்-உயரமாக வளராதது! உயரத்தில் ஏதோ சில சலனம்!

விக்டர் உற்றுப் பார்த்தார்!

மரத்தில் உச்சியில் ஓலைகளுக்கு நடுவே ஒரு பெண் அமர்ந்திருந்தாள் -

அவளது நீண்டு வளர்ந்த கூந்தல், அவளது உடலை மறைத்திருந்தது -

அவளை, விக்டர் தன் கையை காட்டி அழைத்தார்.

''என்னால் இங்கிருந்து இறங்கி வர முடியாது.''

''ஏன்?''

''உள்ளாட்டின் மனை நம்பூதிரி என்னை இங்கே அமர வைத்திருக்கிறார்.''

''அதனாலென்ன, உன் அழகு எனக்கு மிகவும் பிடித்தது.''

''எனக்கும் உங்களை பிடிக்கிறது...ஆனால் என்ன செய்யலாம்?''

''நீ உண்மையைச் சொன்னால் நான் உன்னை கீழே இறக்கி விடுகிறேன்—''

''நீங்கள் கீழே நின்று கொண்டு, கை நீட்டி இறக்கினால் எனக்கு விமோசனம் கிடைக்கும்''

விக்டருக்கு இப்போது நிலைமை புரிந்தது. பனை மரத்தின்மீது இருப்பது யட்சிதான். அவளுக்கு தண்டனை கொடுத்து தான் உள்ளாட்டில் பனைமரத்தின்மீது அமர வைத்திருக்கிறார் கீழே இருந்து கொண்டு அவளை யாராலும், கீழே இறக்க முடியாது. என்பதை நம்பூதிரி அறிவார்.

இப்போது விக்டருக்கு தான் பெற்றிருக்கும் புதிய சக்தியைப் பரிட்சை செய்து பார்த்தால் என்ன என்கிற எண்ணம் தோன்றவே.

தனது வலது கையை, மரத்தை நோக்கி நீட்டினார் மனதில் அவளைக் கீழே இறக்க வேண்டும் என்கிற ஒரே எண்ணம்!

கை நீண்டு கொண்டே போனது பனைமரத்தின் உச்சியை அடைந்தவுடன், அந்தக்கை யட்சியை மெதுவாகத் தொட்டுத் தூக்கியது. தூக்கிய அவள் மெதுவாக இறக்கப்பட்டாள் கை பழைய படி சுருங்கிக்கொண்டது.

''நீ எங்கே இருந்தாய்?''

''பால மரத்தின் கீழே ஒரு கருங்கல் திட்டு அங்கே தான் என் வாசம்'' அவரை அங்கே அழைத்துப் போல் காட்டினாள். தன் முன்னே நிற்கும் அந்த யட்சியின் அழகையும், அவள் காட்டிய இடத்தையும் பார்த்த பிறகு விக்டருக்கு வழக்கமாக உதயமாகும் காமம் தலை தூக்கியது. அவளை அழைத்து அந்தக் கல் திண்ணை மீது அமரவைத்தார்—

அவரது முகத்தையும் நடவடிக்கைகளையும் பார்த்து யட்சி, சிரித்துக் கொண்டே 'எனக்குப் புரிந்து போயிற்று' என்றாள். விக்டராக இருக்கும் யூதா, ஒரு யட்சியை ஆட்கொள்வது இதுதான் வாழ்க்கையில் முதல் தடவை!

அதேபோல் இதுவரை அவள் யாரிடமும் பெற்றிராத ஒரு இன்பத்தை அந்த யட்சி அவருக்கு தாராளமாகவே வழங்கினாள்—

ஒரு மணி நேரம் கடந்தது அப்போதுதான் விக்டருக்கு அவளது சக்தி புரிந்தது. சாதாரண மனிதன் என்றால் இந்நேரம் அவளது விளையாட்டில் இறந்தே போயிருப்பான்.

''உன்னை எதற்காக திருமேனி இப்படி கொடுமை செய்தார்?''

''இதே தான் காரணம்!'' என்றாள் அவள்.

''வடக்கே இருந்த ஒரு கோவிலில் வாசம் செய்து கொண்டிருந்த என்னை உள்ளாட்டில் மனைக்கு அழைத்து வந்தது இந்த நம்பூதிரிதான் என்னால் பல மனிதர்கள் மரணமடைந்து விட்டனர் என்று கேள்விப் பட்டேன் அதனால் தான் திருமேனி என்னை பனை மரத்தின் மீது உட்காரவைத்து விட்டார்.''

''இப்போதுதான் உனக்கு விடுதலை கிடைத்து விட்டதே...இனி என்ன செய்யப் போகிறாய்?''

''நீங்கள் தானே என்னை விடுவித்தது? அதனால் நீங்கள் இனி என்ன சொன்னலும் நான் கேட்கிறேன்'' என்றாள் யட்சி.

''நான் உள்ளாட்டில் மனை நம்பூதிரியை எதிர்க்கப் போகிறேன்...அதற்கு நீ உதவினால் போதும்''

''என்ன வேண்டுமானாலும் நான் செய்கிறேன்... ஆனால் அந்த மனைக்கு மட்டும் நீங்கள் என்னை அனுப்பக்கூடாது...காரணம் என்னை அவர் கண்டு பிடித்து விடுவார்!''

''அப்படியும் நடக்கலாம்! ஏனெனில் ஸ்ரீதரன் நம்பூதிரி ஒரு மகா மாந்திரீகன்!

ஒரு யட்சியைக் கண்டுபிடிக்கும் சக்தி அவருக்கு உண்டு...''

எது நடந்தாலும் அவளை அங்கே அனுப்பக்கூடாது என விக்டர் தீர்மானித்தார்—

இவளை வைத்தே பல காரியங்கள்ளைச் சாதித்துக் கொள்ளலாம் என விக்டர் முடிவு செய்துகொண்டார்—

அதனால் சோபியாவின் மாளிகையிலேயே இவளை யும் தங்க வைக்கலாம் என முடிவு செய்து கொண்டார்.

யாருக்கும் தெரியாது—

முன்னொரு காலத்தில் ஒரு மாந்திரீகன், தன் தாய்க்கு சேவை செய்ய ஒரு யட்சியை வைத்திருந்த கதை அவருக் குத் தெரியும்!

அவளது சரீரத்தை தடவிக்கொண்டே,

''உனக்குத் துணி வேண்டுமல்லவா?'' என்று கேட் டார்.

''ஆமாம்!'' என்று சொன்னவுடன், விக்டர் ஒரு அரளி செடியின் பெரிய கிளையை உடைத்து ஆகாயத்தில் எறிந்தார்—

அது நேராக சோபியாவின் மாளிகையை அடைந்து, அங்கே ஜன்னல் வழியாக உள்ளே போய், கொடியில் உலர்ந்துகொண்டு இருந்த வஸ்திரத்தை உருவி எடுத்துக் கொண்டு அதே வேகத்தில் திரும்பிவந்தது—

அது ஒரு நைட்டி!

இந்த சமயம் கிளாரா விழித்தாள். ஒரு மரக்கிளை ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து, கொடியிலிருந்த ஒரு ஆடையை எடுத்துக்கொண்டு அதே ஜன்னல் வழியாகவே வெளியேறுவதை பயத்துடன் பார்த்துக் கொண்டு இருந் தாள்—

புள்ளிகளுடன் இருந்த அந்த ஆடை யாருடையது என்பது! அவளுக்குத் தெரியும்.

துர்சொப்பனம்போல் அக்காட்சி அவளது மனதில் தங்கியிருந்தது! விக்டர் அந்தத் துணியை எடுத்து யட்சி யிடம் கொடுக்க, அவள் அணிந்துகொண்டாள்—

''உன் பெயர் என்ன?'' கேட்டார்.

''பாமா!''

''நான் உனக்கு இன்னொரு பெயர் தருகிறேன்... மெர்லின்...இந்த பெயரைத்தான் அந்த வீட்டில் உபயோகப்படுத்த வேண்டும்...நீ ஒரு கிருஸ்துவப் பெண் என்று அவர்கள் நினைப்பார்கள்—

அவள் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு தலையை அசைத்தாள்—

''இன்னொரு விஷயம்?''

''எனக்குப் பிடித்த ஆகாரம் அந்த வீட்டில் இருக்கிறதா?''

''என்ன?''

''இரத்தம்!''

''இரத்தமா?''விக்டர் திடுக்கிட்டுத்தான் போனார்—

''நீங்கள் ஒன்றும் இந்த விஷயத்தில் சிரமப்படத் தேவையில்லை...நான் அதற்கு வழிகண்டுபிடித்துக் கொள்கிறேன்...''

''இதனால்தான் உள்ளாட்டில் நம்பூதிரி உன்னை பனைமரத்தின் மீது அமரவைத்தார்...இல்லையா?''

''இருக்கட்டும்...அந்த வீட்டில் மனிதர்களே இல்லையா?''

''இல்லை...எல்லாம் பெண்கள்தான்!''

''பரவாயில்லை...நான் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறேன்...''

''சரி போகலாம்?'' என விக்டர் முன்னால் நடக்க, அவன் பின் தொடர்ந்தாள்.

இருவரும் நதிக்கரைக்கு வந்தபிறகு விக்டர் தான் வந்த இலைமீது ஏறி நிற்க, அவர் சுண்டுவிரலை அவள் பற்றிக்கொண்டாள்—இலை மீது அவரும் ஜலத்தின்மீது அவளும் பயணம் செய்தனர்!

பங்களாவிற்கு அவர்கள் வந்துசேர்ந்தபோது இரவு மணி இரண்டு விக்டரின் அறையில் அவள் இரவு படுத்துக் கொண்டாள்—

காலையில் அவளை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினார்!

''இது என் சிநேகிதன் ஒருவனின் மருமகள். நேற்று இரவுதான் அவள் இங்கே வந்தாள். நீங்கள் தூங்கி விட்டதால், உங்களை எழுப்பவே இல்லை...பெயர் மெர்லின்!''

''இந்தப் பெண்ணின் அப்பா எங்கே?'' சோபியா கேட்டாள்.

''அது ஒரு கதை...அதை பிறகு சாவகாசமாகச் சொல்லுகிறேன்''

இந்த சமயம் கிளாரா அங்கே வந்தாள்! அவனும், மெர்லினும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

# 14

கிளாராவைக்கண்டவுடன் யட்சியாகிய மெர்லினின் முகத்தில் பிரத்தியேக பாவம் தெரிந்தது. அந்தப் பாவம் ஒரு பயத்தின் லட்சணம்!

கிளாராவின் முகத்தில் அவள் விசேஷமாக எதையோ கண்டாள்... ஆனால் அது என்னவென்று அவளுக்குப் புரியவில்லை!

இதே நிலைதான் கிளாராவிற்கும்!

''வா...காப்பி குடிக்கலாம்!'' என்று சோபியா மெர்லினை அழைத்தாள்.

''நான் இன்னும் குளிக்கவில்லை... குளித்தப்பின் சாப்பிடுகிறேன்'' என்று மெர்லின் பின் வாங்கினாள்

''சரி...வா...குளிக்கும் அறையைக் காண்பிக்கிறேன்' என்று ஸௌரா அவளை அழைத்தாள்...

மெர்லினினால், அவள் உத்தரவுக்குக் கீழ்படியாமல் இருக்க முடியவில்லை.

குளியல் அறைக்குள் புகுந்தவுடன், அவள் கதவை நன்றாக மூடித் தாளிட்டாள்.

பனைமரத்தில் அவளை, உள்ளாட்டில் நம்பூதிரி குடிவைத்தபிறகு, அவள் குளிக்கவே இல்லை! நன்றாகக் குளித்துவிட்டு வந்தபோது. எல்லோரும் வீட்டில் போடும் ஒற்றை உடுப்பை சோபியா அவளுக்கும் கொடுத்தாள்!

சோபியா, சாப்பாட்டு மேஜையின் மீது ஆப்பமும் முட்டைக் குழம்போடு, டீயும் வைத்தாள்.

''நீ இதைச் சாப்பிடு!'' என்று சொல்லிவிட்டு சமய லறைக்குப் போய் விட்டாள்.

அந்த நேரத்தில் விக்டர் அங்கே வந்தார்.

அவருக்கு அப்போதைய நிலை புரிந்தது,

''இதையெல்லாம் எடுத்து ஜன்னல்வழியாக வெளியே எறிந்துவிடு... அங்கேகாகங்கள் இருக்கின்றன...இவற்றை எல்லாம் சாப்பிட்டு விடும்!'' என்று யோசனை சொன்னார் விக்டர். மெர்லின் சுற்று முற்றும் பார்த்துவிட்டு யாரும் இல்லை என உறுதிபடுத்திக் கொண்டு, எல்லாவற்றையும் ஜன்னல் வழியாக வெளியே போட்டாள்.

'டீ'யை வாஷ் பேசினில் கொட்டினாள்.

பக்கத்து அறையைப் பெருக்கிக் கொண்டிருந்த கிளாரா இதைப் பார்த்து விட்டாள்...

''ஏன் அதையெல்லாம் வீணாக்கினாய்!''

கிளாரா கேட்டாள்

''நான் சாப்பிட்டது போக மீதம்தான் இது!'' என்று கூசாமல் பொய் சொன்னாள்...

''நான் பார்த்தேன்''

இவள் இதை சோபியாவிடம் சொல்லிவிடுவாளா என்னும் சந்தேகம் மெர்லினுக்கு வந்தது. உடனே அவள் விக்டரின் அறைக்குப்போய் நடந்தவற்றைச் சொன்னாள்.

''அவள் மிகவும் தொந்தரவு பிடித்தவள்'' என்றார் விக்டர்...

''அவள் யார்?'' மெர்லின் கேட்டாள்.

''நீண்ட நாட்களாக அவள் இந்த வீட்டில்தான் இருக்கிறாள்... நீ நினைத்தால், அவளை இல்லாமல் செய்து விட முடியும்!'' என்றார் விக்டர்.

''என்னை அவள் சந்தேகத்தோடுதான் பார்த்தாள்! அவளை இல்லாமல் செய்ய நான் முயற்சிக்கிறேன்'' என்றாள் மெர்லின்.

''ஒரு முக்கியமான விஷயத்தை முதலில் நீ தெரிந்து கொள்ள வேண்டும்! அவளிடம் ஏதோ அபூர்வ சக்தி இருக்கிறது... அந்த சக்தி அவளுக்கு எதன் மூலம் கிடைக்கிறது என்று கண்டுபிடித்தால் அவளை அழிப்பது மிகவும் சுலபம்... அதையும் நீதான் கண்டு பிடிக்கவேண்டும்''

''அது ஒன்றும் கடினமான காரியம் அல்ல! அவள் குளிக்கும் போதும், தூங்கும் போதும் அவளை நான் கவனிக்கிறேன்''

''போதும்!'' என்று விக்டர் சொல்லி முடித்த போது சோபியா அங்கே வந்தாள்.

சோபியாவைப் பார்த்தவுடன் மெர்லின் திடுக்கிட்டாள் கிளாரா எதையாவது சொல்லியிருப்பாளோ?

ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை!

''மெர்லின், நீ ஷைனியுடன் கோவிலகத்திற்குச் சென்று வா! அருகில் இருப்பவர்களை நீ தெரிந்து கொள்ள வேண்டாமா?'' என்று சொல்லிய சோபியா விக்டரைப் பார்க்க,

''அதுவும் நல்ல காரியந்தான்!'' என்றார் அவர்

மெர்லினை சோபியா உடைமாற்றும் அறைக்கு அழைத்துப் போய், நீ எந்த ஆடையை வேண்டுமானாலும் எடுத்து உடுத்திக் கொள்'' என்றார்—

எல்லாவற்றையும் நோட்டம் விட்ட மெர்லின் கடைசியில் இடுப்பில் முண்டுவும், மேலே ஒரு துண்டும் அணிந்து கொண்டாள்.

''மெர்லின், ஏன் நீ இந்துக்கள் போல் உடையை அணிந்து கொண்டாய்?'' என்று கேட்டாள் சோபியா

''அது ஒரு பெரிய கதை... என் தாயார் ஒரு இந்துப் பெண்'' என்றாள் மெர்லின் சோகம் நிறைந்த குரலில்...

''அதற்காக நீ வருந்தத் தேவையே இல்லை... இப்போது உன் அம்மா எங்கே இருக்கிறாள்?''

''இப்போது எனக்கு யாருமே இல்லை... நான் மட்டுந்தான்! அம்மா எனக்கு வைத்த பெயர் வசுமதி... அப்பா வைத்த பெயர்தான் மெர்லின்''

''உனக்கு எந்த பெயர் பிடிக்கும்?''

''நான் இங்கே இருப்பதால், என்னை மெர்லின் என்று அழைத்தாலே போதும்! இல்லாவிடில் எல்லோரிடமும் நான் இந்தக் கதையைச் சொல்ல வேண்டியிருக்கும்'.

''யாரிடமும் சொல்லவேண்டாம்!'' என்று சோபியா அவளை சமாதானப் படுத்தினாள்.

அந்த ஆடையில் அவள் அழகாவே இருந்தாள்.

தரையைத் தொடும் அளவிற்கு அவளது தலை முடியைக் கண்ட சோபியா வியந்து போனாள்.

அத்துடன் அழகும் சேர்ந்து கொண்டது.

ஷைனியும், மெர்லினும் கோவிலகத்திற்குச் சென்ற போது அங்கே சச்சிதானந்த வர்மாவும், சுபத்தராவும் மட்டுமே இருந்தனர் மெர்லினை அவர்களுக்கு அறிமுகப் படுத்தினாள்... சொந்தக் காரி என்றாள்...

மாமா, அந்தப் பெண்ணின் அங்கலவயங்களைப் பார்த்து அப்படியே சொக்கிப் போனார்.

டீ கொண்டுவர சுபத்ரா புறப்பட,

''வேண்டாம்... இப்போதுதான் சாப்பிட்டுவிட்டு வந்தேன்'' என்று கண்டிப்பாக அவள் மறுத்து விட்டாள்.

''முதல் தடவையாக இங்கேவந்து இருக்கிறீர்கள் வேண்டாம் என்று சொல்லக்கூடாது''

''வேண்டாம்!'' என்றாள் மெர்லின் கண்டிப்பாக. சற்று நேரத்தில் உதயன், அவனுடைய சிநேகிதன் ஒருவனை அங்கே அழைத்து வந்தான்.

''இவர் உன்னிகிருஷ்ணன்''

அந்த நபர் பார்வைக்கு அழகனாகவும், மிகவும் ஆரோக்கியமாகவும் தெரிந்தான்.

''இதுயார் ஷைனி?'' உதயன் கேட்க.

''மெர்லின்...எங்களுக்குச் சொந்தம்... இனி எங்களுடன்தான் இருப்பாள்...''

இந்த சமயம் மெர்லின் உன்னி கிருஷ்ணனையே மிகவும் தீவிரமாக கவனித்துக்கொண்டு இருந்தாள்.

அவனுடைய அழகான சரீரம். அவளை யோசிக்க வைத்தது.

அவளுக்குத் தேவையான அவ்வளவும் அவனிடம் இருந்ததை ஒரு நொடியில் கண்டு கொண்டாள் மெர்லின்

அவள் பார்த்த அந்த அமானுஷ்ய பார்வையினால் அவனும் வீழ்ந்தான்.

ஷைனியும், சுபத்திரையும்,உதயனும் உள்ளேபோன போது மெர்லினும் உன்னிகிருஷ்ணனும் தனித்து விடப்பட்டனர்.

''நீங்கள் எங்கே குடியிருக்கிறீர்கள்?''

''இங்கே மிக அருகில்...''

''மனைவியும் குழந்தைகளும் உண்டா?''

''என்னைப் பார்த்தால் வயதானவன் மாதிரியா தெரிகிறது''

''கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டேன்''

''இதுவரை எனக்குத் திருமணமாகவில்லை''

''ஏன்? ஏதாவது சபதமா?''

''அப்படி ஒன்றும் இல்லை...என் சௌகர்யத்திற்குப் பெண் கிடைத்தால் யோசிக்கலாம்''

''எப்படிப்பட்ட பெண் தேவை உங்களுக்கு?''

இதைக்கேட்ட உன்னி கிருஷ்ணன், மெர்லினை மேலிருந்து கீழ்வரை உற்றுப் பார்த்தான்—

அவள் நல்ல அழகி என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை—

''நான் அதிகம் படிக்கவில்லை...கொஞ்சம் படித்துக் கொண்டால் நன்றாக இருக்கும்'' என்றாள் மெர்லின்...

''என்ன படிக்க வேண்டும்?''

'நீ எந்தத் துறையில் படித்து பட்டம் பெற்றீர்கள்?'

''மலையாளம்''

''எனக்குக் கவிதைகள் மிகவும் பிடிக்கும்''

''அப்படியென்றால் வாருங்கள் சொல்லித்தரு கிறேன்... நாளை காலேஜ் விடுமுறை நான் வீட்டில் தான் இருப்பேன்—''

''அப்படியென்றால் நான் வருகிறேன்'' என்றாள் மெர்லின்—

''வீடு எங்கே என்று தெரிய வேண்டாமா?''

''அதை நான் கண்டு பிடித்துக் கொள்வேன்''

கோவிலகத்திற்குப் போய் வந்தபிறகு மெர்லின் உன்னி கிருஷ்ணனை பற்றியே சிந்தித்துக் கொண்டு இருந்தாள்—

அவனைப் பார்க்கவேண்டும்...தன் பசியைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்கிற எண்ணமே அவள் மனம் பூராவும் வியாபித்து இருந்தது—

அடுத்த நாள் பிற்பகல், எல்லோரும் தூங்கிக் கொண்டு இருந்த நேரத்தில், மெர்லின், உன்னி கிருஷ்ணனின் வீட்டை அடைந்தாள்.

அங்கே அவன் தனியாக இருந்தான்!

''மெர்லின் வந்தாயிற்றா? இப்போதுதான் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்...''

''அதனால்தான் நான் இங்கே வந்தேன்...

என்றவாறு அவன் கட்டிலில் மெர்லின் அமர்ந்தாள்-

''என்ன படிக்கணும்?''

அவள் சிரித்தாள்... அவளது பார்வை அவனது மார்பின் மீது இருந்தது—

அவளது மேல் துண்டு அதே சமயம் கீழே விழுந் தது.

# 15

அவளது மார்பகங்கள், அவன் கண்களில் பட்ட போது உன்னிகிருஷ்ணனின் உடல் சூடாகியது. தன்னைக் கட்டுப் படுத்த முடியாத நிலையில் அவனை மெதுவாகக் கட்டிலில் அமர்ந்து, அவளது மடியில் கை வைத்தான்.

அவனது கை மெதுவாக மேலெழுந்தபோது, அவள் அதை தட்டி விட்டு விட்டாள்—

ஆனால் அந்த நேரத்தில் உன்னி மோகக்கினியில் தவித்துக் கொண்டு இருந்தான்—

''என்னைப் பார்த்தா உங்களுக்கு என்ன தோன்று கிறது?''

''தேவ சுந்தரியைப் போல!'' என்றான்.

''ஏன் அசுர சுந்தரி மாதிரி தோன்றவில்லை?'' என்று கேட்டுக் கொண்டு அவள் அவன் தோள் மீது கையை வைத்தாள்—

அவள் கையை உயர்த்தியபோது, சுகந்த மணம் அங்கே வீசியது—

அவளது இடது கை,யால்ரவிக்கையின் கொக்கிகளை அவிழ்த்தாள்.

திடீரென அவள் உன்னிகிருஷ்ணனை படுக்கையில் வீழ்த்தி அணைத்தாள்.

ஆடையற்ற அவளது நிர்வாண மேனி, அவன் மீது பரவியது, அழுந்தியது—

இதனால் சில நிமிடங்களில் அவன் மயங்கிப் போனான்—

எந்த நிலையில் இருக்கிறோம் என்றே அவனால் இப்போது சொல்ல முடியாது.

இதுவரை அனுபவித்து இராத ஒரு மன்மதசுகம் அவன் தலையிலிருந்து கால்வரை பரவியது. அதன்பிறகு அவனுக்கு உலக ஞாபகமே இல்லை.

மெதுவாக இருள் பரவ ஆரம்பித்தது -

மெர்லின் தனது ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

மாளிகைக்கு வந்தவுடன், அவள் முன்பக்க வழியாக உள்ளே நுழையாமல், மெதுவாகப் பின் வாசல் வழியாக உள்ளே நுழைய முற்பட்டபோது, அவள் எதிரில் கிளாரா நின்றாள்!

அவளை பயப்படுத்த நினைத்த மெர்லின், அவளை பயங்கரமாகப் பார்த்தாள் -

கிளாரா எதற்கும் அசையாமல் அங்கேயே நின்று கொண்டு, தன் கண்களை, அவளது கண்களில் பதித்தாள் - பிறகு சாதாரண குரலில் ''உதட்டில் இரத்தம்

ஒட்டிக் கொண்டு இருக்கிறது...அதைத் துடைத்துவிடு!' என்றாள் கிளாரா.

இதைக் கேட்டவுடன் பயந்தவாறு மெர்லின் அங்கே இருந்து போய் விட்டாள்.

அவள் வருவதைப் பார்த்த விக்டர்,

''நீ எங்கே போயிருந்தாய்?''

''நான் கோவிலகத்திற்குப் போயிருந்தேன்'' என்று அலட்சியமாகச் சொன்னாள் அவள்.

அவள் உள்ளே போய் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள்!

தன் முகத்தை மேல் துண்டால் நன்றாகத் துடைத்த போது அதில் இரத்தக் கறை இருந்தது. இதை யாரும் பார்த்துவிடக் கூடாதே என நினைத்த அவள். குளிக்கும் அறைக்குள் சென்று அந்தத் துண்டை தண்ணீரில் நனைத்து சுத்தப் படுத்தினாள் -

இருந்தாலும்,

கிளாரா அவளைப் பார்த்து விட்டதில் அவளுக்கு மனதில் பயம் ஏற்பட்டு இருந்தது -

தான் மனித ரூபம் எடுத்திருப்பதை உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரி அறிந்தால், அதற்குப் பிறகு ஏற்படும் விளைவுகள் என்னவென்பதை, அவளால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை!

தன்னை பனை மரத்தில் கட்டிப் போடுவதற்கு முன் இன்னொரு தடவை, அவளை அவர், கட்டுப்பட்டு வைத்திருந்ததும், அவள் ஞாபகத்திற்கு வந்தது -

இங்கே அவள் மனித ரூபத்தில் அவளை, அவர் பார்த்தால், தண்டனை மிகவும் கொடியதாக இருக்கும் என்று அவள் அஞ்சினாள் -

''உன்னை யாராவது பார்த்தார்களா?'' விக்டர் -

''நான் போனதும், திரும்பியதும் யாருக்கும் தெரியாது...ஆனால் இங்கே அந்தப் பெண் என்னைப் பார்த்து விட்டாள்.''

''அப்படியா? அந்தப் பெண்ணா பார்த்தாள்? அவள் மோசமானவள் ஆயிற்றே''

''இருந்தாலும் முன்பை விட எனக்கு இப்போது அதிக சக்தி இருக்கிறது...நான் பார்த்துக் கொள்கிறேன்''

விக்டர் அவள் அருகே வந்து நின்றார் அதே சமயம் எதிரில் கண்ணாடியில் தெரிந்த விக்டரின் பைசாச உருவத்தைப் பார்த்த மெர்லின் திடுக்கிட்டாள் ஒரு யட்சியே பயப்படும் அளவு இருந்தது விக்டரின் உருவம்!

''உங்களுக்கும் இன்னொரு ரூபம் இருக்கிறதா?''

''என்னுடைய உண்மையான உருவம் அதுதான்! இந்த ரூபம். இந்த வீட்டின் சொந்தக்காரனின் ரூபம்'

''அந்த நபரை நீங்கள் இல்லாமல் செய்து விட்டீர்களா?''

''அப்படிச் செய்யாமல் முடியாதே''

''அந்தப் பெண்ணை இங்கே நீண்ட நாள் தங்க விட்டால் ஆபத்து'' என்றாள் மெர்லின்—

''எனக்கும் அது தெரியும்! ஆனால் திடீரென ஏதும் செய்ய முடியாதே...அவளுக்கு இந்த வீட்டில் அதிக செல்வாக்கு இருக்கிறது.''

''இருந்தாலும், அவள் தொந்தரவு கொடுக்கக் கூடியவளே''என்றாள் மெர்லின்.

இருவருக்கும் தலைவலி கொடுக்கக் கூடியவள் அவள் என்பதை விக்டர் ஒப்புக்கொண்டார்.

இரவு சாப்பிட்டிற்கு மெர்லின் வரவே இல்லை. சோபியா போய் பார்த்த போது அவள் கட்டிலில் கவிழ்ந்து படுத்து இருந்தாள்—

''சாப்பிட வர வில்லையா?''

''இல்லை, எனக்கு வயிறு நன்றாக இல்லை'' சோபியா திரும்பி வந்த பிறகு.

''அந்த அக்கா சாப்பிட வரவில்லையா?'' என்று கிளாரா கேட்க.

''இல்லை அவளுக்கு வயிறு சரியாக இல்லையாம்! டாக்டரிடம் அழைத்துச் சென்று மருந்து வாங்கித் தர வேண்டும்'' என்றாள் சோபியா அவளது பசி அடங்கி யிருக்கும் விபரம் விக்டருக்குத் தெரியும்!

அடுத்த நாள் காலை உன்னி கிருஷ்ணனைத் தேடிக் கொண்டு பக்கத்து 'டீ' கடை பையன் வந்தான், தேவை களைக் கேட்டுப் போக? கதவின் கை வைத்த போது அது திறந்து கொண்டது.

இரண்டு, மூன்று தடவை குரல் கொடுத்த பிறகும் வாத்தியார் வெளியே வராததால், பையன் படுக்கை அறைக் கதவையும் திறந்து பார்த்தான். உள்ளே அவன் பார்த்த கோரக் காட்சியைப் பார்த்து பயந்து அலறிக் கொண்டு மீண்டும் 'டீ' கடைக்கே ஓடினான், கடையை அடைந்த பின்னும் நடுங்கிக் கொண்டே இருந்தான்—

''ஏனப்பா இப்படி நடுங்குகிறாய்?'' டீ குடித்துக் கொண்டிருந்த பரமுநாயர் கேட்டார்

''அங்கே அந்த வாத்தியார் சார், பிறந்த மேனியாகப் படுத்துக் கிடக்கிறார்''

''அதற்கு நீ ஏன் பயப்படுகிறாய்?''

''அவர் கிடந்ததைப் பார்த்தால் உயிர் இல்லாத மாதிரிதான் தெரிகிறது''

"அப்படியா? உடனே அவரைப் போய் பார்த்தே ஆகவேண்டும்" என நான்கைந்து பேர் அங்கே போய் பார்த்த போது உன்னி கிருஷ்ணன் பிணமாகக்கிடந்தான்

ஒரு நபர், தரையில்கிடந்தவேட்டியை எடுத்துஉடலை மறைத்தார்.

இரண்டு பேர் உதயனிடம் தகவல் தெரிவிக்க கோவில கத்திற்குப் போனார்கள்—

உன்னி கிருஷ்ணன் இறந்த விபரத்தை உதயனால் நம்ப முடியவில்லை.

அவனும், மாமாவும் உன்னி கிருஷ்ணனின் வீட்டிற்கு புறப்பட்டுப் போனார்கள்.

வெகு விரைவில் அந்த ஊர் பூராவுக்கும் வாத்தியார் இறந்துவிட்ட செய்தி பரவியது.

அது ஒரு கொலை என்று சொல்ல எந்த விதமான சாட்சியமும் இல்லை.

இருந்தாலும் விபரம் போலீசுக்குப் போனது. பிணத்தை எடுத்துப்போய் 'போஸ்ட் மார்டம்' செய்ய டாக்டர், போலீஸ் அதிகாரிகள் வந்தனர்—

உடலை அறுத்தபோது, அதில் இரத்தமே இல்லை— அவன் இறந்து கிடந்த இடத்திலும், ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தி இருக்கவில்லை—பின் உடலின் இரத்தம் எங்கே போயிற்று?

"ஏதாவது 'யட்சி' இந்த இரத்தத்தைக் குடித்து இருக்குமா?" என்று பரமு அப்பாவித்தனமாகக் கேட்டார்.

இந்த செய்தி உள்ளாட்டில் நம்பூதிரியின் காதிலும் விழுந்தது.

ஒரு ஆணின் உடம்பிலிருந்து. இரத்தத்தைக் குடிக்கும் யட்சிகளைப்பற்றி, அவருக்குத் தெரிந்த அளவுக்கு, வேறு யாருக்குமே தெரியாது!

அன்று நடுஇரவில் உள்னாட்டில், மெதுவாக கோவிகைத்திற்கு வந்தார்—

''உன்னிகிருஷ்ணனின் மரணத்தைப்பற்றி, உதயா நீ என்ன நினைக்கிறாய்?''

''இவனைப்போல் ஆரோக்கியமான ஒரு நபர் இந்த கிராமத்தில் இல்லவே இல்லை.''

''அது இருக்கட்டும்...பரிசோதனையின் போது அவனது உடம்பில் ஒரு சொட்டு இரத்தம் கூட இல்லை என்று சொன்னார்களே...இரத்தம் கட்டியாகி இருந்தால், அதுவும் டாக்டருக்குத் தெரியுமே''

''ஆமாம்!''

''இறப்பதற்கு முன்பு அவன் ஒரு பெண்ணுடன் உறவு வைத்துக்கொண்டு இருந்திருக்கிறான் என்றும் சொல்லப்படுகிறதே''

''இப்போதுதான், அதைப்பற்றிய செய்தியை நான் முதன்முதலாக அறிகிறேன்—'' என்றான் உதயன் வேதனையான குரலில் உன்னிகிருஷ்ணன் இப்படிப்பட்டவன் என்றே அவனுக்குத் தெரியாதே!

திருமேனி ஆலோசனையிலிருந்தார்—

''நாம் அதுவரைக்கும் சென்று பார்த்துவிட்டு வர வேண்டுமே', என்றார்—

உதயன் புரியாமல் பார்த்தான்.

''உதயன் நாம் ஓர் இடத்திற்குப்போக வேண்டும்... அவள் அங்கே இல்லையென்றால், அவள்தான் இந்த வேலையைச் செய்து இருக்கவேண்டும்!''

''எங்கே போகவேண்டும்?''

''மலை அடிவாரத்திற்கு!''

''இந்த இரவிலா?''

''ஆமாம்! இப்போது போனால்தான் பயன் உண்டு''

''நீங்கள் சொல்லி நான் வராமல் இருப்பேனா? இங்கே மாமாவும், ஊரில் இல்லை...சுபத்ரா வீட்டில் தனியாக இருக்கவேண்டுமே!'' என்றான் உதயன்—

''அப்படியா? அதற்கு ஒரு வழி செய்யலாம்!'' என்று சொல்லிவிட்டு, தன் கையிலிருந்த தடியை முன் வாயில் முன் குத்தி நிறுத்தினார்—

''இது இங்கேயே இருக்கட்டும்...இதைத்தாண்டி யாரும் உள்ளே போகமுடியாது''

பிறகு இருவரும் புறப்பட்டார்கள்— வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இக்கரையில் அவர்கள் இருவரும் நின்றனர்—

''அதோ தெரிகிறதே, அந்த பனைமரத்தருகே போக வேண்டும்'' என்றார் நம்பூதிரி—

அதைத் தொடர்ந்து அவர் உதயனின் கையைப் பற்றிக்கொண்டு .அவர் நதியில் இறங்கினார்—

அக்கரையில் ''ஹா!...ஹா!''என்று யாரோ பலமாகச் சிரிக்கும் சப்தம் கேட்டது.

# 16

''யாரோ சிரிக்கிறார்களே!'' உதயன் பயத்தோடு சொன்னான்—

''அதைத் தெரிந்து கொள்ளத்தான் நான் வந்தேன்'' என்றான் திருமேனி--

திருமேனி ஆற்றில் இறங்கி நீர்மேல் நடக்க ஆரம்பித்தார்.

அவரது வலதுகை உதயனைப் பற்றியிருந்தது.

தண்ணீர் 'ஜில்'லென்று இருந்தாலும், அதன்மேல் தானும் உள்ளே போகாமல் நடப்பது, உதயனுக்கு விந்தையாக இருந்தது—

இருவரும் நடந்தார்கள்—ஆற்றை, நடந்தே கடந்தார்கள்—

இருவரும் அடுத்த கரையை அடைந்தார்கள்—

நிலா வெளிச்சத்தில், மேற்கு திசையில் திருமேனி நடந்தார்—

பனைமரத்தின் அருகே வந்து, அதன்மேலே பார்த்தார்—

அவரது மனதில் சந்தேகம் உதித்தது.

தனது கையில் இருந்த சிறிய சூலத்தை, மந்திர உச்சாடனம் செய்து மேலே தூக்கி எறிந்தார்—

சுமார் இருபது அடி மேலே சென்ற அந்த சூலம் பத்திரமாக கீழே இறங்கியது—

சிரிப்பு சப்தம் நின்றுவிட்டது.

சூலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, திருமேனி, உதயனை அழைத்துக் கொண்டு மீண்டும் ஆற்றைக் கடந்து, இக்கரைக்கு வந்தார்—

''இதற்கு என்ன அர்த்தம் திருமேனி?'' உதயன் கேட்டான்.

"இரு சொல்கிறேன்...இதே பனைமரத்தில் புருஷ தாகம் கொண்ட ஒரு யட்சியை நான்தான் இங்கே சிறை வைத்தேன்—

உன்னி கிருஷ்ணன் இறந்ததால் என் மனதில் சந்தேகம் எழ இங்கு வந்து பார்த்தேன். அவள் இங்கு இல்லை... ஆனால் அவள் இருக்கவே கூடாது என்றுதான் சூலத்தை ஆகாயத்தில் எறிந்தேன்—" என்றார் திருமேனி—

ஆனால் விஷயம் வேறுமாதிரி ஆகியிருந்தது—

உன்னிகிருஷ்ணனின் மரணம் பரவலாகப் பேசப் படுவதும், இந்த விஷயமாக உதயன் மிகுந்த அக்கறை யுடன் செயல்படுவான் என்பதும் விக்டர் அறியாத விஷயங்கள் அல்ல!

உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரி நிச்சயமாக மனதில் சந்தேகத்தோடு பனைமரத்தினை அடைந்து சோதிப்பார் என்பதையும் விக்டர் அறிவார்-அதனால் ஒரு பிசாசை உண்டாக்கி அங்கே மரத்தின் மீது அமரவைத்தார்—

அது சிரித்த சப்தத்தைத்தான் இவர்கள் இருவரும் கேட்டது.

திருமேனி சூலத்தை எறிந்து கொன்றதும் விக்டர் உண்டாக்கிய பிசாசுதான்!

"உன்னிக்கிருஷ்ணன் இறந்தது எப்படி?

"இனி அதைப்பற்றித்தான் சிந்திக்க வேண்டும்!" என்றார் திருமேனி—

"இப்போது நீங்கள் கொன்ற பைசாசும் அங்கேதான் இருக்குமா இல்லை மீண்டும் உயிர் பெற்று வருமா?" உதயன் கேட்டான்.

"அதற்கு வழி இல்லை...இருந்தாலும் எல்லாவற்றிற் கும் ஒரு விமோசனம் இருக்கும்" என்றார் திருமேனி—

உள்ளாட்டில் வீட்டிலேயே அன்று இரவைக் கழித்த உதயன் மறுநாள் காலையில்தான் தன் வீட்டிற்குத் திரும்பினாள்—

இரண்டுமூன்றுதினங்களில்உன்னிக்கிருஷ்ணனைபற்றி பேசுவதை எல்லோரும் நிறுத்திக்கொண்டார்கள். ஆனால் உதயனின் மனம் மட்டும் அதை மறக்கவில்லை—

யாரை இந்த விஷயத்தில் சந்தேகப்படுவது?

மெர்லின், சாப்பாட்டு நேரத்தில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டு சாப்பிடாமல் இருப்பதை கிளாரா கவனித்தாள். ஒரு நாள் மதியம் மெர்லின் சாப்பாட்டு நேரத்தில் ஏமாற்ற முடியவில்லை. ஏனெனில் சோபியா அவளைத் தன் பக்கத்தில் இழுத்து அமர்த்திக் கொண்டாள் எதிரே அமர்ந்த விக்டரை அவள் பார்த்தாள்.

''ஏதாவது செய்யலாம்! என்று தன்முகப்பாவனையின் மூலம் உணர்த்தினார் விக்டர்.

விக்டர் ஒரு சிறு கோழிகறியை எடுத்து வாயருகே கொண்டு போனார்— ஆனால் அது வாயின் அருகே சென்றதும் மறைந்து விட்டது.

மெர்லின் பார்த்தாள்—

இதை விட பெரிய அற்புதங்கள் அவருக்குத் தெரியும்.

விக்டர் செய்ததைப் போல் அவளும் சாதத்தை உருண்டைகளாக்கி வாயருகே கொண்டுபோய் மறைய வைத்தாள்—

ஆனால் இது கிளாராவின் கண்களுக்குத் தப்பவில்லை வியப்புடன் அவள் இதைக் கவனித்துக் கொண்டு இருந்தாள்—

மற்றவர்கள் யாருக்கும்இந்த விஷயம்ஏதும் தெரியவே இல்லை.

அன்று மாலை சோபியாவின் சொந்தக்காரப் பையன் பாபின் என்பவனும் அவன் மனைவி பீனாவும் அங்கே வந்தார்கள்—

இரண்டு வாரங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்ட அவர்கள் இப்போதுதான் முதல் தடவையாக அங்கே வருகிறார்கள்—

பாபின் டெல்லியில் வேலை பார்த்தான். அவன் ஒரு விளையாட்டு வீரன் மிகவும் ஆரோக்கியமானவன்! அவர்கள் இருவரும் வந்தபிறகு மாளிகையில் இப்போது தான் சிரிப்புச் சப்தம் கேட்கத் தொடங்கியது

இப்போதுதான் அவர்கள் விக்டரையும்மெர்லினையும் முதல் தடவையாகப் பார்த்தார்கள்!பாபின் தன்உடம்பில் எண்ணையைத் தடவிகொண்டு, இடுப்பில்சிறியதுண்டை கட்டிக் கொண்டு தேகப் பயிற்சி செய்து கொண்டு இருந்தான்—

மெர்லின் பார்வை அவன் மீது விழ,

அவனது ஆரோக்கியமான உடல், அவளை மிகவும் நன்றாகக் கவர்ந்தது—

ஜன்னல் வழியாக அவனையே பார்த்துக் கொண்டு இருந்த அவளுக்கு, நாக்கில் எச்சில் ஊறியது! இதே சமயம் விக்டர், பீனாவின் மீது தன் பார்வையைச் செலுத்திக் கொண்டு இருந்தார்—

சுந்தரிகளாகிய பெண்களைப் பார்த்தவுடன் யூதாவின் சுபாவம், விக்டரின் உள் தலை தூக்கிவிடும்!

வழக்கம்போல்அவரது கண்கள் பீனாவின் உடலை ஊடுருவி அவளை நிர்வாண கோலத்தில் தரிசித்தது-

பாபின், தன் எல்லா காரியங்களிலும் மிகவும் கண்டிப்பாக இருந்த நபர்!

ஆனால் பீனாவிற்கு எப்போதும் தன் கணவன் தன் மடியில் கிடந்து இன்பம் நல்க வேண்டும் என்கிற ஆசை கொண்டவள்!

தன்னையே கவனித்துக் கொண்டு இருந்த விக்டரை பீனாவும் கவனித்தாள்!

அன்று இரவு சாப்பாடு மிகவும் விசேஷமாக இருந்தது. விக்டர் குடிக்க மதுவகைகளையும் வாங்கி வைத்திருந்தார்.

அன்று இரவு எப்படியும் தான் விக்டருடன் படுக்கை அறைக்குப் போக வேண்டும் என்று சோபியாவுக்கும் ஆசை வந்தது—

குழந்தைகள் தவிர மற்ற எல்லோரும் இப்போது மதுவின் வசம் இருந்தனர்—

மெர்லின் கையில் கண்ணாடி டம்ளரை எடுப்பதை கிளாரா பார்த்துக் கொண்டே இருக்க, அதைமெர்லின் வாயருகே கொண்டு போக, பானம் டம்ளரில் இருந்து மறைவதையும், அதே பானம், விக்டரின் டம்ளருக்குள் நிறைவதும் தெரிந்தது!

மெர்லினின் சாப்பாடும் விக்டரின் வயிற்றிற்குள் தான் போகிறது என்று கிளாரா யூகித்தாள்...

சாப்பிட்டு முடிந்ததும், எல்லோரும் மயக்க நிலையை எய்திருந்தனர்.

பாபினும்,பீனாவும் மாடியில் படுத்து இருந்தார்கள்!

பாபின் உடனே தூங்கிவிட்டான்... ஆனால் பீனாவுக்குத் தூக்கம் வரவில்லை.

அவளுக்கு இப்போது கண்டிப்பாக ஒரு ஆண் துணை வேண்டும்—

அப்போது யாரோ கதவை மெதுவாகத் தட்டுவது போலத் தெரிந்தது—

இதையே எதிர்பார்த்துக் கொண்டு இருந்தவள் போல, பீனா எழுந்து கதவைத் திறந்தாள்—

விக்டர் வாயிலில் நின்று கொண்டிருந்தவர், பீனா கதவைத் திறந்தவுடன், அவளை வாரி அணைத்து தன் அறைக்குக் கொண்டு போனார்—

இரவு மணி பன்னிரெண்டு திடீரென பாபின் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான்—

அவன் சரீரத்தில் ஏதோ பாரமாக விழுந்திருந்தது போல் அவனுக்குத் தோன்றியது—

அதை உலுக்கி விடப் பார்த்தான்...

''நான்தான்!'' ஒரு பெண்குரல்

''பீனா... என்ன இது?'' என்று அவளைத் தட்டி விட்டான்—

''நான் பீனா அல்ல! மெர்லின்'' என்றாள் அவள்—நின்றவாறு சிரித்தாள் அவள்...

''என்ன இது?''

இதற்கு பதில் சொல்லாமல், அவள் அவனருகே வந்து அவனைப் பிடித்தாள்—

அவள் பிடியிலிருந்து விலகிக் கொள்ள அவனால் முடியவில்லை—

அவனை அமுக்கிப் பிடித்தபோது, அவனுக்கு எலும்புகள் நொறுங்குவது போல இருந்தது...

அவள் மெதுவாக அவன் கன்னத்தின் அருகே தனது வாயைக் கொண்டு வந்தாள்—

அப்போதுதான், பாபின் அவளது கடைவாயின் பக்கம் நீண்டு வளைந்திருந்த இரு பற்களைப் பார்த்தான்! அவன் கழுத்தில் அப்பற்கள் ஆழமாக இறங்கின—

சரீரத்திற்குள்ளிருந்து ஏதோ வெளியேறுவது போல் அவனுக்குத் தோன்றியது. இவ்வளவு தெரிந்தும், அவனால் பேசாமல் படுத்திருப்பதைத் தவிர வேறு ஏதும் செய்ய முடியவில்லை!

நிமிடங்கள் கடந்தன—

அப்போது கதவை திறக்கும் சப்தம் கேட்க மெர்லின் உடனே கட்டிலின் அடியில் மறைந்து கொண்டாள்!

# 17

அறைக்குள் வந்த பீனா! தான் வெளியே போய் விட்டு வந்தது தன் கணவனுக்கு தெரியக் கூடாது என, பீனா மெதுவாக அடி எடுத்து உள்ளே வந்தாள்.

பாபின் விழித்துக் கொள்ளாததினால், மிகவும் சமாதானமடைந்த அவள் கட்டிலில் ஏறி படுத்துக்கொண்டாள்.

மெர்லின் மொதுவாக வெளியே வந்தாள்—

அங்கே விக்டர் நின்றதைப் பார்த்தாள்.

''எங்கே போயிருந்தாய்?'' விக்டர் அவளிடம் கேட்டார்.

''பாபின் அறைக்கு''

''அவருக்கு ஏதாவது ஆயிற்றா?''

''என்னுடைய ஆசையை நான் நிறை வேற்றக் கொண்டேன்'' என்றாள் மெர்லின்.

இவ்வளவு நேரம் பாபின் இறந்து போயிருக்காலம் என்று விக்டர் நினைத்தார்,

அத்துடன் மனதில் சற்று பயமும் தோன்றியது! இருந்தாலும், ஸ்ரீதரன் நம்பூதிரிக்கு எதிராக இவளை ஒரு கருவியாக உபயோகிக்க தான் வைத்திருந்ததால், விக்டரினால் மேற்கொண்டு ஏதும் செய்ய முடியவில்லை.

''நீ போய் படு!'' என்றார் விக்டர்-

அடுத்த நாள் பீனா, தன் கணவனைத்தட்டி எழுப்பிய போது, அவன் பிணமாக இருந்தான்.

அவள் பயந்து அலறினாள்.

இந்தக் கூச்சலைக் கேட்டு, மாளிகையில் இருந்த அவ்வளவு பேரும் அங்கே ஓடிவந்தனர்! இப்படி ஒரு பயங்கரம் தன் மாளிகையில் நடந்து விட்டதே என்று சோபியா வருந்தினாள்.

ஆனால் பாபினா இறந்த காரணம் யாருக்கும் தெரியவில்லை—

அக்கம் பக்கத்தவர்கள் ஓடிவந்தனர் சப்தம் கேட்டு.

உதயனும் அங்கே வந்தான்!

இந்த மாளிகையில் மட்டும் ஏன் இவ்வளவு பயங் கரங்கள் தொடர்கதையாகின்றன என்றே அவனுக்குப் புரியவில்லை.

ஆம்புலன்சும், இரண்டுகார்கள் அங்கே வந்தன!

பாபின் சொந்தக் காரர்களும் விரைவில் வந்து சேர்ந்தன.

மாளிகை நிறைய மக்கள். அழுகை சப்தம்!

பிணத்தை ஆம்புலன்ஸில் எற்றிக் கொண்டு போய் விட. மக்கள் கலைந்தனர்.

யாராலும் ஏதும் சொல்ல முடியவில்லை.

ஆனால் சிலர் மட்டும் இந்த மாளிகையில் ஏன் துர்மரணங்கள் என்று மெதுவாகப் பேசிக் கொண்டனர்

உதயன் மனது கேட்காமல், இந்த விபரத்தை ஸ்ரீதரன் நம்பூதிரியிடம் சொன்னான்—

''என் நண்பன் மரணத்திற்கும், இதற்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போலத்தான் எனக்குத் தெரிகிறது'' என்றான் உதயன்.

''அப்படியெல்லாம் நடக்காது...நான்நான் அந்த யட்சியைக் கொன்று விட்டேனே!'' என்றா திருமேனி!

''விக்டர், மாளிகைக்கு வந்த பிறகுதான் இத்தனை துர்மரணங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன'' என்றான் உதயன்—

''இருக்கலாம் ... ஆனால் இந்த நூற்றாண்டில் இங்குள்ள கிரந்தங்களையும், தேவதைகளையும் மீறி ஒருவன் சக்தி படைத்தவனாக இருக்கிறான் என்றால், அதை என்னால் நம்பவே முடியவில்லை'' என்றார் திருமேனி—

இரவு மணி ஒன்பது! நில விளக்கின் எதிரே நின்று கொண்டு திருமேனி பிரார்த்தனை செய்தார்— அதற்குப் பின்...

''அந்த மாளிகையில் நாம் நம்பக்கூடிய ஒரு நபரின் உதவி நமக்குக் கிடைக்குமா?'' என்று திருமேனி கேட்டார்.

''இருக்கிறாள்...ஷைனி இருக்கிறாள்... அவள் சுபத்திராவின் தோழி'' என்றான் உதயன்.

''அவள் அந்த பங்களாவைச் சேர்ந்த பெண்தானே? நான் கேட்பது வெளி ஆள்...விசுவாசமான ஒரு வேலைக்காரி...''

இதைக் கேட்டவுடன் உதயன் மனதில் உடனே தோன்றியது கிளாரா!

அழகான அந்தப்பெண்ணுக்கு வேறு ஏதோ ஒரு சக்தி இருப்பது போலும் அவனுக்குத் தெரிந்தது...

இவள் எப்படி இங்கே வந்தாள் என்கிற எண்ணமும் அவன் மனதில் இருந்தது -

''என்ன யோசிக்கிறாய்?'' திருமேனி கேட்டார்.

''அங்கே இருக்கிற ஒரு பெண்ணை எனக்குத் தெரியும்... சொந்தக்காரி அல்ல...ஒரு வேலைக்காரியின் மகள்...ஆனால் அவளுக்கு அந்த வீட்டில் பங்கு இருக்கிறது.''

''அவளை நான் பார்க்க முடியுமா?'' திருமேனி...

''அதற்கென்ன, அவளை நான் இங்கே அழைத்து வருகிறேன்...''

''அவள் இங்கே வருவது, அந்த மனிதனுக்குத் தெரியவே கூடாது.''

''சுபத்ராவை விட்டு அவளை கோவிலகத்திற்கு அழைத்து வருகிறேன்...''

''பகலில் வேண்டாம்... இங்கே வருவதை வேறு யாராவது பார்த்தால், அவளை அது பாதிக்கும்.''

''அது சரிதான்'' என்று உதயனும் நினைத்தான்... உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரியின் வீடு ஒரு மந்திர

வாதியின் வீடு இங்கே பகல் நேரத்தில் ஒரு பெண் வந்தாள் அவளுக்கு ஏதோ கோளாறு என்று ஒருவர் நினைத்தாலும் அது அவளது எதிர் காலத்தை பாதிக்கும்... அதனால் என்ன செய்வது என்று உதயன் யோசித்தான்.

உதயனின் மௌனத்தைக் கண்ட திருமேனி "நான் ஒரு வழி சொல்கிறேன் சுபத்ரா அந்தப் பெண்ணை கோவிலகத்திற்கு அழைத்து வரட்டும் இரவு நேரத்தில் உதயன் அவளை இங்கே அழைத்து வந்துவிடலாம்— இடுப்பில் முண்டு மேலே ஒரு துண்டு அணிந்து வந்தால் போதும்" என்றார்.

இந்த யோசனை உதயனுக்கும் பிடித்திருந்தது.

உதயன் அதற்குப் பிறகு வீட்டிற்கு வந்து சுபத்ராவிடம் விபரத்தைச் சொன்னான்.

"அவளை எப்படியும் ஒப்புக்கொள்ள வைத்துவிடலாம்" என்று சுபத்ராவும் சம்மதித்தாள்.

அடுத்த நாள் சுபத்ரா, சோபியாவின் மாளிகைக்குப் போனாள் சோபியா வரவேற்றாள்...

"என் அம்மா சொந்தக்காரர் வீட்டிற்குப் போயிருக்கிறார்கள் வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகலாம்! அது வரை எனக்குத் துணையாக இருக்க கிளாராவை என்னுடன் அனுப்புவீர்களா?" சுபத்ரா தாராளமாக ஒரு பொய்யைச் சொன்னாள்.

சோபியா எந்தவிதமான காரணமும் சொல்லாமல் கிளாராவை அவளுடன் அனுப்பி வைத்தாள்—

இதை அறிந்த விக்டர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கிளாரா எத்தனை நாள் இல்லாமற் போனாலும் அவருக்குச் சந்தோஷமே!

இருள் அணுகுவதற்கு முன்பே இருவரும் கோவிலகத்திற்கு வந்து சேர்ந்தனர்—

இருவரும் ஒன்றாகவே உணவருந்தினர்—

சாப்பிட்ட பின் கிளாராவிற்கு வேட்டியும், முண்டும் கொடுத்தாள்—

அதைக் கிளாரா உடுத்திக் கொண்ட போது அவள் கோவிலகத்துப் பெண் போலவே காட்சியளித்தாள்—

இரவு எட்டு மணிக்கு உதயனும் கிளாராவும், திருமேனியின் இல்லத்திற்குப் புறப்பட்டனர்—

''நாம் எதற்காக உள்ளாட்டு மனைக்குப் போகிறோம்?' என்று வழியில் கிளாரா கேட்டாள்—

''அங்கே போவது உனக்கு எப்படித் தெரியும்? என் தங்கை சொன்னாளா?''

''இல்லை இந்த வேஷம் போட்ட போது எனக்கு அப்படித் தெரிந்தது'' என்று அவள் சொன்னதைக் கேட்ட உதயன் ஆச்சர்யப்பட்டுப் போனான்! இல்லத்திற்கு வந்த போது ஸ்ரீதரன் நம்பூதிரி இவர்களுக்காக நில விளக்கின் அருகில் அமர்ந்து காத்துக் கொண்டு இருந்தார்—

''வாருங்கள்...வாருங்கள்...'' திருமேனி—கிளாரா துளசிமாடத்தின் அருகே வந்து நின்றாள்—திடீரென அங்கே ஒரு அற்புதமான சம்பவம் நடந்தது—

நில விளக்கில் இருந்த திரிகள் யாவும், திடீரென மிகவும் பிரகாசமாக எரிய ஆரம்பித்தன?

அப்பிரகாசம், கிளாராவின் முகத்தில் பதிந்தது—திருமேனி திடீரென எழுந்தார்!

ஆனால் தான் ஏன் எழுந்தோம் என்றே அவருக்குப் புரியாமல் போயிற்று!

அவர்களை திண்ணை மீது உட்காரப் பணித்து விட்டு விளக்கு எடுத்து வர அவர் உள்ளே போனார்...

''விளக்குதான் இங்கு இருக்கிறதே!'' என்றான் உதயன்.

''இங்கே யாரும் விளக்கை ஏற்ற வில்லையே...அது தானாக எரிந்தது'' என்றவாறு திருமேனி உள்ளே போக.

அங்கே விரித்திருந்த பாய் மீது இருவரும் அமர்ந்தனர்.

உள்ளே போன திருமேனி பகவதியை தொழுது விட்டு, அங்கே இருந்த ராசிப் பலகையை குனிந்து எடுக்கப்போகும்போது அசரீரியாக ஒரு குரல் கேட்டது.

''ராசிப்பலகை தேவை இல்லை...அவளை வெறும் கேள்விகள் கேட்டு சோதித்தால் போதும்'' என்றதைக் கேட்ட திருமேனி, மிகவும் ஆச்சர்யம் அடைந்தவராய் திரும்பினார்!

# 18

''என் பகவதியே!'' என்று தன்னை அறியாமல் திருமேனி, இந்த அற்புதத்தைக் கேட்டுவிட்டு வாய்விட்டுச் சொன்னார்.

மிகவும் பவித்ரமான, அந்த தேவி பகவதியின் அறைக் குள் இருந்து இதுவரை திருமேனி இதைப் போன்ற அசரீரியைக் கேட்டதே இல்லை—

எப்போதாவது இப்படி தேவி தனக்குக் கட்டளை யளிக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டது என்னமோ உண்மைதான்!

நூற்றாண்டுகளுக்கு முன்னே சக்தி வாய்ந்த ஒரு மாந்திரீகன் அங்கே குடியிருந்தார்.

மகாதேவன் பட்டதிரிப்பாடு என்பது அவரது பெயர்—

அவரைப்பற்றி பல கதைகள் உண்டு—

ஒருதடவை வெகுதூரமாக இருந்த ஒரு ஷேத்திரத்திற்கு, உற்சவம் பார்க்கப் போனார்.

அங்கே நூற்றுக்கணக்காக (யானைகள் வரும். உற்சவம், அங்கே சிறப்பாக நடந்துகொண்டு இருந்த போது ஒரு யானைக்கு) மதம் பிடித்துவிட்டது.

காலில் கட்டியிருந்த சங்கிலியை அறுத்து எறிந்துவிட்டு கூடியிருந்த மக்கள் மத்தியில் அது முரட்டுத்தனமாக ஓட ஆரம்பித்தது.

மகாதேவன் நம்பூதிரி, ஒரு இடத்தில் அமர்ந்து அப்போதுதான் வெற்றிலைபாக்கு போட ஆரம்பித்து இருந்தார்—

அந்த சமயத்தில்தான் யானை அங்கே ஓடிவத்தது.

அடுத்த அடி அது எடுத்துவைக்க காலைத் தூக்கிய போது.

மகாதேவன் கீழே அமர்ந்திருந்தார்—

யானை காலைத் தூக்கியதைக் கண்டபோது, அவர் தன் கையிலிருந்த வெற்றிலையை யானையின் வாயில் போட்டுவிட்டு அசையாமல் நின்றார்—

காலைத்தூக்கிய நிலையில் யானை பின்னால் இரண்டடி எடுத்துவைத்து; காலை கீழே இறக்கி வைத்தது—

"போய் நில்...தாமோதரா!" என்று அவர் யானையின் துதிக்கையை தொட்டுச் சொன்னார்—

ஒரு சிறு குழந்தையைப்போல் யானை, மெதுவாக நடந்து பழைய இடத்திற்குப்போய் நின்றது.

தேவஸ்தான ஆட்கள் அவருக்கு மரியாதை செய்யத் தேடியபோது, அவர் கும்பலுக்குள் காணாமற் போய் விட்டிருந்தார்—

அந்தத் திருமேனி, அறைக்கு வெளியே நின்று பகவதியை அழைத்தால், பகவதி குரல் கொடுப்பது வெளியில் கேட்கும் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப்பிறகு இப்போதுதான் அந்த அறைக்குள் இருந்து தேவியின் சப்தம் கேட்டது!

வெளியே வந்தார்—

"கிளாரா உன்னை அழைத்தது எதற்காக என்று தெரியுமா?"

"இல்லை...தெரியாது."

"அப்படியென்றால் சொல்கிறேன்...அந்த மாளிகையில் சில காரியங்கள் நடக்கின்றன. அவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதே என் விருப்பம்"

"எனக்குத் தெரிந்தவற்றை நான் சொல்கிறேன்" என்றாள் கிளாரா—

அப்போது அங்கே பாலப்பூவின் மணம் வீசியது. அருகில் ஏதும் பாலமரம் இல்லையே.

பின் வாசனை வருவது எப்படி?

நம்பூதிரி சுற்றுமுற்றும் பார்த்தார்

"அங்கே புதிதாக வந்துள்ள மனிதனைப்பற்றி உன் அபிப்ராயம் என்ன?" திருமேனி கேட்டார்.

அவர் அங்கே வந்தபோது கண்கள் இரண்டும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. ஆனால், மாளிகைக்கு வந்த இரவு, ஒரு கண்ணின் நிறம் மாறிவிட்டது''

''என்ன?'' என்று வியப்போடு மற்ற இருவரும் அவளைப் பார்த்தனர்.

இந்த சமயம் அங்கே இருந்த ஜன்னல் அருகில் மிகப் பெரிய பல்லி ஒன்று வந்து நின்றது. கண்கள் இரண்டும் வைரக் கற்களைப் போல் பிரகாசித்தன.

சுமார் ஒன்றரை அடி நீள முள்ள அந்த பல்லி சிறிய முதலைக் குட்டிபோல் காட்சியளித்தது. விளக்கின் நிழலில் அது தங்கியது—

மெதுவாக அது நகர்ந்தது இவர்கள் மூவர் கண்களில் படாமல் மெதுவாக கூரை உச்சியில் போய் மறைந்தது.

''கண்களில் மாற்றம் உனக்கு எப்படித் தெரிந்தது?' திருமேனி கிளாராவிடம் கேட்டார்—

''அவர் பங்களாவிற்கு வரும்போது நானும்அவருடன் தான் வந்தேன்'' என்றார் கிளாரா இதைக் கேட்டவுடன் உதயன் நம்பூதிரியைப் பார்த்தான்!

கிளாரா பொய் சொல்லுகிறாள் என்று உதயனுக்குத் தெரிந்தது—

ஏனெனில் விக்டர்வருவதற்கு முன்பே கிளாரா அந்த மாளிகையில் இருந்திருக்கிறாள் என்பதை அவன் அறிவான்—

இவள் இப்படிப் பேசுவதற்குப் பின்னணியாக ஏதோ ஒரு இரகசியம் இருக்கிறது என்பதை நம்பூதிரி அறிந்தார்.

காரணம், தேவியின் அருள் கிடைத்தது, அவரது மனதில் நிறைந்து இருந்ததுதான்!

''அவருடைய கருவிழிகளில் ஒன்று நிறம் மாறியிருந்த தாகச் சொன்னாயே அவர் உண்மையில் யார்?''

''அந்த நபர் இப்போது உயிருடன் இல்லை... ஆனால் இப்போதுள்ள மனிதரின் உடம்பில் அவர் இருக்கிறார்'' என்றாள் கிளாரா

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''அதை நான் பார்த்தேன்''

''எங்கே?''

''நிலவறைக்குள்''

அவள் என்ன சொல்கிறாள் என்றே இவர்கள் இருவருக்கும் புரியவில்லை. அதனால் கிளாரா விவரமாகச் சொன்னாள்—

அந்த நபர் வந்து சேர்ந்து இரவு விளக்குடன் நிலவறைக்குள் போனதும், அங்கே சவப்பெட்டியில் இருந்த விகாரமான மனிதன் இவருடைய உடம்பிற்குள் மறைந்ததும், பிறகு சவப்பெட்டி காலியாக இருந்ததையும் சினிமாவில் நடப்பதுபோல் விவரித்தாள் கிளாரா!

இதை கிளாரா சொன்ன போது இவர்களுக்கு மேலே கூரையில் இருந்தபல்லி திராவகத்தை கொஞ்சம் சிந்தியது அது நூல் இழை போல் விளக்கின் நிழலில் வந்ததால் மற்றவர்கள் கண்களுக்கு அது தெரியவில்லை.

இதையெல்லாம் கேட்ட திருமேனிக்கு, இறந்து போன துர்மந்திர வாதியான யூதாவைப்பற்றி இன்னமும் தெரிந்து கொள்ள வேண்டும் என மனதில் ஆவல் ஏற் பட்டது.

எந்த கெட்ட வேலை செய்யத் தயங்காதவன் யூதா என்பதைத் திருமேனி அறிவார்!

அவன் புனர் ஜென்மம் எடுத்தால் கதை பயங்கர மாகி விடும்.

சாதாரண மாந்திரீகர்களால் அவனை எதிர்க்கவே முடியாது...

ஆனால் இந்தப் பெண் கிளாரா, அவனைக் கண்டு ஏன் பயப்பட வில்லை?

''நீங்கள் இருங்கள்... உங்களுக்கு உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று நம்பூதிரி எழுந்தார்—

சமையலறைப்பக்கம் பார்த்து,

''தாட்சாயினி இவர்களுக்கு உணவு கொடு'' என்று சொல்லி விட்டு அவர் வெளியே போனார்.

அவர் சென்ற இடம் தேவியின் கோவில்! ஒருகாலத் தில் சக்தி வாய்ந்த கோவில் அது!

ஒருகாலத்தில் 41 யானைகள் ஊர்வலத்துடன் பூஜை நடத்தப்பட்ட பிரபல பகவதி அம்மன் கோவில் இது...

அந்த தேவிக்கு ஒரு நாள் திடீரென சக்தி போய் விட்டது என பேசிக் கொண்டார்கள் — தேவிக்கு ஏற் பட்ட இந்த சாபக்கேட்டிற்கு விமோசனமே இல்லை யென்றார்கள்—

திருமேனி இப்போது இக்கோவிலுக்கு வந்து தேவி யின் முன் நின்றார்—

''எனக்கு ஏதோ சில விஷயங்கள் புரிந்திருக்கிறது...

ஆனால் யாவும் நிறைவாகத் தெரிய நீங்கள்தான் உதவ வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்

அப்போது திரு நடையில் ஏதோ கீழே விழும் சப்தம் கேட்டது.

அதை அவர் எடுத்துப் பார்த்த போது, அது ஒரு ராசிப்பலகையாக இருந்தது!

அதன் பின்னால் மகாதேவன் பட்ட திரிப்பாடின் பெயர் பொறிக்கப்பட்டு இருந்தது!

"இதற்கு என்ன அர்த்தம்?" திருமேனி தன்னைத் தான் கேட்டுக் கொண்டார்.

அதைக் கையில் எடுத்துக் கொண்டு, அவர் அங்கேயே நின்றார்.

அந்த நேரத்தில் இருபக்கம் இருந்த துவார பாலசிகள் பக்கமிருந்து,

"ஜல்...ஜல்" என சப்தம் கேட்டது.

திருமேனி வியப்புடன் பார்க்க, அங்கிருந்த ஒரு சிலையின் கால், மாறி இருந்தது— வலதுகாலில் நிற்பது போல் இருந்த சிலை... இப்போது இடதுகாலுக்கு மாறியிருந்தது—

அதனால் ஏற்பட்ட சப்தம் தான் இது!

துவாரபாலகிக்கு உயிர் இருக்கிறதா?

இதென்ன மாயாஜாலம்!

எப்படியும் தனது முன்னோருடைய ராசிப்பலகை கிடைத்திருக்கிறது — அதை வைத்துப்பார்க்கலாம் என்ற எண்ணதுடன் நம்பூதிரி தன் வீட்டிற்கு வந்தார்—

•

கிளாராவும், உதயனும், அவர்களுக்குக் கொடுத்த உணவை சாப்பிட்டு முடித்து இருந்தார்கள்—

உதயன் வைத்த கண்களை வாங்காமல் கிளாராவையே பார்த்துக் கொண்டு இருந்தான்...

''ஏன், என்னையே பார்க்கிறீர்கள்?'' கிளாரா கேட்டாள்.

''இப்போது உன்னைப்பார்த்தால் ஒரு ராஜகுமாரியைப் போல் இருக்கிறது,''

இதைக் கேட்டவுடன் அவள் நாணமடைந்தாள்? ஸ்ரீதரன் நம் பூதிரி அப்போது அங்கு வந்து சேர்ந்தார்—
திடீரென, அவளிடம் ஒரு மாற்றம் தோன்றியது,

''இந்த ராசிப் பலகையில் எல்லாமே தெரியும்'' என்றார் அவர்—

''இது சேஷத்திரத்தில் இருந்து கொண்டு வந்தது தானே?'' என்று அதைப் பார்த்துக் கொண்டு கேட்டாள்

அடுத்த நிமிடம் மேலிருந்து 'சிக்' என்று ஒரு சப்தம் கேட்டது—

கிளாரா மேலே பார்த்தாள்...அங்கே அந்தப் பெரிய பல்லி தலை கீழகத் தொங்கிக் கொண்டு இருந்தது—

# 19

கிளாரா மிகவும் மெதுவாக தான் அமர்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்தாள்—

அந்த நேரத்தில் வீட்டின் மேல் தளக் கூரையில் 'சிக் 'சிக்' என்னும் சப்தத்துடன் ஒரு சிறு பல்லி சுவற்றின் மீது ஓடியதைக் கண்டாள்—
பெரிய பல்லியை கண்டு, சிறிய பல்லி பயந்தது.

ஸ்ரீதரன் நம்பூதிரியும், உதயனும், கிளாரா பார்த்த அதே பல்லியைப் பார்த்தனர்.

ஏற்கனவே தான் உண்டாக்கிய அந்தப் பசையான நூல் வழியாக அந்தரத்தில் தொங்கிக்கொண்டு இருந்த பெரிய பல்லி, மேலே ஏறப்பார்த்தது—

இதைக் கவனித்த கிளாரா, அக்கயிற்றைத் துண்டித்ததோடு நில்லாமல் ராசிப்பலகையை எடுத்து பல்லியைத் தட்டி விட்டாள்.

கீழே விழுந்த பல்லியை மற்ற இருவரும் நன்றாகப் பார்த்தனர்—

கிளாரா கீழே விழுந்த பல்லியின் மீது தன் சுட்டு விரலை வைத்து நசுக்கினாள் பல்லி துள்ளியது அது சப்தமாகக் கதறியது.

அது சாதாரண சப்தமாக இருக்கவில்லை—

ஓலமாக இருந்தது!

உதயன் பயந்து விட்டான்...

கிளாரா தன் விரலை பல்லியின் மீது இருந்து எடுத்து விட்டாள்—

பல்லி அந்த இடத்தை விட்டு மெதுவாக நகர முயற்சித்தது—

ஆனால் அது கிடந்த அந்த ராசிப் பலகையின் சக்தியால், அதனால் நகரவே முடியவில்லை.

''இவ சாதாரணப் பெண் அல்ல'' என நம்பூதிரி தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

அடுத்தபடியாக கிளாரா தனது முண்டிலிருந்து சிறு நூல் நீளமாகப் பிரித்து எடுத்து, அதை விளக்கில் இருந்த எண்ணெயில் தோய்த்து எடுத்து பிறகு அதற்கு நெருப்பு வைத்தாள்.

அதைத் தொடர்ந்து அவள் பல்லியின் வாலைப் பிடித்துக் தூக்கி, அந்த எரியும் திரியை அதன் உடம்பைச் சுற்றிக் கட்டினாள், கழுத்தை அது இறுக்கியது கழுத்தில் வட்டம் போல் நெருப்பு எரிய, அப்பல்லியை அவள்

ஜன்னல் வழியாக வெளியே எறிந்தாள். அதே சமயம் வெளியில், ஏதோ இறகை அடித்துப் பறப்பது போல சப்தம் கேட்டது.

''அதற்கு சிறகு முளைத்து அது பறந்து விட்டது'' என்றாள் கிளாரா

''எனக்கொரு சந்தேகம்!'' நம்பூதிரி அவளிடம் கேட்டார்.

''என்ன கேளுங்கள்...'' என்றாள் கிளாரா

''எனக்கு ஒன்றும் புரியவில்லை!'' என்று அவர்சொல்ல

''நீங்கள் நினைக்கும் நபர்தான்!'' என்ற கிளாரா சிரித்தாள்.

''தேவவதி தானே நீ?'' திருமேனி'' கேட்க

''ஆமாம்!'' என்றாள் கிளாரா

''நான் சேஷாத்திரத்திற்குப் போன போது அங்கே கால் மாறி நின்ற துலாரபாலகிதானே இது!''

''ஆமாம்!'' அவள் கால் மாறி நின்றபோது உங்களுக்குக் கால் சலங்கை சப்தமும் கேட்டிருக்குமே!'' என்றாள் கிளாரா

இதைக் கேட்ட நம்பூதிரியும், உதயனும் இவளை மிகவும் வியப்புடன் கவனித்தனர்.

கிளாரா சாதாரண பெண் அல்ல... அவளுக்குப் பின்னால் ஒரு அற்புதமான கதை ஒளிந்து கொண்டு இருக்கிறது என்று நம்பிய அவர்களில், உதயன் மட்டும்

அக் கதையை எப்படியும் அறிய வேண்டும் என்று விரும்பினான் —

கிளாரா அச்சம்பவத்தை மிகவும் சுருக்கமாகச் சொல்ல ஆரம்பித்தாள்!

நூற்றாண்டுகளுக்கு முன்பு கடந்த அச்சம்பவத்தை திருமேனியும், தம்பிரானும் முன்பே அறிந்திருக்ககூடும்!

கோதவர்மத் தம்பிரான் நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலம்!

மலைமீது வாசம் செய்த தேவி மிகவும் சக்தி வாய்ந்தவள்— அங்கே அவளது கோயிலும் இருக்கிறது—

மலைமீது இருந்த கோவிலின்மீது ஒரு பட்சி பறந்தாலும், அது எரிந்து விழுந்து விடும்—

கேட்டதைக் கொடுக்கும் உள்ள சுபாவம் தேவியினுடையது,

அந்தத் தேவியை, ராஜாக்கள் தங்களது பரதேவதையாகப் பூஜித்து, ஆராதித்துவந்தனர்.

இப்படி இருக்கும்போதுதான் அந்தப் பயங்கரம் நடந்தது!

தம்பிரானின் படுக்கை அறையிலிருந்து, ராணியை, யூதா அபகரித்துக் கொண்டு போனான்.

ஆனால் தேவிதான் கோவிலகத்தின் ரட்க்ஷகி!

எப்படியும் தேவியினால் தனக்குத் தொல்லை நேரும் என்பதை உணர்ந்த யூதா, ஒரு பிரம்ம முகூர்த்தத்தில் கோவிலை அசுத்தமாக்கிவிட்டான். சொல்ல முடியாத அசிங்கத்தினால், தேவியின் சக்தி உடனே இல்லாமலாகி விட்டது.

அப்போது தேவிக்கு சனிதிசையின் உச்சகட்டம் நடந்து கொண்டு இருந்தது!

யூதா தனது மாந்திரீக சக்தியால், அந்த மாளிகையின் நிலவறையில் தனக்குத்தானே சமாதி கட்டிக்கொண்டான்—பல வருடங்களுக்குப் பிறகு, தனது குணதிற்கேற்ப ஒரு ஆளைக் கண்டுபிடித்தான்—

அதுதான் விக்டர்!

விக்டரின் உடம்பில், யூதாவின் ஆவி புகுந்துகொள்ள இலகுவாக முடிந்தது,

கூடுவிட்டுக் கூடுபாய்ந்து, விக்டரின் உடம்பிற்குள் யூதா பிரவேசித்த அதே நேரத்தில், மலைவாழ்தேவி, தனது துவாரபாலகி ஒருத்தியை அழைத்து, அவளை, கிளாராவின் உடலில் பிரவேசித்துக் கொள்ள அனுமதி அளித்தாள்! இதுதான் நடந்தது'' என்றாள் கிளாரா.

''அப்படியென்றால் தேவியின் சக்தி?''

''முழுசக்தி இன்னும் வரவில்லை யென்றாலும், அத்தேவியின் கெட்ட நேரம் பூராவும் தீர்ந்து விட்டது... இந்த நேரத்தில்தான் யூதா இங்கே திரும்பி வந்து இருக்கிறான்''

''உனக்குள் தேவவதி பிரவேசித்து இருப்பது விக்டருக்குத் தெரியுமா?''

''இல்லை...ஆனால் என்னிடம் ஏதோ சக்தி இருப்பது அவனுக்குத் தெரியும்'' என்றாள் கிளாரா.

''ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்''

''என்ன திருமேனி?''

''உன்னை அவன் தொட்டுக் களங்கப்படுத்தாமல் இருக்க வேண்டும்-ஒருதடவை அப்படிஏதும் தவறுநடந்து விட்டால், பிறகுஎப்போதும் உன்னால் அவனை எதிர்த்து நிற்கவே முடியாது!'' என்றார் திருமேனி—

''எனக்கும் அது தெரியும்... ஒரு தடவை இதற்காக முயற்சித்து விக்டர் தோற்றுப்போனார்'' என்றாள் கிளாரா—

''இன்னொரு விஷயம்!''

''என்ன திருமேனி?''

''நீ உணவு உட்கொள்ளும் போதும் தூங்கும்போதும் தேவவதி வெளியேறி நிற்பாள்... அந்த நேரத்தில் விக்டர் உன்னைக் கசக்கி விட்டால், மீண்டும் தேவவதி உன்னுள் பிரவேசிக்க நிச்சயமாக முடியாது''

''இந்த விஷயத்தில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன்—துர்க்காஷ்டமி நாளில் தேவி குளிக்கப் போகும் போது, தேவவதியாக நான் அவளுடன் போவேன்... மற்ற நேரங்களிலும் தேவிக்கு நானே காவல்!''

''மாமிச வகைராக்களை நீ சாப்பிடுவது உண்டா?'' கிளாராவிடம் கேட்டார்.

''இல்லை''

''அதை நீ சாப்பிட்டாலும் தேவவதி உன் உடலில் இருந்து நகர இடமிருக்கிறது''

இதற்குப் பிறகு ஸ்ரீதரன் உள்ளே போய் ராசிப் பலகையின் மீது வைக்கும் சோழிப்பையை எடுத்துப் கொண்டு வந்தார்—

தன் தாத்தாவை மனதில் நினைத்து கொண்டு தேவியின் சன்னிதானத்திலிருந்து கொண்டு வந்த ராசிப் பலகையின் மீது வைத்தார்—

தியானித்தார் -

''ராசிப் பலகையில் ஜோதிடம் பார்க்க உனக்குத் தெரியுமா?'' திருமேனிகேட்டார்—

''தெரியும்!'' என்று சிரித்தாள் கிளாரா—

''உனக்குத் தெரியாத விஷயத்தை இப்போது நான் பார்க்கப் போறேன்'' என்று திருமேனி சோழிகளை மாற்றி மாற்றி வைத்துப் பார்த்தார்... அதன் மூலம், அவருக்குத் தெரிந்தது

''தேவிக்கு இன்னமும் பூரண சக்தி வரவில்லை...

அதுவரைக்கு சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் நீ!'' என்றார்.

இதைக் கேட்ட கிளாராவின் முகம் வாடிவிட்டது.

இதே நேரத்தில் விக்டர் தன் படுக்கை அறையிலிருந்து வெளியே பார்த்துக் கொண்டு இருந்தார்—

தான் எதிர்பார்த்த நபர் இன்னும் வராததினால் அவர் தூங்காமல் இருந்தார்—

அப்போது சோபியா அங்கே வந்தாள்—

மெர்லின் வந்த போதிலிருந்து, சோபியாவிடம் இவர் அதிக நெருக்கம் காண்பிப்பது இல்லை—

சோபியா கட்டிலின் மீது அமர்ந்து, தனது நைட்டியை மெதுவாக முழங்காலுக்கு மேல் நகர்த்தினாள்.

இதைப்பார்த்த விக்டரின் உள்ளில் இருந்த பூதம் தலை தூக்கினான்

''என்னை மறந்து விட்டாயா?'' சோபியா கேட்டாள்.

''இல்லை...எப்போதும் இல்லை. அண்ணியினால் தான் நான் பெண் சுகத்தையே கண்டேன்...முன்பே இங்கு நான் வந்திருக்க வேண்டும்...'' என்ற விக்டர், அவளை அணைத்து தன் பக்கமாக இழுத்தான்—

இருந்தாலும் அவரது கண்கள் வெளியே தான் பார்த்துக் கொண்டு இருந்தன,

ஒருநிமிடம் கழிந்தவுடன்,

"இதோ வருகிறேன்!" என்ற விக்டர் ஜன்னலின் அருகே போய்ப் பார்த்த போது, இருளில் இரத்தச் சிவப்பாக இருகோளங்கள் தெரிந்தன—

இதைப்பார்த்த அவர் ஜன்னல் அருகே ஒரு பெரிய கோடு போட்டார், தனது கைவிரல் கொண்டு—

காற்றில் வரைந்த அக்கோட்டிற்கும் சக்தி உண்டு என்பதை அவர் அறிவார்—

சோபியாவை திருப்தி படுத்தாவிடில் தான் அந்த மாளிகையில் தங்குவது சாத்தியமே அல்ல என்பதை விக்டர் நன்றாக அறிவார்-

கோவிலகத்துடன், அவர் நடத்தும் யுத்தம் வெற்றி பெற இந்த வீடு அவருக்கு ஒரு பாசறையாக இருந்தது,

சில நிமிடங்கள் கழித்து சோபியாவைஅவர், அவளது அறைக்கு அனுப்பிவிட்டார்.

சோபியாவை அனுப்பிவிட்டு இவர் வேகமாக ஜன்ன லின் அருகே வந்து கையை வெளியே நீட்டினார்—பிறகு வேகமாக அவர் கையை உள்ளே இழுக்க, கையில் அந்தப் பெரிய பல்லி அமர்ந்திருந்தது—

அதன் கழுத்தில் இருந்த நூல் கயிற்றைக் கவனித்த விக்டர்...

"உனக்கு என்ன நடந்தது சொல்!"

"எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது" என்றது பல்லி.

உடனே விக்டர் அப்பல்லியை கட்டிலின்மீது படுக்க வைத்து விட்டு, கதவை மூடிவிட்டு வந்தபோது—

படுக்கையில் மெர்லின் படுத்திருந்தாள்—

"சொல்... என்ன நடந்தது அங்கே?"

"அவள்... அங்கே இருந்தாள்!"

"யார் கிளாராவா?" விக்டர் வியப்புடன் கேட்டார்—

"ஆமாம்!"

"அவளுக்கு நீயார் என்று தெரிந்ததா?"

"இல்லை"

"அப்படியென்றால் பரவாயில்லை"

அடுத்த நாள் காலை பத்து மணிக்கு உதயன் கிளாராவை மாளிகைக்குக் கொண்டு வந்து விட்டான்.

மத்தியானம் கிளாராவும் மெர்லினும்சமையலறையில் சந்தித்துக் கொண்டனர்.

மெர்லின்னின் கழுத்தில் இருந்த 'தீ' காயத்தை வியப்போடு பார்த்துக் கொண்டு இருந்தாள் கிளாரா?

# 20

**கி**ளாரா தன் கழுத்தைக் கவனிக்கிறாள் என்பதை அறிந்த மெர்லின், தனது முண்டினால் அதை மறைத்துக் கொண்டாள் அத்துடன் அந்த இடத்தை விட்டும் மெதுவாக நகர்ந்து விட்டாள்—

பல்லியின் ரூபத்தில் உள்ளாட்டில் நம்பூதிரியின் வீட்டிற்கு வந்தது இந்த மெர்லின்தான் என்று கிளாராவிற்குப் புரிந்தது—

குன்றின்மீது உள்ள தேவிக்கு பூரண சக்தி கிடைக்கும் வரைக்கும், தனக்கும் சக்தி குறைவுதான் என்பதை கிளாரா உணர்ந்ததால், அவளும் அமைதியாகவே இருந்தாள்!

அன்று ஞாயிற்றுக் கிழமை! மாலை ஐந்து மணி—

''எல்லோரும் சர்சுக்குப் போக வேண்டும்...சீக்கிரம் ரெடியாருங்கள்'' என்றாள் சோபியா மெர்லின் அதைக் கேளாதவள் போல் அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்—

எல்லோரும் அவளைத் தேடிய போது, அவள் யார் கண்களிலும் படவே இல்லை.

இந்த தடவை விக்டரை சர்ச்சுக்கு அழைத்துப் போக எல்லோரும் விரும்பினார்கள்—

தங்களுக்கும்உறவினர் ஒருவர் துணையாக இருப்பதை மற்றவர்கள் அறிய வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்—

கிருஸ்மஸ் அன்று விக்டர், கோவிலுக்குள் போகாமல் வெளியிலேயே நின்று விட்டார்...

இந்த தடவை அவரை அவர்கள் அழைத்தபோது ''தனக்கு உடல் நலம் சரியாக இல்லை'' என்று சொல்லி விக்டர் தப்பித்துக் கொண்டார்— ஆனால் சோபியாவின் மகள் தெரிசா விட வில்லை...

''நான் கோவில் பாதிரியாரிடம் எனது சித்தப்பாவை அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறேன்—

அதனால் எந்த விதமான சாக்கும் சொல்லாமல் நீங்கள் எங்களுடன் வருகிறீர்கள்'' என்றாள் தன் சித்தப்பாவிடம்.

விக்டர் ஒரு நிமிடம் சிந்தித்தார்—

போகாமல் இருந்தால் பலர் அவர் மீது சந்தேகம் கொள்ள இடமளிக்கலாம்—

அதனால்,

“சரி நான் வருகிறேன்!” என்று தன் உடைகளை அணிந்து கொண்டார்—

பிறகு கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டார்— பார்த்தவுடன் பயந்தார்— அங்கே தெரிந்தது யூதாவின் முகம்! வெளியில் வந்தபோது மெர்லின் அங்கே இருந்தாள்—

சோபியா அவளையும் கட்டாயப்படுத்தி வேறு ஆடைகளை அணிவித்து, தன்னுடன் அழைத்துப் போக தயார் செய்தாள்—மெர்லின் தன்னையே கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது, அதில் அவள் அணிந்திருந்த ஆடை மட்டுந்தான் தெரிந்தது; உருவம் தெரியவில்லை.

விக்டர் பின் தொடர மற்றவர்கள் முன்னால் நடந்தார்கள்—

கோவிலில் மணி கம்பீரமாக ஒலித்துக் கொண்டு இருந்தது—

விக்டர் நிழல் இருக்கும் ஒரு பெரிய மரத்தின் அடியே போய் நின்றார்—

உள்ளே இருந்த பாதிரி பாவ மன்னிப்பு கேட்டுக் கொண்டு இருந்தார்!

பாதிரி காபிரியேல் பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமான ஒரு மனிதன்...

அவர் படித்தது ரோம் நகரில்! உலகத்தில் பல பாகங்களைச் சுற்றி வந்தவர்.

அவர் மீது அந்த ஊர் மக்களுக்கு பக்தியும் அளவு கடந்த மரியாதையும் உண்டு. காரணம் எந்த விதமான

பிசாசுகளும் அவரைப் பார்த்தவுடன் ஓடி மறையும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை தான்!

பேய் பிடித்தவர்களின் தலையில் பாதிரியார் கை வைத்தால் போதும்...அந்த நபருக்கும் பூரண விடு தலை கிடைக்கும்—ஏனெனில் அவரிடம் மந்திர சக்தி இருந்தது என்று மக்கள் நம்பினார்கள்—

பாதிரியார் காபிரியேல் இந்த சர்ச்சுக்கு வந்த ஒரு மாதத்திற்குப் பிறகு அங்கே ஒரு சம்பவம் நடந்தது—

இதே சர்ச்சில் பணியாளாக வேலை செய்து கொண்டு இருந்த ஒருவனின் மகளுக்கு பேய் பிடித்து விட்டது என்றார்கள்—

அந்தப் பேய் தமிழ் பேசக்கூடிய ஒரு நபருடையது என்றும் சொன்னார்கள்—

தமிழே தெரியாத ஒரு பெண், தமிழ் பேசியதைக் கண்டு மக்கள் வியந்தனர்!

அவள் சரீரத்தில் பிரவேசித்த அந்த நபர் ஒரு மந்திர வாதி என்றார்கள்—

விவாகமே செய்து கொள்ளாத இந்த நபர் இறந்த போது மயானத்திற்கு மிக அருகில் இருந்த ஒரு புறம் போக்கு நிலத்தில் அடக்கம் செய்தனர்.

இந்த விபரத்தை சர்ச் பணியாள், பாதிரியாரிடம் சொன்னான்.

பகல் நேரத்தில் அவள் நன்றாகவே இருந்தாள்.

அதனால், அவளை ஒரு வெள்ளிக்கிழமை இரவு ஆலயத்திற்கு அழைத்து வரும்படி பாதிரியார் பணித் தார்!

அன்று அமாவாசை!

இரவு பன்னிரெண்டு மணிக்கு, தன் மகளை அழைத்து வந்தான் அப்பணியாள்!

அவளை பாதிரியார் அறையில் படுக்க வைத்தார்கள் கடிகாரத்தில் மணி அடித்ததும்.

அப்பெண் திடுக்கிட்டு எழுந்தாள்!

''எனக்கு ஏதாவது உபத்திரவம் கொடுத்தால் நான் பாதிரியாரைக் கொல்லத் தயங்க மாட்டேன்'' என்று உரத்த ஆண் குரலில், அப்பெண் தமிழில் சப்தம் போட்டாள்.

அந்த சமயம் நன்றாக இருந்த அப்பெண் கறுத்துப் போய் விட்டாள்!

காபிரியேல் சில நிமிடங்கள் யோசனையில் ஆழ்ந்து விட்டு, பிறகு சென்று பிரார்த்தனை செய்தார்—

அதன் பின் அவர் தன் கையில் ஒரு ஜெபமாலையை எடுத்துக் கொண்டு வந்தார்—

அந்த மாலையை அவர் பெண்ணின் கழுத்தில் போட்டார்—

திடீரென ஒரு அலறல் சப்தம்!

கூச்சலுக்குப் பின் அமைதியான அப்பெண் நன்றாக தூங்கி விட்டாள்.

பாதிரியார், பணியாளுக்கு உடனே வேலை கொடுத்தார்— பின்பக்கம் சென்று, கடப்பாறையும், மண்வெட்டியும் எடுத்து வரச்சொன்னான்—

பிறகு இருவரும் மந்திரவாதியைப் புதைத்த இடத்திற்குப் போய் நின்றனர்—

நான்கு பக்கத்திலும் மை இருட்டு—

பாதிரியார் கையில் இருந்த டார்ச் அவருக்கு உதவியது—

அந்த சமாதி மிகவும் சுத்தமாகவும், அப்போதுதான் உருவாக்கப்பட்டது போலவும் புதிதாக இருந்தது—

''இங்கே நடப்பது எல்லாமே இரகசியம்!'' என்று அப்பணியாளரிடம் சொல்லி விட்டு, பிணம் புதைத்த இடத்தை தோண்டச் சொன்னார்—

சற்றுநேரம் தோண்டியபோது, பெட்டி அவர்கள் கண்களில் பட்டது. பெட்டியின் மூடியைத் திறக்கச் சொன்னார் பாதிரியார்—

மிகவும் பயத்துடன், அந்த சவப் பெட்டியைத் திறத்தான்—திறந்தவுடன், பயந்து அலறினான்,

# 21

''என்ன... என்ன?'' என்று அவனிடம் கேட்டார் பாதிரியார்...பாதர் பிணம் கண்களை திறக்கிறது. என் றான் பயத்துடன்

''பாதர் கொஞ்சமும் பயப்படவில்லை—

அவர் கீழே அமர்ந்து சவக்குழிக்குள், டார்ச் வெளிச்சத்தைக் பாய்ச்சினார்—

பணியாள் சொன்னது சரிதான்! அந்தப் பிணம் கெடாமல் அப்படியே இருந்தது. அதன் கடை வாயில் இரு பக்கமும் வளைந்து நீண்ட இரு கோரைப் பற்கள்—

காபிரியேல் தன் பையில் இருந்து ஒரு சிறிய சிலு வையை எடுத்து அதன் நெஞ்சின் மீது போட்டார்—

சிலுவை உடலில் பட்டவுடன், பெரிதாக ஒரு அலறல்!

குழியின் உள் பாகம் அசைந்தது!

நான்கு பக்கமும் இருந்த சுவர்கள் அசைய, உதிர்ந்த மண் பெட்டிக்குள் விழுந்தது... அதைத் தொடர்ந்து அந்த உடல் நிரந்தரமாக அமைதி கண்டது.

"இனி இவன் எழமாட்டான்...மூடியைப் போட்டு, பெட்டியை மூடு" என்று பாதிரியார் சொல்ல பணியாள் அவ்வாறே செய்தான்—

குழியை நன்றாக மூடிய பிறகு, இருவரும் அங்கிருந்து திரும்பினர்—

அப்பெண், பாதிரியார் அறையில் சுகமாகத் தூங்கிக் கொண்டு இருந்தாள்—

பணியாள், அவளை எழுப்பி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்—

அத்துடன், அவளது வியாதி சுகமானது! பணியாள் இந்தச் சம்பவத்தை யாரிடமும் சொல்லவில்லை மகளுக்கும் என்ன நடந்தது என்றே தெரியவில்லை.,.

இருந்தாலும் பாதிரியாருக்கு அற்புதமான சில சக்திகள் உண்டென்று மக்கள் ஓரளவுக்கு அறிந்திருந்தனர்—

பாதர் காபிரியேல் ஏதோ எழுதிக் கொண்டு இருந்தவர் அதை நிறுத்தினார்—

இன்னும் பத்து நிமிடங்கள் எழுதலாம் என்று அவர் நினைத்தபோது, அவரது கண்களில் கிளாரா தென் பட்டாள்—

அவள் ஆலயத்திற்குள் வராமல், வாயிற்பக்கம் தயங்கித் தயங்கி நின்று கொண்டு இருந்தாள்—

"அருகில் வா!" என்று தன் கையை அசைத்து அவளை பாதர் அழைத்தார்—

பயத்துடன் அவள் உள்ளே போனாள்—

"நீ தனியாக இல்லை...இல்லையா?" என்று அவரிடம் பாதர் கேட்டார்.

அந்தக் கேள்வியின் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை.

தேவ வதி தன்னுள் இருப்பதை அவள் மறந்து விட்டிருந்தாள்—

''எனக்குப் புரிந்துவிட்டது கிளாரா! நல்லவர்களுக்கு எப்போதும் நல்ல இடங்களில் பிரவேசிக்கலாம்!

நீ ஆலயத்திற்குள் தாராளமாக வரலாம்!'' என்றார் காபிரியேல்!

கிளாரா உள்ளே வந்தாள்—

அதைக்கண்ட மெர்லினும், சர்ச்சினுள் புக அடியெடுத்து வைத்தபோது, உள்ளேயிருந்து உருண்டையாக வந்த அக்னி ஜுவாலை அவள் நெஞ்சை தாக்கியது. அவள் பின்னடைந்தாள். சோபியா அவளை அழைத்தாள்—

அதனால் மெர்லின் இன்னொருதடவை முயற்சித்தாள - முடியவில்லை—நெருப்பின் ஜீவாலை அவள்மீது பயங்கரமாக வீசியது...

பாதிரியார் உள்ளே போய் விட்டதால் அவள் மெர்லினைப் பார்க்கவில்லை.

விக்டர் மரத்தின் அடியிலேயே நின்றார். சர்ச்சின் வாயிலைப் பார்த்தபோது அவர் கண்களில் தெரிந்த காட்சி...

தங்க நிறத்தில் பாதிரி ஆடையும், தலையில் வைரக் கற்கள் கொண்ட கிரீடத்தையும் வைத்துக்கொண்டு, கையில்' தீ பறந்த கத்திகளுடன் காவல்காரர்களைப்போல சிலர் அங்கே நிற்பது இவர், கண்களுக்கு மட்டுமே தெரிந்தது...

தன் சக்தி, அவர்களுக்கு முன்பு தோற்றுவிடும் என்று பயந்த விக்டர், அங்கேயே நின்றார்!

சர்ச்சில் பிரார்த்தனை முடிந்தவுடன் வெளிவந்த சில உள்ளூர் பிரமுகர்கள் விக்டரிடம் வந்து பேசினார்கள்—

சற்று நேரத்திற்குப் பிறகு வெளியே வந்த பாதர், விக்டரைப் பார்த்தார்!

ஒரே பார்வையில் தன்னைவிட, பாதிரியாருக்கு சக்தி மிகவும் குறைவு என்பதை விக்டர் தெரிந்துகொண்டார்—

ஆலயத்திற்கு வெளியே காபிரியேல் ஒரு சாதாரண மனிதன் என்றே விக்டரின் மனதிற்குப்பட்டது.

பாதர் மெதுவாக விக்டரின் அருகே வந்தார்—ஆலயத்தில் உள்ள தன் அறைக்கு வரச்சொல்லி அழைத்தார்—

''இன்று நீங்கள் மிகவும் 'பிசி'யாக இருக்கிறீர்கள். நான் இன்னொரு நாள் தங்கள் அறைக்கு வருகிறேன்'' என்று விக்டர் பதில் சொல்லிவிட்டார்—

''வெள்ளிக்கிழமை எனக்கு ஓய்வான தினம்...அன்று நீங்கள் வரலாம்'' என்றார் பாதிரியார் விடாமல்—

''நான் அவசியம் வருகிறேன்...'' என்று விக்டர் சொல்ல,

பாதர் இதைக் கேட்ட பிறகு உள்ளே போனார்—

மெர்லின், விக்டரின் அருகில் வந்தாள்—

''நீ ஆலயத்திற்குள் போனாயா?''

''முயற்சித்தேன்...முடியவில்லை...''

''கிளாரா போனாளே...'' அப்படியென்றால் அவளில் என்ன சக்தி அடங்கியிருக்கும்?'' விக்டர் இப்படிக் கேட்டுக்கொண்டே யோசித்தார்.

''கிளாராவை, பாதிரி-' அழைத்து பின் உள்ளே கூட்டிச் சென்றார்—

''அப்படியா...அவள் வரட்டும்...அதுவும் நல்லதிற்குத் தான்! நான் கண்டுபிடித்துக் கொள்கிறேன்...''

கிளாரா அருகில் வருவதைப் பார்த்து இருவரும் பேச்சை நிறுத்தினர்—

''சித்தப்பா ஆலயத்திற்குள் வரவில்லையா?'' என்று தெரிசா கேட்டாள்...

''ஓ...!நான் பின்னால் நின்றுகொண்டு இருந்தேன்...'' விக்டர் இப்படி பதில் சொன்னாலும் கிளாராவுக்கு உண்மை நிலை என்னவென்று தெரிந்துவிட்டது.

அதாவது விக்டரும், மெர்லினும் ஆலயத்திற்குள் வர முடியாது என்று அவள் அறிவாள்—

தெய்வீகமான சக்திக்கு, எந்த தேவாலயம் என்றாலும் அனுமதியே தேவை இல்லை—

பைசாச சிருஷ்டிகளுக்கு எந்த ஆலயத்திலும் அனுமதி இல்லை என்பதும் அவளுக்குத் தெரியும்!

அடுத்த நாள் மத்தியானம் சுபத்ரா மாளிகைக்கு வந்தாள்—

''அம்மா ஊரில் இல்லை...எனக்குத் துணையாக இருக்க கிளாராவை அழைத்துப் போக வந்தேன்'' என்றாள் சுபத்ரா -

மெர்லினுக்கு மனதில் சந்தேகம் தோன்றியது. இவர்களுக்கு எதிராக ஏதோ சதி செய்யத்தான் கிளாரா அங்கே போகிறாள் என்று அவள் மெதுவாக விக்டரிடம் கூறினாள் -

இதனால் விக்டர் சோபியாவிடம்...

''சுபத்ரா இங்கே எதற்காக வந்தாள்?'' என்று கேட்க,

''கிளாராவை அழைத்துப் போக வந்திருக்கிறாள் '' என்றாள் சோபியா.

''அது சரியாக இருக்குமா?'' அங்கேவாலிபன் ஒருவன் இருக்கிறானே... அவன் காரணமாகத்தானே நான்சி இறந்தாள்... இவளுக்கும் ஏதாவது ஆபத்து வர வேண்டுமா?'' என்று விக்டர் ஒரு தடையைப் போட்டார்—

''சாவதென்றால் சாகட்டும்... இல்லையென்றால் அவனுடன் ஓடட்டும்...சொத்து தர வேண்டிய அவசியம் இல்லையல்லவா? ' என்று சோபியா சொல்ல,

இதற்கு பதில் அளிக்க விக்டரால் முடியவில்லை—

விக்டர் வந்த பிறகு சோபியாவின் சுபாவத்தில் நிறைய மாறுதல் -

கிளாரா சுபத்ராவுடன் சென்று விட்டாள் -

இருள் பரவ ஆரம்பித்தவுடன், உதயன், கிளாராவை அழைத்துக் கொண்டு உள்ளாட்டின் மனைக்குச் சென்றான் -

ஆலயத்திற்குள் நடந்த சம்பவமும், இவர்கள் இருவரும் உள்ளே வராதது பற்றியும் கிளாரா திருமேனியிடம் சொன்னாள் -

''பாதர் காபிரியேல் மிகவும் நல்லவர் என்றே நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான் உதயன் -

''நீ சொல்வது சரியே...அவருக்கும் சில சக்திகள் இருப்பதாக நானும் அறிவேன்'' என்றார் உள்ளாட்டில் -

''இதுவும் ஒருவிதத்தில் நல்லதிற்குத்தான்! என்னால் முடியாதவற்றிற்கு பாதர் உதவலாம் அல்லவா?'' என்றார் அவர் தொடர்ந்து

"ஆமாம்...மிகவும் சரி" என்றான் உதயன்—

"ஒரு விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்!" என்று ஒரு பழைய கிரந்த புத்தகத்தைத் திறந்து கொண்டே திருமேனி சொன்னார்—

"என்ன அது?"

"யூதா மிகவும் மோசமான மந்திரவாதி என்று இந்தக் கிரந்தத்திலும் சொல்லி இருக்கிறது... அவன், தான் செய்த பல கொடூரங்கள் பற்றியும் இந்தக் கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன—

நாளுக்குநாள் அவனது சக்தி அதிகமாகிக் கொண்டே வரும்...அவன் மறைவதற்கு சில நாட்களுக்கு முன்பு அவனுக்கு அதிபயங்கரமான சக்தி இருந்ததென்றும் இக் கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது...அதனால் தானே அவன் ராஜாவின் மனைவியை தன் படுக்கைக்கு இழுத்து வந்தான்...அதாவது தூரத்தில் இருப்பதை தன் அருகில் கொண்டு வரும் சக்தி அவனிடம் இருந்தது—"

"ஆமாம்! அவனால் எந்தப் பெண்ணையும் வசியப் படுத்த முடியும்...நாம்தான் பின்னால் கஷ்டப்பட வேண்டும்" என்றான் உதயன்.

"மெர்லின் நடத்தை என் மனதில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது" என்று உள்ளாட்டில் சொல்ல .அதை உதயனும் ஒப்புக் கொண்டான்...

"இதுவரை நடந்த இரண்டு மனிதர்களின் சாவை வைத்துப் பார்க்கும் போது, நான் பனைமரத்தின் மீது அமர வைத்த யட்சியின் ஞாபகந்தான் எனக்கு வருகிறது! காரணம் அந்த யட்சியின் லட்சியமே ஆண்கள்தான். அவள் நம்மை நன்றாக ஏமாற்றி இருக்கிறாள்..."

"ஒரு தடவை நீங்கள் அவளைப் பார்த்தால் என்ன? நீங்கள் அவளை விலக்க ஏதாவது பரிகாரம் இருக்கிறதா?' என்று கேட்டான் உதயன்-

"இருக்கிறது... என்னால் அது முடியும்?" என்று சொன்ன திருமேனி ராசிப் பலகையை எடுத்து வைத்து சோளிகளை அடுக்கியபின் மந்திரம் சொல்ல ஆரம்பித்தார்-

அப்போது பலகை மெதுவாக உயர, சோளிகள் கீழே விழுந்து சிதறின...

விளக்கிலிருந்து திரியும் கீழே விழுந்தது...

திருமேனி குதித்தெழுந்தார்!

# 22

கீழே விழுந்த திரியை எடுக்க திருமேனி, தன் கையை நீட்டினார்—

அப்போது அங்கே ஒரு அதிசயம் நடந்தது. கீழே விழுந்த திரியின் ஜுவாலை உதிர்ந்து அப்படியே அது ஒரு பாம்பாக மாறியது... அதன் தலையில் மாணிக்கம் இருந்தது போல் ஒரு பிரகாசம்!

இடமெங்கும் நீலவொளி பரவியது! அந்தப் பாம்பு மேலே உயர பார்த்தது—

அடுத்த நிமிடம் அதன் வாயிலின் நுனி மட்டும் தரையில் இருக்க, பாம்பு நேராக நின்றது—

திருமேனி பின்னால் நகரவில்லை என்றால், பாம்பின் உடல் அவர் மீது பட்டிருக்கும்-

அதே சமயம் கிளாரா தான் அமர்ந்திருந்த ஆடத்திலிருந்து தன் கையை நீட்டினாள்—

பாம்பின் அருகே அவள் கை வந்ததும், பாம்பு பின்னடைந்தது—

இதைக் கவனித்த கிளாரா திடுமென எழுந்து பாம்பின் கழுத்தைப் பிடித்து விட்டாள்—

கையில் துடித்த பாம்பு, அவளது கையைச் சுற்றிக் கொண்டது!

''இது என்ன திரி?'' என்று கேட்டுக் கொண்டே, பாம்பின் தலையை எண்ணெய்யில் நனைத்தாள்.

''உனக்கு பயமாக இல்லை?'' திருமேனி கேட்டார்.

''இது ஒரு திரிதானே?'' என்றாள் அவள் மிகவும் சாதாரணமாக.

இதைக் கேட்ட திருமேனி ஆச்சர்யப்பட்டார்... தனக்குப் பாம்பாகத் தெரியும் திரி...அவளுக்கு மட்டும் விளக்குத் திரியாக தெரிவதெப்படி என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்ட திருமேனி-

''நான் அவனுக்கு முன்னால் தோற்று விட்டேனா?'' என்றும் மனதுள் நினைத்தார்—

தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள உதயனிடம் கேட்ட போது.

''நான் பாம்பைத்தான் பார்த்தேன்!'' என்றான்.

''அப்படியென்றால் அவனுக்கு சக்தி அதிகமாகிறது என்று அர்த்தம்'' என்று சொல்லிக் கொண்டே திருமேனி மீண்டும் ராசிப் பலகையை ஒழுங்குபடுத்தி சோளிகளை வைத்தார்—

இந்த தடவை திரி கீழே விழாமல் இருக்க கிளாரா அதன் அருகில் போய் நின்றாள்—

இந்த தடவையும் ராசிப் பலகை ஒரு பக்கமாக உயர்ந்தது இப்போதுதான் திருமேனி அதைக் கவனித்தார்—ஒரு கை கீழேயிருந்து ராசிப் பலகையை உயர்த்தியது!

கிளாரா விளக்கை அருகில் நகர்த்தியதும், மூவரும் ராசிப் பலகையின் கீழே இருந்த கையைப் பார்த்தனர்—

பார்த்தால் அருவருப்பாக இருக்கக் கூடியதும், கை பூராவும் மீனின் செதில்கள் போல் நிறைந்து காணப்பட்டதும், நான்கே விரல்கள் இருந்ததுமான அக்கை சிவந்த நிறமுடையதாக இருந்தது.

யூதா தனது மந்திர சக்தியினால் பூமியைத் துளைத்து அக்கையை மேலே அனுப்பியிருக்கிறான் என்பதை திருமேனி புரிந்துகொண்டார்—

தனக்கு மேலே அவனுக்கு சக்தி இருப்பதால், ஒன்று அதைக் குறைக்கப் பார்க்க வேண்டும். இல்லை...அதை இல்லாமலேயே செய்து விடவேண்டும் என்று நினைத்த திருமேனி

'இதற்கு என்ன வழி?' என்றும் யோசிக்க ஆரம்பித்தார்—

"ராசி பார்க்கவேண்டும் என்றால் என் கையில் பாருங்கள்" என்று கிளாரா தன் கையை நீட்டினாள்... அதன் படியே ராசிப் பலகையை அவள் கை மீது வைத்துப் பார்த்தார் திருமேனி—

யூதாவிற்கு புதிய சக்தி கிழக்குப் பக்கத்திலிருந்து கிடைத்திருக்கிறது அங்கே துர்தேவதை உள்ள ஒரு பழைய கோவில் இருக்கிறது. அங்கே நரபலிதான் கொடுக்க வேண்டும்.

இதைப்பற்றி அவரது தாத்தா சொல்லி அவர் கேட்டிருக்கிறார்—

''அங்கே இருந்துதான் யூதா இந்தச் சக்தியை சமீபத்தில் பெற்றிருக்க வேண்டும்'' என்று திருமேனி சொல்ல.

''வீட்டில் இருந்த ஒரு வேலைக்காரியைக் கூட சில நாட்களாகக் காணவில்லை'' என்றாள் கிளாரா.

''பனை மரத்திலிருந்த அந்த யட்சியையும் அவன் தான் காப்பாற்றி இருக்கிறான்—நாம் அன்று பார்த்தது. அவனால் சிருஷ்டிக்கப்பட்ட மாயை?... தேவவதி நீ ஒரு விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று கிளாராவைப் பார்த்து அவர் சொன்னார்,

அவள் தலையை ஆட்டினாள்—திருமேனி தொடர்ந்தார்.

''நீ ஒரு வினாடி கூட கிளாராவை விட்டு அகலவே கூடாது...நீ வெளியேறினால் திரும்பவும் அவளுக்குள் நீ புக முடியாத படி அவன் செய்து விடுவான்—''

''எனக்கும் அது தெரியும்...ஒரு தடவை புருஷ சம்பந்தம் உண்டாகி விட்டாலும் இவளுள் நான் பிரவேசிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும்...'' என்றாள் தேவவதியான கிளாரா!

இதே சமயம் உதயன் பாதர் காபிரியேலின் சக்தியைப் பற்றி நினைத்துக் கொண்டு இருந்தான்—

''திருமேனி தவறாக நினைக்கவில்லை என்றால் நான் ஒருவிஷயம் சொல்கிறேன்...'' உதயன் சொல்ல திருமேனி தலையை ஆட்டினார்—

''பாதர் காபிரியேலிடம் இந்த விஷயத்தைப்பற்றி விவாதித்தால் என்ன?'' என்றான் உதயன்—

''நல்ல காரியங்களைச் செய்ய நாலுபேரிடம் அபிப்பிராயம் கேட்பதில் தவறு இல்லை'' என்றார் திருமேனி மகிழ்ச்சியாக!

''விக்டர் ஆலயத்திற்குப் போகும்போது பாதிரியார் இதைப்பற்றி அவரிடம் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கும்... இல்லையா?''

''இருக்கும்! அதனால் நீயே அவரிடம் இதைப் பற்றிப் பேசு'' என்றார் திருமேனி...''

''நீங்கள்...''

''பிறகு நான் வருகிறேன்...''

''அதுபோதும் திருமேனி'' என்றான் உதயன்—

இதே சமயத்தில் விக்டர், சிறு பெட்டியைத் திறந்து, கோவிலில் கிடைத்த சிறு மாலையை எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டார்...புதிய சக்தி கொடுத்த மாலை அல்லவா அது?

மாலையை அணிந்து கொண்டு, அவர் கண்ணாடியில் பார்த்தபோது, அதில் யூதாவின் உருவம் தெரியவில்லை.

மாறாக விக்டரின் சொந்த உருவமே தெரிந்தது—

ஆனந்தம் அவரது மனதை நிறைத்தது—

இதே மாலையை அணிந்து கொண்டு ஆலயத்திற்குள் போனாலும், பாதரினால், எதையும் கண்டு கொள்ள முடியாது என்று அவர் நினைத்தார்—

பெட்டியினுள் ஒரு கண்ணாடி உருண்டையும் இருந்தது அதனுள் பார்த்தால், எதை நினைத்துப் பார்க்க முடியுமே அது நன்றாகவே தெரியும்! ஆனால் யூதா, விக்டரின் உடலுக்குள் புகுந்தபின், அக் கோளத்

தில் ஏதும் தெரிவதில்லை... இப்போது வெறும் விக்டராக இருக்கும் போது அதைப் பரிட்சை செய்து பார்த்தால் என்ன என்று அவருக்குத் தோன்ற, அவர் அதை வெளியே எடுத்தார்—

மாலை கழுத்தில் இருக்க.

''கிளாரா எங்கே இருக்கிறாள்? ' என்று பார்த்தார்—

அவள் அப்போது சுபத்ராவின் அருகில் படுத்துக் கொண்டு இருந்தாள்—

இவள் யார்? இவளுக்குள்ள சக்தி எங்கே இருந்து வந்தது?

விக்டர் தன் சுண்டு விரலை லேசாகக் கீறி வழிந்த இரத்தத்தை, கண்ணாடி கோளத்தில் தெறிக்க அது சிவப்பு நிறமானது. இதைப் பார்த்துக் கொண்டே இருக்கும் போது சிவப்பு நிறம்மாறி...மெதுவாக கறுப்பாகியது—

பின்னால் ஒரு துளி பிரகாசம் தெரிந்தது—

பிறகு கோளம் பூராவும் அது பரவியது...

விக்டர், அப்போது, அங்கே குன்றின் மீது இருந்த தேவியின் கோயிலைப் பார்த்தார்!

''ஓ! இங்கிருந்து தானா இவளுக்கு சக்தி?''

என்று மிகவும் அலட்சியமான குரலில் சொன்னார் விக்டர்.

கோவில் மெதுவாகத் தெரியத் தொடங்கியது இரண்டு துவாரபாலகிகள் நிற்க, கோவிலின் கதவு திறந்து இருந்தது...

''ஓ! இவளுள் இருப்பது தேவியா?'' தனக்குள் கேட்டுக் கொண்ட விக்டர் தேவியின் சன்நிதிசைஇன்னமும் எதுவரை இருக்கிறது என்று கணித்துப்பார்த்தார்—

மீதம் இரண்டுமாதம், பதினான்கு தினங்கள், பதினான்கு நாழிகை பதினாலு வினாடி இருப்பதாகத் தெரிந்தது—

அதற்குப் பிறகு தேவிக்கு அதிக சக்தி கிடைக்கும் என்றும் விக்டருக்குத் தெரிந்தது...

அதற்கு முன் தன் சக்தியை அதிகப்படுத்திக் கொண்டு தன் எதிராளிகள் யாவரையும் நாசம் செய்ய வேண்டும் என்று நினைத்தார்.

தனது ஆரோக்கியம் கெட்டுவிட்டால், இன்னொருவன் உடலில் புகுந்துகொண்டு தொடர்ந்து வாழ்ந்து கொண்டே இருக்கவேண்டும்...

விக்டர் தான் உயிர் வாழ்வதற்குள் இந்த மாளிகையில் இருக்கும் யாவரையும் இல்லாமல் செய்துவிட வேண்டும் என தீர்மானித்தார்—

கிளாராவை மனதில் நினைத்துக் கொண்டு மீண்டும் கண்ணாடியில் பார்த்தார்—

அவள் உறைவிடம் எங்கே?

அவர் கண்களுக்கு தேவவதியின் கருங்கல் சிலை தெரிந்தது. கண்ணாடியில் தனது பெருவிரலைக்கொண்டு அச்சிலையை அழுத்தித் தேய்த்தார்—

# 23

"அப்படியென்றால் நீ அந்தக் கோவிலின் காவல் காரிதான்!" என்றார் விக்டர் கண்ணாடி கோளத்தில் கண்ட உருவத்தைப் பார்த்தபடி—

கண்ணாடியில் முதலில் தான் சிந்திய ரத்தத்தைத் துடைத்தார்—

இதைப்பற்றி மேலும் சில விவரங்களைத் தெரிந்து கொள்ள, விக்டர் மாளிகையில் இருந்த பழைய நிலவறைக்குப் போனார்—

அப்போது மணி பதினொன்று—எல்லோரும் தூங்கிக் கொண்டு இருந்தனர்.

கிளாரா வீட்டில் இல்லை என்பதை அறிந்தும், அவளது அறைக்குள் எட்டிப் பார்த்தார்—

என்ன காரணத்தினாலோ, அப்பெண்ணைக் கண்டால் மட்டும் விக்டருக்கு சற்று பயம்!

விக்டரின் உடம்பில் யூதா குடியேறிய நாளிலிருந்து கிளாரா, விக்டரையே கவனித்துக் கொண்டு இருந்தாள் என்பதையும் அவர் அறிவார்—

இப்போது அவளுக்குப் பின்னால் இருக்கும் இரகசியத்தையும் அவர் அறிந்து கொண்டார்—

கிளாராவும், தன்னைப்போலவே இரண்டு நபர் தான்! யூதா எப்படி விக்டரின் உடலை ஆக்ரமித்து இருக்கிறானோ, அதைப்போலவே குன்றின்மீது இருக்கும் தேவியின் கோவில் துவாரபாலகி, கிளாராவின் உடலில் குடியேறியிருக்கிறாள்!

அவள் பூரணமாக உடலில் இருக்கிறாளா என்பதையும் முதலில் தான் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நினைத்தார் விக்டர்.

நிலவறையில் இருந்து சில, பழைய கிரந்தங்களை எடுத்துக்கொண்டு, தன் அறைக்குத் திரும்பிய விக்டர், கதவை மூடினார்—

அதில் ஒரு கிரந்தத்தில், மலைக்கோயில் ஏற்பட்ட வருஷம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது—

கோவிலை ஸ்தாபித்து முடிக்கபதினைந்து வருடங்கள் ஆகியிருந்தன—

இரண்டாவது உன்னிக் கேரளவர்மாதான் இந்த கோவில் வேலையை ஆரம்பித்து வைத்தது!

தேவிக்குக் காவலாக இருக்க தேவவதி என்றும் விஷ்ணுப்பிரியா என்றும் இரண்டு பட்சிகளை, ''சன்னி வேஷ!' மந்திரத்தினால் அச்சிலைகளுக்குள் குடியிருத்தி இருந்தார்கள்—

வலதுபக்கம் தேவவதி!

இடதுபக்கம் விஷ்ணுப்பிரியா!!

இவர்கள் சிலைகளுக்குள் குடியிருந்தனர்.

அப்போது தேவிக்கு சனிதிசை நடந்துகொண்டு இருந்ததால், யூதாவினால், தேவியை சக்தியில்லாத வளாக்கி விட முடிந்தது—

தேவவதியை ஒழிக்க வேண்டும் என்றால், அவளது தசாபுத்தியை அறிந்து யக்ஷி ஹோமம் செய்து அவளை எரிக்க வேண்டும்.

விக்டர் அப்போதிலிருந்து அதற்கான வழி முறைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார் -

இப்போது இருக்கும் நிலையில் ஹோமம் செய்தால் எல்லோருக்கும் தெரிய வரும், மற்றும், காரணம் சொல்லி யாக வேண்டும் -

இதற்கு தற்போது இருக்கும் வழி ஒன்றேதான்! தேவ வதி - கிளாராவின் உடலைவிட்டு அகன்று இருக்கும் நேரத்தில், கிளாராவை பலவந்தமாகக் கெடுத்து விடுவது தான்!

அதற்குப் பின் தேவவதி, கிளாராவின் உடலில் நுழைய முடியாது -

இரவு நேரத்தில் தேவி பள்ளி கொள்ளும் போது துவாரகபாலகிகள் விழித்துக் காவல் காக்க வேண்டிய வேலை!

விக்டர் ஒரு தீர்மானம் செய்து கொண்டார், தேவவதியின் சிலையை முதலில் உடைத்துவிட வேண்டும் - உடைத்து தூளாகி விட்டால் இரவு நேரத்தில் தேவவதிக்கு தஞ்சம் புக இடமிருக்காது -

அத்துடன் அவளது சக்தியும் குறைந்து விடும்...

மறுநாள் அமாவாசை!

அன்று தேவவதியின் சிலையை சிதைத்து விடலாம் என்று அவர் கணக்கு போட்டார்.

மறுநாள் மாலை உதயன், தேவலாயத்திற்கு காபிரியேலைச் சந்திக்கச் சென்றான்.

''நான் இங்கே வந்தது தங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசத்தான்!'' என்று உதயன் சொல்லிக்கொண்டு பாதிரியாரின் அறைக்குள் வந்த போது, அவர் அவனை வரவேற்று அமர வைத்தார்—

பணியாளை அழைத்து குடிக்க 'டீ' கொண்டு வரச் சொன்னார்—

அவருக்கும் உதயனைப் பற்றி நன்றாகத் தெரிந்து இருந்தது—

இருவரும் 'டீ' குடித்தவுடன்,

''என்ன விஷயம்?'' இப்போது பேசலாமே'' என்றார் பாதிரியார்—

''நான் சொல்வதை முதலில் நீங்கள் நம்பமாட்டீர்கள். விஷயங்கள் அப்படிப்பட்டவைதான்'' என்ற உதயன் விக்டரைக் குறித்து தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை விவரமாகச் சொன்னான்—

இதைக்கேட்ட பாதிரியார் முகத்தில் சந்தேகத்தின் நிழல் படிந்தது—

விக்டர் ஒரு மரத்தினடியில் நின்றுகொண்டு இருந்தது அவரது நினைவுக்கு வந்தது—

பாதிரியாரிடம் சொல்ல வேண்டியவற்றை விவரமாகச் சொன்னபிறகு, உதயன் அங்கேயே அவருடன் இரவு உணவை முடித்துக்கொண்டு தன் கோவிலகத்திற்குத் திரும்பினான்,

சற்றுதூரம் சென்றபிறகு தன் பின்னால் யாரோ வருவது கண்டு உதயன் திரும்பிப் பார்த்தான்.

டார்ச் வெளிச்சத்தை அப்பக்கம் திருப்ப அங்கே நின்று கொண்டிருந்தது ஒரு பெண்—

''யார் நீ?''

''நான் அப்பக்கமாக போகிறவள்தான்!''

என்ற அவள், அவன் பின்னால் வர, அதற்கு உதயன் இடம் தராமல், அவளை முன்னே நடக்கவிட்டான்.

''நீ யார் என்று எனக்குத் தெரியாதே'' உதயன் சொல்ல...

''ஆனால் உங்களை எனக்குத் தெரியும்!'' என்றாள்.

டார்ச் வெளிச்சத்தில் அவள் ஒரு அழகான பெண் என்பது தெரிந்தது.

அவளிடமிருந்து நல்ல மணம் வீசியது! திடீரென உதயனுக்கு சந்தேகம் ஏற்படுகிறார்ப் போல் ஒருசம்பவம் நடந்தது.

நேராக டார்ச் வெளிச்சம் அவள் மீது விழுந்தபோது அவளது நிழல் மறுபக்கம் விழவில்லை. இதை அவன்

கவனித்தான்... இதனால் அவன் மனதில் பயம் தோன்றி விட்டது ...இவளும் ஒரு யட்சிதான்!

சற்று முன்னால் நடந்த அவள் ஆள் நடமாட்டமே இல்லாத ஒரு இடத்தில் இருந்த சிறிய வீட்டின் முன் நின்று—

''இதுதான் என் வீடு!''என்றாள்.

''அப்படியென்றால் நான் விளக்கைக் காட்டுகிறேன். நீ வீட்டிற்குள் போ!'' என்றான் உதயன்...

அதே சமயத்தில் வீட்டில் மேலும் இரண்டு பெண்கள் இருப்பதை உதயன் வெளிச்சத்தில் பார்த்தான். பார்ப் பதற்கு அவர்கள் இவளைப்போலவே இருந்தனர்.

''ஏன் நீங்கள் உள்ளே வரவில்லையா?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை...இல்லை... எனக்கு மிகவும் அவசரமாக போக வேண்டும்!'' என்று உதயன் வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

''அட... நீங்கள் அப்படிச் சொல்லிவிட்டுப் போனால் எப்படி?'' என்று சொன்ன ஒருத்தி மற்றவர்களுடன் சேர்ந்து உதயனை வளைத்துக் கொண்டாள்.

மேலும் அவனைப் பிடிக்க கையையும் நீட்டினாள் உதயன் திடீரென...

''என் தேவியே!'' என்று உரத்த குரல் கொடுத்தான். ஏறக்குறைய அலறல் போல் இருந்தது அது சுபத்திராவின் பக்கத்தில் படுத்திருந்த கிளாராவின் காதில் இந்த சப்தம் விழுந்தது. சுபத்ரா நன்றாகத் தூங்கிக் கொண்டு இருக்க, கிளாரா அறைக் கதவைத் திறந்து கொண்டு வேகமாக ஓடினாள்.

அவள் உள் தேவவதி இருந்த காரணத்தினால் சில நிமிடங்களில் கிளாரா உதயன் அருகில் வந்து விட்டாள்.

உதயனை அவள் தன் கையால் பற்றிக்கொண்டு ''எல்லோரும் தூர விலகுங்கள்!'' என்று சப்தம் போட்டாள் கிளாரா.

அவர்கள் அசையாமல் அங்கேயே நின்றார்கள். அப்போது கிளாரா தன் கழுத்தில் இருந்த ஒரு மாலையை எடுத்து உதயன் கழுத்தில் போட்டாள்...

உதயனை அவள் மேலே நடக்கச் சொல்ல அவனும் நடந்தான்.

யட்சிகள் அங்கேயே நின்றார்கள். கிளாரா தன் கையை பிடித்துக் கொள்ளச் சொன்னாள், உதயனிடம்!

சில நிமிடங்கள் அவர்கள் கோவிலகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

''நான் இதை மறக்கமாட்டேன்!'' என்றான் உதயன் சொல்ல,

''நானும் மறக்க மாட்டேன்!'' என்றாள் கிளாரா அவனை பார்த்தபடி.

படுக்கையில் படுத்தாலும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை...நடந்ததெல்லாம் ஒருகனவு போலத்தோன்றியது இன்று எவ்வளவு பெரிய ஆபத்து நிகழவிருந்தது. இதிலிருந்து கிளாரா தன்னைக் காப்பாற்றா விட்டால் என்ன வாகியிருக்கும்.

விக்டரிடம்வந்து அந்தமூன்றுயட்சிகளும் நடந்ததைச் சொன்னார்கள். தேவவதி வராவிட்டால் நாம்நினைத்தது நடந்திருக்கும் என்றார்கள்.

''இனி அதிகநாள் அவள் துள்ள முடியாது!''என்றார் விக்டர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை! அமாவாசை...

பாதர் காபிரியேரிடம் வருவதாகச் சொன்ன நாள்—

உதயன் தேவலாயத்திற்குச் சென்று வந்ததால்தான் யாரென்று அவருக்குப் புரிந்து இருக்கும் என்று நினைத்தார் விக்டர்—

தனக்கு இன்னொரு எதிரி கிளம்பியிருக்கிறார் என்பதையும் விக்டர் கணக்கிட்டார்.

ஆனால் இப்போது தனக்குக் கிடைத்திருக்கும் அபாரமான சக்தியால், பாதிரியார் தனக்கு சரியான எதிரியே அல்ல என்று முடிவு செய்தார் விக்டர்-

சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அவருக்கு சக்தி அதிகமாகும்!

இதைத் தெரிந்து கொண்டுதான் விக்டர் இரவு ஏழு மணிக்குமேல் தேவலாயத்திற்குப் போனார்-

''இரவு அர்த்தமாக திரும்பி வரமாட்டேன்'' என்று சோபியாவிடம் சொல்லிவிட்டுத்தான் அவர் புறப் பட்டார்—

அன்று அமாவாசையானதால் தேவவதியின் சிலையை சின்னாபின்னமாக உடைத்து அருகில் உள்ள குளத்தில் போட்டுவிட வேண்டும் என்றும் அவர் முடிவு செய்து இருந்தார்—

பாதிரிகாபிரியேல், விக்டரைப் பற்றி ஏதும் அறியா தவர் போல், அவரை வரவேற்று தன் அறைக்குள் அமர வைத்தார்—

இன்று இரவு ''இங்கேயே சாப்பிடலாம்'' என்ற பாதிரியார் வேலையாளிடம் விசேஷமாக சமைக்கச் சொன்னார்-

வேலைக்காரன் உடனே பின் பக்கம் போய் ஒரு கோழியைப் பிடித்தான் சமையலுக்காக!

"இங்கே வருவதற்கு முன் விக்டர் எங்கே இருந்தீர்கள்." காபிரியேல் கேட்டார். ஆனால் விக்டருக்கு பழைய விஷயங்கள் ஏதும் ஞாபகம் இல்லை... யூதாவின் ஆக்ரமிப்பால்!

"நான் வெகு தூரத்தில் இருந்தேன்" என்றார் விக்டர்.

பாதிரியார். விக்டரின் ஒவ்வொரு அசைவையும் மிகவும் கூர்மையாகக் கவனித்தார்.

ஒரே பார்வையில் உதயன் சொன்னதெல்லாம் உண்மை என்று அவர் தீர்மானித்தார்!

அப்போது கடிகாரத்தில் மணி ஏழடித்தது... சற்று நேரத்திற்குப் பிறகு மீண்டும் மணி ஏழடித்தது.

பாதிரியார் கடிகாரத்தைப் பார்த்தபோது சிறிய முள் திரும்பி ஓடியதைக் கவனித்தார்.

பிசாசுகளின் சக்தி அருகில் இருந்தால் இதைப் போன்ற சம்பவங்கள் நடக்கும் என்று பாதிரியார் அறிவார்.

இதைப் புரிந்த விக்டர் கடிகாரத்தை உற்றுப் பார்க்க கடிகாரம் ஒழுங்காக ஓட ஆரம்பித்து விட்டது.

வேத வாக்கியங்களை மனதில் ஜபித்துக் கொண்டே பாதிரியார் விக்டரின் முகத்தைப் பார்த்தார்.

திடீரென பாதிரியார் சஞ்சலமடைந்தார் ஏனெனில் விக்டரின் கழுத்தில் ஒரு பாம்பு நெளிந்து கொண்டு இருந்தது.

# 24

பாதிரியார் காபிரியேல் தன் கழுத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததை விக்டரும் கவனித்தார்.

அதனால் தனது இடது கையைக் கொண்டு கழுத்தைத் தடவிக் கொடுக்க பாம்பு மாலையாகியது.இதையும் பாதிரியார் பார்த்தார்-

இவன் சாதாரண மனிதன் அல்ல... மிகவும் சமயோஜிதத்துடன்தான்! இவனைக் கையாள வேண்டும் என்று அப்போதே பாதர் முடிவு செய்து கொண்டார்...

''உங்கள் குடும்பம் இந்த ஊரில் மிகவும் புகழ்வாய்ந்த குடும்பம்... மந்திரிகளும், ராஜாக்களும் வாழ்ந்த வீடல்லவா அது?'' என்று அவர் தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டே போக, வேலைக்காரன் அப்போது ''உணவு தயார்'' என்றான்.

இருவரும் சாப்பிடப் போனார்கள்—

''உங்கள் கழுத்தில் இருக்கும் மாலை மிகவும் அழகாக இருக்கிறது.கற்கள் நன்றாகவேஜொலிக்கின்றன அதிலே ஒரு சிறு சிலுவையைத் தொங்கவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும்'' என்றார் காபிரியேல் சாப்பிட்டுக் கொண்டு இருந்த போது.

விக்டர், அவர் சொன்னது தன் காதில் விழாதது போல் சாப்பிடுவதில் கவனம் செலுத்தினார்.

இதையும் பாதிரியார் கவனிக்கத் தவறவில்லை.

உணவு வேலை முடிந்தவுடன், விக்டர், அங்கிருந்து புறப்பட மிகவும் அவசரப்பட்டார்.

''இன்னொருநாள் நான் சாவகாசமாக இங்கு வருகிறேன்'' என்றவாறு அவர் எழுந்தார்.

''ஆலயத்திற்கு கண்டிப்பாக வரவேண்டும்'' என்பதையும் விக்டர் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் வெளியேறினார்.

அங்கிருந்து விக்டர் கிளம்பி குன்றின் மேல் குடியிருக்கும் தேவியின் கோயிலை நோக்கி வேகமாக நடந்தார். அமாவாசை இரவு—நல்ல மை இருட்டு—விக்டருக்கு இருட்டு பிரச்னையே அல்ல! அவரது ஒருகண் மிகவும் பிரகாசமாகத் தெரிந்தது—

பூனையைப் போல் அவர் வேகமாக நடந்தார்—

அமாவாசை இரவில் குன்றின் மீது உள்ள பகவதி தேவி, நாலு மைலுக்கு அப்பால் உள்ள ஒரு க்ஷேத்திரத்திற்கு யாத்திரை போவது வழக்கம். போகும் போது துவார பாலகிகளும் உடன் செல்வது பழக்கம்.

அதே சமயத்தில் கோவிலுக்குக் காவலாக ஒரு யட்சியை அங்கே விட்டுச் செல்வதும் வாடிக்கை!

விக்டர் குன்றின் கோவிலுக்கு வந்த போது எங்கும் பயங்கர நிசப்தம்!

கோவில் நடையில் பயங்கர ரூபத்தோடு ஒரு யட்சி இருந்ததை அவர் பார்த்தார்—

தேவவதியின் சிலை அருகே அவர் செல்ல முயன்ற போது, யட்சி, அவரைத் தடை செய்தது—

உடனே விக்டர் தன் கழுத்தில் கிடந்த மாலையை கழற்றி, யட்சியின் கழுத்தை நோக்கி எறிந்தார்— அது

பாம்பாக மாறியது. விழுந்த பாம்பு, யட்சியின் கழுத்தை சுற்றிச் சுற்றி நெருக்கியது

அதிக சக்தியுள்ள அந்த யட்சியின் வாயிலிருந்து இரத்தம் வெளிவர ஆரம்பித்தது. பெரும் அலறலுடன் அந்த யட்சி முன்பக்கமாகச் சாய்ந்தாள்.

விழுந்த இடத்திலிருந்து புகை எழுந்தது - சில வினாடிகளுக்குள் அங்கே ஏதும் இல்லாமல் போக, எஞ்சியது பாம்பு மட்டும்தான்!

விக்டர் அதை எடுத்து கழுத்தில் போட்டுக் கொண்டார்.

யட்சியை வென்றுவிட்டோம் என்கிற எக்களிப்புடன் விக்டர் தேவவதியின் சிலையின் அருகே சென்றார்—

சிலையைப் பார்த்தார்—

பிறகு மெதுவாக அதைத் தடவிக் கொடுத்தார். வலதுகால் கீழே இருக்க இடது காலைத்தூக்கி நாட்டிய கோலத்தில் இருந்தது அச்சிலை.

சிலையை விக்டர் மெதுவாக ஆட்டிப்பார்த்தார்—ஆனால் அது அசையவில்லை.

விக்டர் கழுத்தில் இருந்த மாலையைப் பிடித்துக் கொண்டு, குகைக்குள் இருந்த காளியை தியானித்தார்—

அதற்குப்பிறகு ஒரு மரத்தை வேருடன் பிடுங்குவது போல, சிலையைப் பெயர்த்து எடுத்து, தன் தோளின்மீது போட்டுக் கொண்டு கோயிலின் குளத்தின் அருகே போய், சிலையை அதனுள் போட்டார்.

குளத்தில் அதிக நீர் இல்லாத காரணத்தினாலும் ஏராளமான குப்பைகள் நிறைந்திருந்ததாலும், சிலை

தண்ணிருக்குப் போகாமல், நின்ற நிலையிலேயே, நின்று விட்டது—

குளத்தின் நடுவே நின்ற சிலையை கவனிக்காமல் விக்டர், அங்கிருந்து வேகமாக நடந்தார்—

சற்று நேரத்தில் சிலை தண்ணீரில் சாய்ந்தது—

சற்று நேரத்திற்குப் பிறகு தேவியும், துவாரபாலகிகளும் திரும்பிவந்தார்கள்.

தேவவதியின் சிலை அங்கே இல்லை.

சுற்றுமுற்றும் அவள் பார்த்தபோது அருகே குளத்திலிருந்து 'கிளக்' 'கிளக்' என்கிற சப்தம் கேட்க, தேவவதி அங்கே போய் பார்த்தபோது குளத்தில் ஒரு பிணம் கிடப்பதைப் பார்த்தாள்—அதன் அருகே நன்றாக உற்று நோக்கியபோது, தன் சிலையும் அங்கே இருந்தது அவளுக்குத் தெரிந்தது—

அருகிலேயே ஒரு பிணமும் இருந்தது—

குளம் அசுத்தமாகிவிட்ட காரணத்தில் தேவவதி அதில் இறங்கவில்லை.

பிணம் மட்டும் இல்லாது இருந்தால், அவள் சிலையை வெளியே கொண்டுவந்து இருக்கமுடியும்—குளம் அசுத்தமாகி இருந்தது!

இப்போது அவளுக்கு இருந்த ஒரே வழி, கிளாராவின் உடலில் பிரவேசிப்பதுதான்! வேறு புகலிடம் இல்லை!

மாளிகைக்கு வந்த தேவவதி கிளாராவின் உடலை, தன் வசப்படுத்திக் கொண்டாள்—

பொழுது புலரும் முன் கிளாரா எழுந்தாள்—!

எழுந்தவுடன், அவள் நேராக கோவிலகத்திற்குச் சென்றாள்—

அவ்வளவு அதிகாலையில் எழுந்துபோய் குளத்தில் நீராடிவிட்டுத் திரும்பிக்கொண்டு இருந்த உதயவர்மா கிளாராவைப் பார்த்து வியந்தான்.

''என்ன இவ்வளவு காலையில்?''

''விஷயம் இல்லாமலா?'' வாருங்கள் சொல்கிறேன்'' என்று அவள் அழைத்தாள்—

அவள் பேசும் குரலில் இருந்து, பேசுவது தேவவதி என்றே உதயனுக்குத் தெரிந்தது—

மலைக்கோவில் குளம் அசுத்தமாகிவிட்ட காரணத்தினால், கிளாரா, சுபத்ராவை அழைத்துக்கொண்டு கோவிலகத்துக் குளத்திற்குச் சென்றாள் நீராட!

கிளாரா சொன்னதில் இருந்து; ஏதோ விஷயம் இருப்பதாகப்பட்டது உதயனுக்கு!

குளித்து, சிற்றுண்டியை முடித்துக் கொண்டபிறகு கிளாரா உதயனிடம்,

''உள்ளாட்டில் நம்பூதிரியைப் பார்க்க உடனே போகவேண்டும்'' என்றாள்—

''என்ன விஷயம்?''

''அங்கே போனபிறகு சொல்கிறேன். ஆனால் அந்த இடத்திற்கு அவசியம் போகவேண்டும்'' என்றாள் கிளாரா—

தன் மாமாவிடம் இதைச் சொன்னபோது,

''என்ன விஷயம்?'' என்று அவரும் கேட்டு வைத்தார்—

''அங்கே போய் வந்தபிறகு சொல்கிறேன்'' என்று உதயன் புறப்பட்டுவிட்டான் கிளாராவுடன்.

அங்கே போனபோது ஸ்ரீதரன் நம்பூதிரி இவர்களுக்காகவே காத்துக்கொண்டு இருப்பதைப்போல் காணப்பட்டார்—

''நீங்கள் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்... காலையில் சேகர வாரியர் இங்கே வந்து இருந்தார்—குன்றின் மீது உள்ள பகவதிகோவிலில் நடந்துள்ள எல்லா விஷயத்தையும் சொன்னார்—இதையெல்லாம் அவன் தான் செய்திருக்க வேண்டும்'' என்றார் உள்ளாட்டில்.

''பிணத்தை யார் போட்டு இருக்க முடியும்?'' உதயன் கேட்டான்...

''குளம் அசுத்தமடைய அதையும் அவனேதான் செய்து இருக்க வேண்டும்.''

''இனி என்ன செய்யலாம்?'' என்று திருமேனி கேட்ட போது உள்ளாட்டில் யோசனையில் ஆழ்ந்தார்.

''இந்த வாரம் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் நாளை மேல் பத்தூர்காவில் உற்சவம்! பத்து நாளைக்கு தேவியும் துவார பாலகியும் அங்கே தான் இருப்பார்கள் கிளாராவின் உடல் இந்த நாளில் களங்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார் நம்பூதிரி—

''இந்த விவரம் அந்த நபருக்குத் தெரியுமா?''

''இந்த நேரத்தில் அந்த நபர் யட்சி ஹோமம் நடத்த முயற்சிப்பார்—அப்போது இந்த நிலை அவருக்குத் தெரியவரும்''

''யட்சி ஹோமமா?'' உதயன் வியப்புடன் கேட்டார்.

''ஆமாம்...ஹோமத்தில் தேவவதியின் சிலையை எரித்தும் விடலாம்'' என்றார் நம்பூதிரி—அப்போது சுவற்றில் பல்லி சப்தமிட்டது!

## 25

உடனே கிளாரா மேலே பார்த்தாள். அதே பழைய பல்லி மீண்டும் இங்கு வந்து இருந்தது.

இருந்த இடத்திலிருந்து கிளாரா கையை நீட்டினாள்—கை வீட்டின் முகட்டின் வரைக்கும் நீண்டு போய் பல்லியின் கழுத்தைப் பிடித்தது—

''இது யாரென்று உங்களுக்குத் தெரியுமா?''

கிளாரா கேட்டாள்—

திருமேனி தன் கழுத்தில் இருந்த பெரிய தாயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, பரதேவதையை தியானித்தார்—பிறகு சொன்னார்—

''நான் பனை மரத்தின் மீது அமர வைத்திருந்த யட்சி பாமா!'' என்றார்—

இதைச் சொல்லிவிட்டு திருமேனி எட்ட இருந்த, தன் பாட்டனார் கொடுத்த ராசிப் பலகையை சற்றே நகர்த்தினார்—

அந்தப் பலகைக்குக் கீழே மிகச் சிறிய ஓமக்குண்டம் தெரிந்தது.

அந்த குண்டத்தில் விரைவாக சில சமித்துக்களைப் போட்டு, ஒரு கற்பூரத்தை அதன் மீது வைத்து விளக்கின் சிறிய திரி ஒன்றை எடுத்து அதன் மீது வைக்க நெருப்பு 'குப்பெ'ன்று பற்றிக் கொண்டது.

''அவளை இதில் போடு!'' என்று அவர் சொன்ன உடன், கிளாரா, பல்லியை நெருப்பின் மீது பிடித்தாள்.

''என்னை நாசம் செய்யாதீர்கள்...நீங்கள் சொல்வதெல்லாம் நான் கேட்கிறேன்'' என்று பல்லி தன் பாஷையில் சொல்ல அது கிளாராவிற்கும் திருமேனிக்கும் புரிந்தது. ஆனால் உதயனுக்குத் தெரியவில்லை.

அக்னி மீது பல்லியும் சத்தியம் செய்தது.

''இதையெல்லாம் நான் நம்பமாட்டேன்...அசுர சிரேஷ்டனாகிய குபேரன் மீது மூன்று தடவை சத்தியம் செய்ய வேண்டும்'' என்றாள் கிளாரா. பல்லி அதே போல் சத்தியம் செய்ய கிளாரா, அவளை நெருப்பின் ஜுவாலையிலிருந்து அகற்றினாள்.

அதன் பிறகு ஸ்ரீதரன் நம்பூதிரி, சுவர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த வெண்கலச் சிலைகளில் மிகவும் சிறியதாக ஒன்றைத் தேர்தெடுத்து அதன் கழுத்தில் மந்திரித்த ஒரு கறுப்புக் கயிற்றைக் கட்டினார்.

பிறகு பல்லியை நோக்கி அச்சிலையில் குடியேறுமாறு பணிக்க, அதுவும் அவ்வாறே செய்தது—

இப்போது கிளாராவின் கையிலிருந்த பெரியபல்லி மிகவும் சிறியதாக உருமாறி இருந்தது—

''அதை வெளியில் எறிந்து விடு!'' என்று திருமேனி சொல்ல. அவளும் அதே போல் செய்தாள்—

''இனி நமது வேலை தேவவதியின் சிலையை வெளியில் எடுத்து அதை முதலில் சாஸ்திரங்கள் சொல்லும் வகையில் சுத்தப்படுத்த வேண்டும். ஆனால் குளத்தில் இருக்கும் சிலையை யார் வெளியே எடுப்பது.''

என்று மூவரும் யோசிக்கத் தொடங்கினார்கள். அப்போது உதயனின் பார்வை சட்டென்று யட்சியைக் குடிவைத்த அந்த வெண்கலச் சிலைமீது விழுந்தது—

அவன் பார்வை போகும் திசையை திருமேனியும் கவனித்தார்.

விருந்தாளிகள் இருவரும் சாப்பிட அழைக்கப்பட்டனர். திருமேனி சாப்பிட தனி இடம் உண்டு.

உணவை உட்கொள்ளும் முன் பல சடங்குகள் செய்ய வேண்டியிருக்கிறது,

எல்லோரும் உணவு வேலையை முடித்துக் கொண்டு அமர்ந்திருக்கும்போது, கிளாராவைத் தேடிக் கொண்டு சச்சிதானந்த வர்மா அங்குவந்தார்—

''ஷைனி கிளாராவைத் தேடிக்கொண்டு கோவிலத்திற்கு வந்திருந்தாள்!'' என்றார் அவர்—

இதைக் கேட்ட கிளாரா உதயனின் முகத்தைப் பார்க்க,

''பரவாயில்லை... அவர்களுக்கு நான் சமாதானம் சொல்லிக் கொள்கிறேன்'' என்றான் அவன்—

''இன்று இரவு நீங்கள் இங்கே வரவேண்டியிருக்கும்'' என்று திருமேனி. அவர்கள் இருவரிடமும் சொன்னார் அவர்களும் ஒப்புக் கொண்டனர்—

உதயனும் கிளாராவும் ஒன்றாக வருவதைப் பார்த்த ஷைனி அவர்களுக்குள் காதல் ஏற்பட்டு விட்டதாக நினைத்தாள்.

''விக்டர் சித்தப்பா உன் மீது மிகவும் கோபமாக இருக்கிறாள்'' என்றாள் ஷைனி—

''அவருக்கும் கிளாராவுக்கும் சம்பந்தமே இல்லையே, வீணாக ஏன் கோபிக்க வேண்டும் அவர்?'' என்று உதயன் பதில் சொன்னார்.

''அப்படிச் சொல்ல முடியுமா? இப்போது எங்களது கார்டியன் அவர்தானே?''

ஷைனியும், கிளாராவும் மாளிகைக்குச் சென்றனர்.

கேட்டைத் தாண்டும் போது கிளாரா மெதுவாகத் திரும்பிப் பார்க்க உதயன் அவளை நோக்கி புன்னகைத்தான்!

எல்லோரும் போனபிறகு, தம்பிராட்டி உதயனின் அருகில் வந்து

''எனக்கு எல்லாம் தெரியும்!'' என்றாள்.

''என்ன தெரியும்?'' உதயன் சந்தேகத்தோடு கேட்டான்.

''அந்தப் பெண் கோவிலகத்துப் பெண் அல்ல தெரியுமல்லவா?'' தாய் சொன்னாள்.

''எனக்குத் தெரியும்!'' என்று சொன்னவாறே உதயன் தன் அறைக்கு வேகமாகத் திரும்பிவிட்டான்—

ஷைனியும் கிளாராவும் மாளிகைக்குத் திரும்பினார்கள்.

''நீ எங்கே போயிருந்தாய்...? நிஜத்தைச் சொல்'' என்று கேட்டாள் சோபியா. கையில் ஒருபிரம்பு இருந்தது.

''நான் கோவிலகத்தில் இருந்தேன்—''

''அங்கே ஏன் போனாய்? காரணத்தைச் சொல்'' சோபியாவின் கையில் இருந்த தடி ஓங்கப்பட்டது.

''எனக்குத் தெயுயாது''

''ஓ! உனக்குத் தெரியாதா''...நான் கேட்கிறேன்'' என்று சொன்னவாறே விக்டர் அங்கே வந்தார்—

''நீங்கள் கேளுங்கள்'' என்றவாறு பிரம்பை அவர் கையில் கொடுத்தாள் சோபியா.

பிரம்பைக் கையில் வாங்கிய விக்டர், தன் பலங் கொண்ட மட்டும் கிளாராவை அடித்தார். ஆனால் கிளாரா அசையாமல் நின்று கொண்டே இருந்தாள்.

அதைப் பார்த்த விக்டர் மீண்டும் பிரம்பை வேகமாக உபயோகப்படுத்த,

கிளாரா மெதுவாக தலைநிமிர்த்தி அவரைப் பார்த்து லேசாகச் சிரித்தாள்.

''உன் இரகசியங்கள் எல்லாவற்றையும் நான் அறிவேன்'' என்று உணர்த்தக் கூடியது அச்சிரிப்பு என்பதை விக்டர் அறிவார்

இன்னொரு சந்தேகமும் மனதில்... தன் இரகசியங்கள் யாவையும், கிளாரா ஷைனியிடம் சொல்லியிருக்கலாம்—அதனால் ஷைனி அதை வெளியில் சொல்லலாம்!

அதற்குப் பிறகு, விக்டருக்கு அவ்வீட்டில் நிச்சயம் அடைக்கலம் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும்-அடிப்பதை உடனே நிறுத்திவிட்டார்-

மெர்லினைப்பற்றி, சோபியா, விக்டரிடம் திடீரென கேட்டாள்-

''ஞாயிற்றுக்கிழமை நாம் ஆலயத்திற்குப் போன போது அவளது மாமா, அங்கே வந்து, அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டார்.'' என்றார் விக்டர்.

கிளாராவும், ஷைனியும் ஒரே அறையில் படுத்துத் தூங்க ஆரம்பித்தனர்-

அன்றும் அவள் அதே போல் ஷைனியின் அறையில் தான் இருந்தாள்-

ஆனால் அன்று இரவு அவள் உள்ளாட்டில் மனைக்கு அவசியம் போயாக வேண்டும்-

அர்த்த ராத்திரியில், குளத்திலிருந்து சிலையை வெளியே எடுக்க இவள்தான் உதவி புரிய வேண்டும்.

குளத்திலிருந்து பிணம் வெளியே வந்தால், குளத்திற்குள்ளேயே சிலையை, சுத்தம் செய்து விடுவார் திருமேனி.

இரவு மணி பன்னிரெண்டு. கிளாரா மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். மாளிகையை விட்டு வெளியே வந்தவள், அதிவேகமாக ஓட ஆரம்பித்தாள்.

இதைக் கவனித்த விக்டர், அவள் பின்னால் பேசாமல் கோரமாகச் சிரித்தார்!

இந்த சமயம் ஷைனி ஏதோ சப்தம் கேட்டு கண் விழிக்க, கதவு தானாக மூடிக் கொள்வதுதான் அவளுக்குத் தெரிந்தது.

விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தபோது கிளாரா அங்கே இல்லை.

அவள் உதயனைத் தேடிப் போயிருக்க வேண்டும் என்று ஷைனி நினைத்துக் கொண்டாள்—

இருந்தாலும் ஷைனி யாரையும் அழைக்கவில்லை.

திரும்பி வரும் போது பேசிக் கொள்ளலாம் என்று நினைத்தவாறு எழுந்து கதவைத் தாளிட்டுவிட்டு படுக்கைக்கு வந்து படுத்தாள்—

அப்போது அவள் ஒரு காட்சியைப் பார்த்தாள்—

நம்பமுடியாததும், அதிசயமானதுமான ஒரு காட்சி அது!

மூடியிருந்த கதவு பின் இடுக்கின் வழியாக ஏதோ புகை கொஞ்சங் கொஞ்சமாக உள்ளே வந்து, மெதுவாக

அது மனித ரூபமாக மாறியது. வியப்போடு ஷைனி அதைப் பார்த்தாள். அங்கே விக்டர்!

ஷைனிக்கு வியர்த்துக் கொட்டியது... அருகில் வந்த அவர், கொஞ்சங்கூட தயவு தாட்சண்யம் இல்லாமல், அவளது மேலங்கியை பிடித்துக் கிழித்து எறிந்தார்—

எழுந்த அவளைக் கட்டிலின் மீது தள்ளினார். ஷைனி, கோரமான ஒரு உருவத்தை தன் முன்னே பார்த்தாள்—

அதே உருவம் அவள் மீது படர்ந்தபோது அவளது நாசியில் இரத்தவாடை அடித்தது— எங்கே இருந்து வந்தது இரத்தம்? அப்போது கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது, கோவில் மணி அடித்ததுபோல பலமாகக் கேட்டது அவளது காதுகளுக்கு.

# 26

விக்டர் வந்ததைப் போலவே திரும்பிப் போனார்

கிளாரா, உள்ளாட்டில் மனைக்கு வந்து சேரும் போது அங்கே உதயனும், திருமேனியும் காத்துக் கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் மூவரும் குன்றின்மீது உள்ள பகவதி க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தபோது இரவு நடுஜாமம் ஆகியது.

அங்கே இருந்த ஒரு ஆலமரத்தின் கீழே அமர்ந்து ஸ்ரீதரன் நம்பூதிரி ஹோம குண்டம் தயார் செய்து மந்திரம் ஜெபிக்கத் தொடங்கினார்—

பிரம்ம ராட்சக்ஷியைத் தருவிப்பதே அவருடைய லட்சியம்.

அக்னி குண்டத்தில் சமித்துக்களை எறிந்து கொண்டே உக்ரமந்திரங்களை விரைவாகச் சொல்லத் தொடங்கியிருந்த இந்த சமயம் ஷைனியின் அறையிலிருந்து கொண்டு எதைப்பற்றியும் நினைக்காமல் இருந்தார்.

மந்திர உச்சாடனம் அதிகமாக, ஆலமரத்து இலைகளும் நடுங்கின!

சற்று நேரத்தில் கறுத்த, ஆனால் மிகவும் அவலட்சணமான ஒரு உருவம் ஹோம குண்டத்திலிருந்து எழுந்தது.

பயங்கரமான அந்த உருவத்திற்கு திருமேனி உத்தரவிட்டார்

''பகவதி தேவியின் இக்குளத்தின் பவித்ரத்தைக் கெடுக்க யாரோ இதில் பிணத்தைப் போட்டு இருக்கிறார்கள்— யோகினிகளிடம் சொல்லி முதலில் பிணத்தை அப்புறப்படுத்தி, குளத்தை பழையபடி சுத்தமாக்க வேண்டும்''

இதைக் கேட்ட அந்த உருவம், மேலும் சில அடிகள் வளர்ந்து குளத்தின் அருகே சென்றது.

சிறிது நேரத்தில் குளத்தின் தண்ணீர் 'சல சலக்கும் சப்தம் கேட்டது,

உதயன் பார்த்த போது

குளத்திலிருந்த பிணம் தானாக மேலே எழுந்து வடக்கே இருந்த சுடுகாட்டின் பக்கம் போனது- சற்று நேரத்தில் பிணம் போன திசையில் நெருப்பு கொழுந்து விட்டு விட்டு எரிவதைப் பார்த்தார்.

திருமேனி கோவிலுக்குள் சென்று,தேவியின் கழுத்தில் இருந்த மாலையில், இருந்து ஒரே ஒரு பூவைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு தேவியை நோக்கி பிரார்த் தனை செய்தார்—

''தேவி, என் கையில் உள்ள இந்த பூவினால் உலகத் தில் உள்ள சகல அசுத்தங்களும் மாறி சுத்தமாக வேண்டும்— அதே போல் இக்குளமும் சுத்தமாக வேண்டும்!''

இப்படி சொல்லிக் கொண்டே அவர்,பூவை குளத்தில் எறிந்தார்—அந்தப் 'பூ' ஒரு அம்பைப் போல குளத்தின் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு உள்ளே போனது—

சற்று நேரத்தில் குளத்திலிருந்து நெருப்பும், புகையும் தோன்றியது—தண்ணீர் குமிழியிட்டு கொப்பளித்தது— யாரோ கலக்கி விட்டாற்போல் தண்ணீரில் சப்தம்!

அவர்கள் இதைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது எல்லாமே சாந்தமாகி, குளம் அமைதியானது—

''உதயன், குளத்திற்கு அடியில் போய், நீ தேவவதி யின் சிலையை மேலே கொண்டு வரவேண்டும் - உனக்கு மட்டுந்தான் அந்த சக்தியும், உரிமையும் இருக்கிறது. வேறு யாரும் அதைத் தொடக் கூடாது!'

இதைக் கேட்ட உதயன் கிளாராவின் முகத்தைப் பார்த்தான்—

அவளுக்கு திடீரென வெட்கம் வந்து விடவே தலை குனிந்தாள்—

படிகள் வழியாக குளத்தினுள்ளே உதயன் இறங்கி னான்-

குளத்தில் இருந்த சேறும் சகதியும் அவனது இடுப்பு வரை வந்தது—

இருந்தாலும், தனது கால்களை மிகவும் பத்திரமாக எடுத்து வைத்து உதயன் நடுகுளத்திற்கு வந்தபோது சிலை தென்பட்டது.

மெதுவாக அதைத் தூக்கவே, அச்சிலை இவன் மீது சாய்ந்தது.

அதன் பாரம் அதிகமாக இருக்கவே, அவனால் அடியெடுத்து வைக்க முடியவில்லை. மெதுவாக வந்தான் இதைக் கவனித்த திருமேனி, கிளாராவைப் பார்த்தார் அவள் வேகமாக குளத்தின் அருகே சென்று-

உதயனிடமிருந்த சிலையை ஒருபக்கமாகப் பிடித்தாள். இதனால் சிலையின் பாரம் குறைந்து விட்டது.

இருவரும் சிலையை பழைய இடத்தில் ஸ்தாபிதம் செய்தவுடன், தேவவதி, கிளாராவின் உடலில் இருந்து, சிலைக்குள் புகுந்தாள்—

கிளாரா திடீரென அழ ஆரம்பித்தாள்—

''பயப்படாதே கிளாரா...நாங்கள் இங்கே இருக்கிறோம்!'' என்றான் உதயன்—

ஆனால் தேவவதியை அறிந்த அளவுக்கு கிளாரா, திருமேனியை அறியமாட்டாளே!

''நான் எப்படி இங்கே வந்தேன்?'' வியப்போடு அவள் கேட்டாள்-

''அதையெல்லாம் பிறகு சொல்கிறேன்!'' என்று உதயன் அவளை சமாதானப்படுத்தினான்.

ஸ்ரீதரன் நம்பூதிரி தேவவதியை நோக்கி பிரார்த்தனை செய்தார்-

''திரும்பவும் கிளாராவின் உடலுக்குள் நீ வர வேண்டும்.''

அவரது வேண்டுகோளுக்கு தேவவதி உடனே சம்மதித்தாள்-

மீண்டும் அவள் கிளாராவின் உடலில் பிரவேசிக்க எல்லாமே சகஜ நிலைக்கு வந்தது-

மூவரும் இல்லத்திற்குத் திரும்பினார்கள் எல்லாமே நல்ல படியாக முடிந்த திருப்தி அவர்களுக்கு!

கிளாரா அங்கிருந்து உடனே மாளிகையை நோக்கிப் புறப்பட்டாள்.

அவள் படுத்திருந்த அறைக் கதவு அருகே சென்ற போது, அது உள்ளே தாளிடப்பட்டு இருந்தது தெரிந்தது—

கதவை பலமாக அழுத்தித் திறக்க முயற்சித்த போது அது திறந்து கொண்டது தாழ்ப்பாள் உடைந்து போயிற்று—

மெதுவாக அவள் படுக்கை அருகே வந்து ஷைனியை எழுப்பாமல் படுத்தாள்—

காலையில் கிளாரா எழுந்து விட்ட பின் 'ஷைனி'யை அழைத்தாள்—

அவள் எழவில்லை—

போர்வையை நன்றாகப் போர்த்தியபடி அவள் மல்லாந்து படுத்திருந்தாள்—

கண்கள் விழித்தபடியே இருந்தாலும் அதில் அசைவே இல்லை.

போர்வையை கிளாரா அகற்றிய போது ஷைனி நிர்வாணமாகக் கிடந்தாள்—பிணமாக? கிளாரா உடனே அங்கிருந்து ஓடிப் போய் சோபியாவிடம் விபரம் சொன்னாள்...

அலறியபடியே ஓடி வந்த சோபியா, ஷைனியின் பிணத்தைக் கண்டு, கதறி அழ ஆரம்பித்தாள். அவளது மற்ற பெண்களும் அழ ஆரம்பித்தனர் இந்த நேரத்தில் விக்டர் அங்கே வந்தார்—

ஒன்றுமே தெரியாத முகபாவம்!

''என்ன...நடந்தது இங்கே?'' அவரது கேள்விக்கு சோபியாவினால் பதில் சொல்ல முடியவில்லை.

அழுகை அதிகமாயிற்று! போர்வையை அவர் அகற்ற முயற்சித்த போது சோபியா அதைத் தடுத் தாள்—

''யாரோ அவளை கெடுத்த பின், கொலை செய்து இருக்கிறார்கள்'' என்றாள் அவள் அழுது கொண்டே,

''இதுவும் அவனாகத்தான் இருக்கும்—இதை யாரிட மும் சொல்லாமல் இருப்பதுதான் நல்லது...ஏனெனில் அது மற்ற சகோதரிகளையும் பாதிக்கும்!'' என்றார் விக்டர்.

சோபியா, விக்டர் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டாள்—மறு கேள்வி கேட்கவில்லை.

கிளாரா விக்டரைப் பார்த்துக்கொண்டே இருந் தாள்—

இதைக் கவனித்த விக்டரும், அவளை முறைத்துப் பார்த்துக்கொண்டே, கேலியாகச் சிரித்தார்—

ஷைனியின் மரணமும், மிகவும் சாதாரணமான, சாவாகவே கருதப்பட்டது.

'அது ஒரு துரதிஷ்டமான பங்களா' என்று தெரிந்தவர்கள் பேச ஆரம்பித்தனர்—

''முன்பே இங்கே ஒரு பிசாசுதானே குடியிருந்தது. அதனால்தான் இந்தத் தொடர் மரணங்கள்'' என்று பலரும் பல விதமாகப் பேசிக்கொண்டனர்.

ஷைனியின் சவப்பெட்டி ஆலயத்திற்குக் கொண்டு போகப்பட்டது அங்கே நிறைய மக்கள் கூடியிருந்தனர்.

''அங்கே இன்னொரு பெண் இருந்தாளே?'' என்று மெர்லினைப் பற்றி யாரோ கேட்டார்கள்—

''அவளை ஒருநாள் காணவில்லை...அந்த பங்களாவில் என்னவெல்லாமோ இரகசியம் இருக்கிறது'' என்று அதற்கு பதில்.

ஆலமரத்து நிழலில் இன்னொரு நபருடன் பேசிக்கொண்டு இருந்ததை பாதர் காபிரியேல் கவனித்தார்—

விக்டர் உள்ளே வரவில்லை என்பதை பாதிரியார் அறிந்தார்—

சகல சடங்குகளும் முடிந்து, சவத்தை அடக்கம் செய்தபின், விக்டரும் அங்கிருந்து போனார்—

ஆனால் உதயன், பாதிரியாருக்காகவே காத்திருந்தான்—

''இந்தச் சாவுக்கும் அவன்தான் காரணம்!'' என்றார் பாதிரியார்—

''எனது எண்ணமும் அதுதான் பாதர்.'' என்றான் உதயன்—

"இந்த விஷயத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நம்மால் முடியாது—ஏனெனில் நடவடிக்கை எடுக்கச் சொல்லி யாரும், அந்த மாளிகையில் கேட்கக்கூடியவர் கள் இல்லை—நம்மிடம், விக்டர் ஒரு பயங்கர மனிதன் என்று காட்ட நம்மிடம் ஆதாரம் எதும் இல்லை—" என்றார் பாதிரியார்.

"இப்படியே போனால்...?" உதயன் கேட்டான்—

"உன் நண்பர் உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரி என்ன சொன்னார்? '

"அவரும் போராடிக் கொண்டேதான் இருக்கிறார்- ஆனால் விக்டரின் சக்தி அதிகமாகிக் கொண்டே போகிறது..."

"இதே நிலையில் போனால், அந்தக் குடும்பத்தினர் ஒவ்வொருவராக அவனுக்கு பலியாகியே தீருவார்கள்"

"நான் திருமேனியைச் சந்தித்து, அடுத்தபடியாக என்ன செய்வது என்று யோசிக்கிறேன்-" என்றான் உதயன்-பிறகு அங்கிருந்து புறப்பட்டான்.

குன்றின் மீது உள்ள தேவி பகவதியின் சனி திசை மாற இன்னும் சில தினங்களே உள்ளன. அதற்குள் தேவியின் சக்தியை இன்னமும் குறைக்கவேண்டும்— இதுதான் விக்டரின் லட்சியம்!

அதனால் விக்டர் கோவிலை நோக்கி புறப்பட்டார். அங்கே தேவவதியின் சிலை பழைய இடத்திலேயே இருந் ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டார்—

"இந்த இரவு நீ இங்கே இருக்கமாட்டாய்!" என்று தேவவதியின் சிலையைப் பார்த்து சொன்னார்-

அப்படி சொன்னாலும், அதற்கு அர்த்தம் வேறாக இருந்தது.

# 27

அன்று இரவு மேல்பத்தூர்காவில் உற்சவம் தொடங்கியது—

தேவியும், துவாரபாலகிகளும் கட்டாயம் அங்கே போகவேண்டும்!

இந்த வேளையில் கிளாராவின் உடம்பில் தேவவதி இருக்கமாட்டாள்!

அப்போது அவளை பலாத்காரம் செய்து கெடுத்து விட்டால், தேவவதிக்கு அவள் உடம்பு பலன்படாது!

அப்படி ஏதும் நடந்துவிட்டால், மாளிகையில் உள்ள யாருக்கும் இவருடைய செயல்கள் தெரியவே தெரியாது.

அதற்குப்பின் ஒருவர்பின் ஒருவராக தீர்த்துக் கட்டுவது மிகவும் சுலபம்!

மெர்லின் என்னும் யட்சி மீண்டும் திருமேனியின் பிடியில் அகப்பட்டுக் கொண்டாள் என்பதை விக்டர் தெரிந்து வைத்திருந்தார்.

இப்போது இருக்கும் நிலையில் அவளை அங்கிருந்து விடுவிக்க முடியாது!

விக்டர், ஏதாவது, ஏடாகூடமாகத் செய்து வருவார் என்று உதயனுக்கும், திருமேனிக்கும் மனதில் சந்தேகம்.

இருள் பரவ ஆரம்பித்தது.

உள்ளாட்டில் மனையில் கோயிலில் நிலவிளக்கு ஏற்றப் பட்டது.

விளக்குப் பக்கத்தில் ஏதோ சலனம் தெரிய திருமேனி அங்கே பார்த்தார்.

ஒரு தங்க நிறமான சிறிய பாம்பு நெளிந்து கொண்டு இருந்தது அவரது கண்களில்பட்டது திருமேனியின் கண்கள் தன்மீது விழுந்துவிட்டது என்பதை கவனித்த அப்பாம்பு வாரந்தாவின் பக்கமாகப் போய்விட்டது.

திருமேனி அதன் பின்பக்கமாகப் போனார். உள்ளே சென்ற பாம்பு ராசிப் பலகையின் மீது சுற்றிக் கொண்டது.

சோழிகளை எடுத்து அவர் அந்த பாம்பின் மீது எறிய அது உடனே அங்கிருந்து மறைந்து விட்டது.

சோழிகளை ராசிப்பலகையில் வைத்துப் பார்த்த போது, அது குன்றின்மீது உள்ள பகவதி கோவில் தெரிந்தது.

''என்ன காரணம் இதற்கு?'' திருமேனி யோசித்தார். அப்போதுதான் அவருக்கு மேல்பத்தூர்காவில் நடக்கும் பத்து தின உற்சவம் ஞாபகத்திற்கு வந்தது!

அந்த சமயத்தில் தேவியும் துவாரபாலகியும் உற்சவத் திற்குப் போவார்கள்! காவலுக்கு வெறும் பூதகணங்கள் மட்டுந்தான் அங்கே இருப்பார்கள்.

அவர்களை அப்புறப்படுத்தும் சக்தி விக்டருக்கு உண்டு.

தேவவதி அங்கே இங்கே போனால் இங்கே கிளாரா விற்கு சக்தியிருக்காது.

இதைப் போன்ற பல விஷயங்கள் திருமேனியின் மனதை அலக்கழித்தன!

உடனே திருமேனி, உதயனை இங்கே வரவழைக்க ஒரு ஆந்தையின் மூலம் ஓலை ஒன்றைக் கொடுத்து அனுப்பினார்—

உதயன், சந்தியாவனம் முடித்துவிட்டு வராந்தாவில் அமர்ந்திருந்த போது, ஆந்தை அங்கே பறந்து வந்து ஓலையை துளசி மாடத்தின் அருகே போட்டது. அதை எடுத்துப் படித்த உதயன் உடனே இல்லத்திற்குப் புறப் பட்டார்.

அங்கே திருமேனி பதட்டத்துடன் காத்துக் கொண்டு இருந்தார்—

''நான் உன்னை இங்கே வரவழைத்தது, ஒரு முக்கிய மான காரியத்தைச் சொல்லத் தான்! இன்று மேல்பத்தூர் காவில் உற்சவம் ஆரம்பம்... தேவியும், துவாரபாலகி களும் அங்கே போவார்கள்- உற்சவம் முடியும் நேரத்தில் தேவியின் கஷ்டகாலமும் தீர்ந்து விடும்''

ஏதோ யோசனை செய்து கொண்டே திருமேனி பேச்சை நிறுத்தினார்—எழுந்து வெளியே போனார்—கறுப்பு நிற நிழல் ஒன்று திடீரென மறைவதைக்கண்டார். தென்பக்கம் அந்த ரூபம் போவதை உதயனும் கவனித் தான்—

''இது அவன்தான்!'' என்றார் திருமேனி—

''அந்த நபர் இங்கேயும் வருவாரா?'' உதயன் வியப் போடு கேட்டார்.

''வேறு யாரிடமாவது சொல்லி விட்டால்...அது தோல்வியாக மாறலாம்...அதனால்தான் அவனே இங்கு புறப்பட்டு வந்திருக்கிறான்! அவனை இங்கே பார்த்ததும் நல்லதாகவே போய்விட்டது'' என்றார் திருமேனி—

இன்றையிலிருந்து அவன் தன் முழுசக்தியையும் பிர யோகித்து, தனது தடைகளை ஒதுக்க மிகவும் மூர்க்கமாக முயற்சிப்பான்— இது இவர்களுக்கும் ஜீவமரண போரட் டந்தான்! இப்படி தன் மனதில் தோன்றியது திருமேனி உதயனிடம் விரிவாகவே சொன்னார் அப்போது மணி எட்டு—

நடு இரவு தொடங்க இன்னமும் நான்கு மணி இருக் கிறது—

நடுஇரவில்தான் உற்சவமும் ஆரம்பிக்கும் அதற்கு சில வினாடிகளுக்கு முன்பே தேவியும் தோழிகளும் அங்கே போய் விடுவார்கள்— இந்த மாற்றத்தை விக்டரும் அறி வார் அதனால் மூன்று மணி நேரத்திற்குள் ஏதாவது பரிகாரம் செய்து ஆகவேண்டும்—

இல்லாவிடில் கிளாராவை அவன் நாசப்படுத்தி விடுவான் -

கிளாரா இல்லாவிடில் அவன் மாளிகையில் என்ன வேண்டு மென்றாலும் செய்யலாம்!

''நாம் உடனே ஆலயத்திற்குச் சென்று பாதிரி யாரை பார்க்க வேண்டும்! என்றார் திருமேனி-

இந்தமாதிரி நேரத்தில் ஒத்த கருத்துள்ளவர்கள், அறிவுள்ளவர்கள் ஆகியோரின் சகாயத்தைத் தேடுவது நல்லது என்பது திருமேனி அறிவார்.

''பூஜை முடித்து விட்டு வந்தவுடன் நாம்புறப்படலாம்' என்று சொன்ன திருமேனி பூஜைசெய்யப் போனார் - போகும் போது, பாமாவின் ஆத்மாவை பிரயோகித்து வைத்திருந்த சிறிய வெங்கலச் சிலையையும் அவர் தன்னுடன் எடுத்துக் கொண்டு போனார்-

சுமார் ஒன்றரை மணி நேரம் அவர் பூஜை செய்து விட்டு வெளியே வரும் போது, சிலை அவரது கையில் இல்லை.

இருவரும் ஆலயத்திற்குப் புறப்பட்டனர் அப்போது பாதிரியார் ஒரு பெரிய கிரந்தத்தைப் படித்துக் கொண்டு இருந்தார்-வெளியில் காலடி சப்தம் கேட்டவுடன் பாதர் கதவைத் திறந்தார்-

''உள்ளே வாருங்கள்... உங்களைப் பற்றித்தான் நான் நினைத்துக் கொண்டு இருந்தேன்'' என்றார் காபிரியேல்.

''எங்களைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது?''

''நீங்கள் இருவரும் உட்காருங்கள் சொல்கிறேன்''

இருவரும் அமர்ந்தனர்.

ஸ்ரீதரன் நம்பூதிரிக்கு பாதர் மிகுந்த மரியாதை கொடுத்தார்.

திருமேனி இதைப் போன்று ஆலயத்திற்கு வருவது இது முதல் தடவை—

ஒரு நம்பூதிரியும் —பாதிரியாரும் சந்திப்பது இது தான் முதல் தடவை!

பாதர் அவர்கள் எதிரில் அமர்ந்தார்

''நம்ம இடத்தில் புதிதாக ஒரு மனிதன் வந்து இருக்கிறான் இது திருமேனிக்கும் தெரியும்!''

''ஆமாம்!எனக்கும் தெரியும்...அவன்ஒரு அசாதாரண மனிதன் ' என்றார் திருமேனி—

''அவர் எங்கிருந்து வந்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரிந்தவரை, நடந்திருப்பது ஒரு அதிசயமான காரியம்'' அந்த சரீரத்தின் சொந்தக்காரன் விக்டர் என்பவன் அதனால் எல்லோரும் அவனை விக்டர் என்றே அழைக்கிறார்கள்—

ஆனால் அவன் விக்டரே அல்ல!

அவன், யூதா என்னும் மாந்திரீகனின் ஆத்மாவிற்கு தன் உடலை அர்ப்பணித்து இருக்கிறான்! சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் அவன் பெயர் யூதா!''

இதைச் சொன்ன திருமேனி சுருக்கமாக யூதாவின் பழைய கதையை பாதர் காபிரியேலிடம் சொன்னார்.

''அவன் விக்டரின் உடலில் புகுந்ததை கிளாரா என்னும் பெண் பார்த்திருக்கிறாள்'' என்றதிருமேனி,

கிளாராவின் சரித்திரத்தையும் சுருக்கமாகச் சொன்னார்.

''அவளை நான் பார்த்திருக்கிறேன்... இன்னொரு பெண்ணும் அவளுடன் இருந்தாளே! அவள் எங்கே?''

''அவள் ஒரு யட்சி... அவளை நான் கட்டிப் போட்டு இருந்தேன்... விக்டர் அவளுக்கு ஆதரவு கொடுத்து விடுவித்தான்! இருந்தாலும் அவளை நான் மீண்டும் என் பிடிக்குக் கொண்டு வந்து விட்டேன்''என்றார் திருமேனி,

இருவரும்எல்லா விஷயங்களையும்தெரிந்து கொண்ட பின்னர், அடுத்து என்ன செய்வது என்பதைப்பற்றி யோசிக்கத் தொடங்கினார்கள்—

''பாதருக்கு அதாவது ஏதாவது வழி தோன்றுகிறதா? திருமேனி கேட்டார்.

''அவனால் தேவாலயத்திற்குள் வரமுடியாது! அப்படி மீறி அவன் இங்கே வந்தால், அது அவனது நாசத்திற்கு அடிகோலும் அதனால் நான் ஒரு உபாயம் சொல்கிறேன்' என்று காபரியேல் தன் மனதில் நினைத்த யோசனையை அவர்களிடம் சொன்னார்.

''நாளைஞாயிற்றுக்கிழமை...காலை பிரார்த்தனைக்கு வேறு ஒரு பாதிரியாரை வரச் சொல்லி இருக்கிறேன்''

அத்துடன் நாளை இரவு இங்கே பாட்டுக்கச்சேரியும் நாடகமும் நடக்க ஏற்பாடு செய்துள்ளேன்.

இதைப்பார்க்க நான் விக்டரையும், அந்தக்குடும்பத் தாரையும் அழைத்திருக்கிறேன் அத்துடன் சோபியா, விக்டர் குழந்தைகள் எல்லோருக்கும் சர்ச்சில வேலை களைக் கொடுத்துஇருக்கிறேன். அப்போது நான் சொன்ன காரியத்தை அழகாக முடிக்கலாம்! திருமேனி ஒருபகுதியை நான் சொல்வதைப் போல் செய்தால் போதும்!''

பாதர் காபிரியேல் சொன்ன யோசனையும், நடவடிக் கைகளும் திருமேனிக்கு மிகவும் பிடித்திருந்தது. எல்லா மாந்திரீக தந்திரங்களையும் நன்றாகக் கரைத்துக் குடித்த வன்தான் யூதா என்பதையும் திருமேனி அறிவார்.

அதனால் அவரும் பாதரும் ஒரே வழியில் வேலை செய்தால் அவனை நாசம் செய்ய முடியும் என்பதை திருமேனி தெரிந்து கொண்டார்.

''விக்டர் மணியைப் பார்த்துக் கொண்டே படுத் திருந்தார்.

பன்னிரெண்டு மணி அடித்தது—

மேலும் ஒரு பதினைந்து நிமிடங்கள் கழிந்த பின் அவர் எழுந்தார்.

கிளாரா படுத்திருந்த அறைதான் அவரது லட்சியம்!

யூதா கதவைத் திறக்காமலேயே உள்ளே நுழைந்தார்.

கிளாரா கட்டிலில் படுத்திருந்தாள்—

விக்டரின் போர்வையில் இருந்த யூதா அருகில் போய் அவள் போர்த்தியிருந்த போர்வையை அகற்றி விட்டு, அவள் அணிந்திருந்த மெல்லிய நைட்டியைக் கிழித்து எறிந்தார்.

அவள் பயந்துவிட்டதைப் போல் படுத்திருந்தாள். யூதா அவளை எட்டிப் பிடித்தார்.

அவரது முகம் அவலட்சணமாகியது—

அதைப் பார்த்த அவள் பலமாகக் கூச்சலிட்டாள். யூதா அவளது வாயைப் பொத்தினான்!

இந்த சமயம், அவனது கழுத்தில் கிடந்த மாலை கழன்று அவள் மீது விழுந்தது.

# 28

கிளாராவின் மீது விழுந்த அந்த அற்புதமான மாலை அவளது உடலுக்குள் போய்விட்டது. அப்போது அந்த மாலை சிவந்த நிறத்துடன் இருந்தது—

அவளுடைய முகம் கொஞ்சங் கொஞ்சமாகமாறிக் கொண்டு வந்தது—

கிளாராவின் முகத்திற்குப் பதில், அங்கே பாமா என்கிற யட்சியின் முகம்தான் இருந்தது—

இந்த சமயத்தில் உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரியின் மாந்திரீக வித்தை வேலை செய்ய ஆரம்பித்தது—

அன்று இரவு அவர் வெண்கலச் சிலையில் அடங்கி யிருந்த பாமா என்கிற யட்சிக்கு அங்கிருந்து வெளி யேறவும், தான் சொன்னபடி கேட்கவும் சக்தி அளித் திருந்தார்.

அவள் பங்களாவிற்கு வந்ததும், கிளாராவை கோவிலகத்திற்கு அனுப்பிவைத்துவிட்டு அவள் இடத்தில் இவள் இருந்து கொண்டாள்,

பாமாவைக் கண்டதும், விக்டர் அங்கிருந்து துள்ளி எழுந்து அறையை விட்டு வெளியேறினார்' கிளாரா எங்கே இருக்கிறாள் என்று அவருக்குத் தெரியவில்லை.

மாலை கழுத்தை விட்டுப் போனாலும், அவர் பழைய யூதா தானே?

இதனால் அவர் திருப்தி பட்டுக் கொண்டார்.

தேவவதி இருக்கும்போது கிளாரவைத் தொட்டுக் கெடுக்கக் கூடிய சக்தி அம்மாலைக்கு இருந்தது—

அடுத்த நாள் காலை கிளாராவை அவர், மாளிகை யில் எங்கும் காணாததால், அவருக்கு பயங்கரக் கோபம் வந்தது!

அவர் கிளாராவைப் பற்றி எல்லோரிடமும் விசாரித்தார்—

"அவள் போனால் போகட்டும் விடுங்கள்—

மா அட்டையை மெத்தையில் படுக்க வைத்தாலும் அது தூங்குமா?'' என்றாள் சோபியா கோபமாக,

ஆனால் விக்டரைப் பொறுத்தவரைக்கும் அவள் வந்துதான் ஆகவேண்டும்!

இல்லாவிடில் அவள் எங்கே போவாள்?

எந்த நேரமானாலும் கிளாரா இந்த மாளிகைக்குத் திரும்ப வேண்டியவள்தானே?

ஞாயிற்றுச்கிழமை எல்லோரும் ஆலயத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்! அன்று ஷைனிக்காக ஒரு பிரார்த்தனைக்கும் ஏற்பாடு ஆகியிருந்தது.

விக்டர் ஆலயத்திற்குப் போகாமல் இருக்க என்னென்னவோ சாக்குபோக்குகள் சொல்லிப்பார்த்தார்-

ஆனால் சோபியா எதற்கும் மசிந்து கொடுக்க வில்லை. விக்டரை இழுத்துக் கொண்டு போனாள்—அதுதான் உண்மை!

ஆலயத்திற்கு வந்த அவரை;பாதர் காபிரியேல் தன் அறைக்குள் அழைத்து உட்காரவைத்தார்.

''இன்று இங்கு பல வேலைகள் நடக்க இருக்கின்றன. அதில் சில வற்றை நீங்களும் பொறுப்பு ஏற்று நடத்தித் தரவேண்டும் என்பதே என் விருப்பம்... இன்று இரவு ஆலயத்தில் ஒரு பாட்டுக் கச்சேரியும், நாடகமும் நடக்க இருக்கின்றன... நாடகத்திற்கான கதை பைபிளில் இருந்து எடுத்தவை...

சோபிக்கும், அவளது பெண்களுக்கும் சில வேலை களைக் கொடுத்து இருக்கிறேன்'' என்று பாதிரியார் சொல்லிக் கொண்டே போக, அதை விக்டரால் மறுக்கவே முடியவில்லை. ஒப்புக் கொண்டார்,

பகலில் ஆராதனை முடிந்தபின் அவர்கள் வீட்டிற்குத் திரும்பிய போதும், கிளாரா வீட்டிற்கு வந்து இருக்க வில்லை.

விக்டர் அதைப்பற்றி சொல்லியபோதும், சோபியா அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

சாயங்காலம் ஆலயத்தில் விசேஷங்கள் ஆரம்பிக்கப் படும்போது மணி ஏழு!

விக்டர் எதிலும் அக்கறை காட்டாதவராக, மரத் தடியில் நின்று கொண்டு இருந்தார்—அதைக் கவனித்த பாதர் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போடச் சொன்னார்.

விசேடங்கள் ஆரம்பமானவுடன், புதிதாக வந்திருந்த பாதிரியார், விக்டரின் அருகில் வந்து அமர்ந்தார்.

சோபியாவும், அவளது பெண்களும் மேடைக்குப் பக்கத்திலேயே அமர்ந்து இருந்தனர்—

எல்லா கோலாகலங்களும் முடிய இரவு பதினோரு மணி ஆயிற்று. எல்லோரும் வீடு திரும்பினர்.

''பாதிரியார் காபிரியேல் எங்கே?'' விக்டர் புதிய பாதிரியாரிடம் கேட்டார்—

''அவர் இங்கே எங்காவது இருக்கலாம்...அவரிடம் நான் சொல்லிக் கொள்கிறேன்...நீங்கள் போய் வாருங் கள்'' என்று அவர் இவர்களை அனுப்பி வைத்தார்.

இவர்கள் மாளிகைக்குத் திரும்பிய போது சற்று தூரத்திலிருந்தே பார்த்த சமயத்தில் மாளிகையில் வெளிச் சம் தெரிந்தது—

''விளக்கை அணைத்து விட்டுத்தானே வந்தோம்? எப்படி அங்கே இவ்வளவு பிரகாசமாக விளக்குகள் எரிகின்றன?'' எல்லோருக்கும் வியப்பு அவர்கள் பங்களாவை நெருங்கி வந்து பார்த்த போது முதலில் இருந்த வரவேற்பு அறையில்தான் அதிகமாக வெளிச்சம் தெரிந்தது மேலும் சாம்பிராணி வாசனை மூக்கைத் துளைத்தது.

உள்ளே பார்த்த அவர்கள் திகைத்துப் போனார்கள். ஒரு மாதா கோவிலின் உட்பகுதி எப்படி இருக்குமோ அப்படி அலங்கரிப்பட்டு இருந்தது அந்தப் பெரிய அறை!

அக்காட்சியைப் பார்த்த விக்டர் திடுக்கிட்டார். பெரிய கதவின் அருகில் பிரார்த்தனை மேடை அலங்கரிப்பட்டு இருக்க, அதன் நடுவே இயேசுவின், மாதாவின் ரூபங்கள்! அவைகள் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்டவை!

அறையில் நாலு பக்கமும் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டதால் பிரகாசமாக இருந்தது அறை! மேடையில் நடுநாயகமாக பாதர் காபிரியேல் பிரார்த்தனை வஸ்திரங்களை அணிந்து கொண்டு கம்பீரமாக நின்றார்.

அவர் விக்டரைப் பார்த்தவுடன்.

''உள்ளே வாருங்கள் விக்டர்!'' என்றார் பாதிரியார்.

விக்டர் இதைக் கேட்டவுடன் முகம் வெளிற நடுங்கிப் போனார்—

''இது ஆலயந்தான் நான் இந்த இடத்தைப் பரிசுத்தப்படுத்தியிருக்கிறேன்—திருக்கோவிலில் இருந்து திருவாபரணங்களையும் இங்கே கொண்டு வந்து இருக்கிறேன்—அங்கே ஆலயத்திற்குள் வர உங்களுக்குக் கூச்சம்... அதனால் இங்கே புதிய ஆலயத்தையே உங்களுக்காக உருவாக்கி இருக்கிறேன்!'' என்றார் அவர்—சோபியாவுக்கும், அவளது பெண்களுக்கும் ஏதும் புரியவில்லை.

பாதர் சொன்னதைக் கேட்டு விக்டர் அசையாமல் நிற்க, பாதருக்குக் கோபம் வந்தது.

''டேய் யூதா, படியேறி உள்ளே வா!'' என்று அவர் கத்தினார்.

''என்ன இது?'' சோபியா புரியாமல் கேட்டாள்.

''அவனுக்குத் தைரியம் இருந்தால், இந்த தேவாலயத்திற்குள் வர முடியுமா என்று கேள்!'' சோபியாவுக்கு பதில் சொன்னார் பாதிரியார்.

சோபியா விக்டர் பக்கம் திரும்பினாள்.

''விக்டர்...என்ன இது? பாதர் சொல்வது உன் காதில் விழவில்லையா? நீ உள்ளேபோ!'' என்றாள்—

விக்டரின் முகம் கோபத்தினால் பயங்கரமாகச் சிவந்தது—

கை முன்னே நீட்டினார்—

அவை நெருப்பாக ஜுவலித்தன!

உள்ளே போக, தனது வலது காலை எடுத்து வைக்க, உடல் வியர்த்தது—

''உள்ளே வா!'' கையை நீட்டினார் பாதிரியார்! வலது கால் படியில் வைத்தவுடன், இடது காலையும் மெதுவாக எடுத்து படியில் வைத்தார்—

அச்சமயத்தில் அவர் உடல் நடுங்கியது

''உள்ளே வா!'' பாதர் நிர்பந்தம் செய்தார். வலது கால் உள்ளே எடுத்து வைக்க முயன்ற போது உடம்பின் மீது நெருப்பை அள்ளிக் கொட்டியதுபோல துடித்தார் அவர்—

பின்னால் தானாகவே நகர்ந்தது அவரது உடல்.

''கால்கள் நடுங்குகின்றன...உடலில் ஏதோ மாறுதல் பாதர் இங்கே வந்து என் கையைப்பிடித்து அழைத்துப் போக முடியுமா?''விக்டர் கேட்டார். அவரது எண்ணம் என்ன என்பதை அவரது கண்களைப் பார்த்த போதே பாதிரியார் அறிந்து கொண்டார்.

தேவாலயம் போல் உள்ள இந்த அறையிலிருந்து வெளியே வந்தால், அவன் தன் பலத்தினால் பாதிரியாரை யும் மற்றவர்களையும் கொன்றுவிடுவான்—விக்டரின் இரகசியம் யாருக்கும் தெரியாது!

பாதர் ஒருபடி இறங்கியவர், இதனால் மனதை மாற்றிக்கொண்டு, புனித ரொட்டித்துண்டு ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு பழையபடி பிரார்த்தனை மேடைக்கே வந்து நின்றார்—பிறகு மெதுவாக இறங்கி கதவருகே வந்து நின்றார்—

''என் கையைப் பற்றிக்கொள்!'' என்று தன் கையை வெளியே நீட்டினார். விக்டர் கையைப் பார்த் தார்—பாதரின் கை கதவுக்கு வெளியே வந்திருந் தது— அதனால் விக்டர் ஒரு அடி முன்னால் வைத்து பாதரின் கையைப்பற்றி. அவரை வெளியே இழுத்துவிட வேண்டும் என்பது அவரது எண்ணம்!

விக்டர் பாதர் காபிரியேலின் கையைப் பிடித்து இழுக்க முயற்சித்தபோது, அடுத்தநிமிடம் விக்டர் வேகமாக உள்ள குப்புற விழுந்தார்.

அவருக்குப் பின்னால் இருந்து உள்ளாட்டில் ஸ்ரீதரன் நம்பூதிரி அவனைத்தள்ளிவிட்டார்.

அவரது கையில் தேவி சேஷத்திரத்தில் இருந்து கொண்டுவந்த பூஜிக்கப்பட்ட வாள் இருந்தது!

விக்டர் விழுந்தவுடன்தான் காபிரியேல் நம்பூதிரி வெளியே நிற்பதைக்கண்டார், உடனே அவர் விக்டரின் மீது பரிசுத்த ஜலத்தைத் தெளித்து. ஒரு சிலுவையை வரைந்தார்.

கையிலிருந்த வாளை, விக்டரின் முதுகில் வைத்தார்—

விக்டர், அதிபயங்கரமான ஒரு சப்தத்துடன் அலறினார்—

இந்தசமயம் உதயனும், கிளாராவும் உள்பட நிறைய மக்கள் கூடியிருந்தனர்.

தன் கையில் இருந்த வாளால் விக்டரின் உடலைத் திருப்பிப் போட்டார்.

அவரது முகம் மாறி இருக்க சதை பகுதிகள் காணாமற்போயின—

இதுவரையிலும் யாரும் பார்க்காத யூதாவின் முகம் அங்கே தெரிந்தது—உடல் எலும்புக்கூடானது.

உடலில் இருந்து புகை வெளியே வர, யூதாவின் ஆத்மா குடியேறியிருந்த விக்டரின் உடலில் சிறிது

நேரத்தில் சாம்பலானது—அங்கே வேகாமல் இருந்தது அவர் அணிந்து இருந்த ஆடைகளில் சில பகுதியே!

கிளாரா, சோபியாவிடமும் மற்றவர்களிடமும் எல்லா பழைய கதைகளையும் சொன்னாள், தேவியின் சக்தி திரும்ப வந்ததால்தான் இவ்வளவும் நடந்தது—

கோவிலகத்து உதயனும், கிளாராவும் மணந்து கொண்டனர்.

கோவிலகத்தை நாசம் செய்ய வந்த யூதாவை அழித்ததில் பெரும் பங்கு கிளாராவிற்கு உண்டு!

சோபியாவும், பெண்களும் அந்த பங்களாவில் குடியிருக்கவில்லை. அதை இடித்து புதிய வீடு கட்டியபிறகே அவர்கள் அங்கே குடியேறினர் அத்துடன் அந்த பயங்கர சம்பவத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

(முற்றும்)

மேலும் மின்நூல்களுக்கு

www.tamilnesan1981.blogspot.in